# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 19 சனிக்கிழமை (03-01-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:31


# தரித்து நின்ற ஹெலி ஷெல் தாக்கி அழிவு!

## 2 விமானிகள், 6 படையினர் காயம் ஒலுமடு முகாமில் நேற்று சம்பவம்

கொழும்பு, ஜனவரி 3

ஒலுமடு இராணுவ முகாமில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தரையிறங்கி உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று புலிகளின் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி பெரும் சேதமடைந்தது. ஹெலியின் இரு விமானிகள் உட்பட எட்டுப் படையினர் காயமடைந்தனர்.

ஹெலி பெரும் சேதம் அடைந்ததை படை வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தின.

மாங்குளத்துக்கு கிழக்கே - கனகராயன் குளத்துக்கு மேற்கே - அமைந்துள்ள ஒலுமடு முகாமிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா விமானத்தளத்தில் இருந்து அரிசி மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றி வந்த எம். ஐ. 17 ரக ஹெலி ஒலுமடு இராணுவ முகாமில் தரையிறங்கி அந்தப் பொருள்களை இறக்கிக்கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் புலிகள் அந்த முகாம் மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலிலேயே அந்தக் ஹெலி சேதமடைந்தது. புலிகளின் ஷெல் பட்டதும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் தாக்குதலுக்கு புத்தாண்டில் 7 படையினர் பலி!

### இருபது துருப்புகள் காயம்

கொழும்பு, ஜன. 3

வன்னியில் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட துருப்புகள் மீது புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் இரு வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அன்று அதிகாலை கனகராயன் குளம் பகுதியில் அமைந்துள்ள படையினரின் நிலைகள் மீது புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அன்று மாலை 3.45 மணியளவில் மாங்குளத்துக்குக் கிழக்கே ஒலுமடுவில் அமைந்துள்ள இராணுவத்தினரின் முக்கிய தளம் மீது ஷெல் தாக்குதலை புலிகள் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் 7 படையினர் உயிரிழந்தனர்; 20 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் ஹெலிகள் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(உ-21-3)

## கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். நேற்று வழக்கு தாக்கல்

கொழும்பு, ஜன. 3

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தங்களது கட்சிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய இரு கட்சிகளும் நேற்று கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தன.

சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்தின இந்த மனுக்களை நேற்று நண்பகல் தாக்கல் செய்தார்.

நீதிமன்ற விடுமுறை இம் மாதம் 7 ஆம் திகதியுடன் முடிவதால் அனேகமாக 8 ஆம் திகதி இந்த மனுக்கள் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவு அத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்ட உள்ளூராட்சிச் சபைத்தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழு ஆகியவற்றின் செயலாளர்கள் சட்டமாஅதிபர் ஆகியோர் இந்த வழக்குகளில் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ். மாநகரசபை, வலி. வடக்கு பிரதேசசபை ஆகியவற்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த மனுக்களும்—

ஊர்காவற்றுறை, வலி. வடக்கு, சாவகச்சேரி, வடமராட்சி தென். மேற்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேச சபைகளுக்கு ஈ. பி. ஆர் எல். எவ். தாக்கல் செய்த மனுக்களுமே நிராகரிக்கப்பட்டிருந்தன.

அதனை ஆட்சேபித்தே நேற்று வழக்குகள் தாக்கல்

(10ஆம் பக்கம் பார்க்க)

6 ஆம் திகதி செவ்வாயன்று நிகழும் வியாழ மாற்றம் இராசி பலன்கள் உள்ளே!

## செய்திச் சாரம்

### களுவாஞ்சிக்குடியில் புலிகள் சூடு!

மட்டக்களப்பு, ஜன. 3

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் உள்ள களுவாஞ்சிக்குடி பொலிஸ் சோதனை நிலையம் மீது நேற்று நண்பகல் 1.45 மணியளவில் ஓட்டோவில் வந்த விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார்.

அதே சமயம், கடந்த வியாழன் நண்பகல் கல்முனை ஆரையம்பதியில் நேரம் குறித்து வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்தது. ஆனால் சேதம் பெரிதாக ஏற்படவில்லை. (உ-21-3)

### மூதூரில் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜன. 3

திருகோணமலை மாவட்டம் மூதூர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மூதூர் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் காவல் பணியில் ஈடுபட்டு விட்டு வீடு திரும்பும் வழியிலேயே அவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (உ-21-3)

### பிரித் ஓதிய பிக்கு காயம்

மட்டக்களப்பு, ஜன. 3

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா இராணுவ முகாமில் புத்தாண்டு தினத்தன்று இரவு புத்தபிக்குகள் பிரித் ஓதிக் கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் அந்த முகாம் மீது ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். பிக்குமாரில் ஒருவர் காயமடைந்தார். (உ-21-3)

### இத்தாலிக் கடலில் தத்தளித்த 100 இலங்கையர்

கொழும்பு, ஜன. 3

இத்தாலியின் ஒட்லண்ட் துறைமுகத்துக்கு அப்பால் படகு ஒன்றில் தத்தளித்த நிலையில் இலங்கையர், குர்டிஷ்கள் உட்பட 386 பேர் மீட்கப்பட்டனர், அவர்களில் சுமார் நூறு பேர் இலங்கையர் எனத் தெரியவந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### புலிகளிடம் சிக்கிய சிப்பாய்

கொழும்பு, ஜன. 3

மட்டக்களப்பு மாவடி வேம்பு இராணுவ முகாமில் இருந்து தப்பி ஓடிய இராணுவச்சிப்பாய் ஒருவர் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் இச்சிப்பாய் படை முகாமில் இருந்து தப்பி ஓடியதாகத் தெரியவந்தது. (உ-3)

### தமிழ்க் கட்சிகளுடன் அமெ. பிரதிநிதிகள் செவ்வாய் சந்திப்பு

கொழும்பு, ஜன. 3

இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஆராய இலங்கை வரும் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவுக்கும் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் எதிர்வரும் 6 ஆம் திகதி சந்திப்பு இடம்பெறவிருக்கிறது.

இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர். (உ-3)

### ஓட்டமாவடியில் முஸ்லிம் வாலிபர் கிரனேட்டுடன் கைது!

மட்டக்களப்பு, ஜன. 3

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் நேற்றுக் காலை சபீர்டீன் என்ற முஸ்லிம் வாலிபர் கிரனேட்டுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

### கைகலப்பில் சார்ஜன்ட் பலி! 4 பொலிஸார் காயம்

கொழும்பு, ஜன. 3

புதுவருடப் பிறப்பை ஒட்டி அம்பலாந்தோட்டை பொவான என்னும் இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சி ஒன்றில் பொலிஸ் கோஷ்டிக்கும், மற்றொரு கோஷ்டிக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார், 4 பொலிஸார்

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அருளப்பு செபமாலை

குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளப்பு செபமாலை காலமாகிவிட்டார்.

இவர் அலோசியஸ் திரேசா, அ. மெக்டலின், றஞ்சிதமணி (யாழ்.வர்த்தகத் திணைக்களம்), அ ஜெயராசா (பிரதேச சபை, சுன்னாகம்), அருட்செல்வி யசிந்தா அருளப்பு (திருக்குடும்ப கன்னியர்மடம், மட்டக்களப்பு), யோசேப் சுசெயின்ஸ் (உதயன் பணிமனை, யாழ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசேப் அலோசியஸ் (Hudec), ஜெயராசா புஸ்பராணி ஆகியோரின் மாமியாரும், ஜெனிவனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தற்காலிக முகவரியான மத்தியூஸ் றோட் (தீயோகு வீதி) இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக (4-1-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி:
மத்தியூஸ் றோட்,
தீயோகு வீதி,
(மனித முன்னேற்ற நடுநிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தகவல்
யோ: அலோசியஸ்
(மருமகன்)

(52301)

## குமரன் சிறோமி மீரா

குருநகர் 37, ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிறோமி மீரா 27-12-97 இல் பிரான்ஸில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சிங்கம் கிறேசியன் துரை (பிரான்ஸ்)—லூர்த்துநாயகி தம்பதிகளின் அருமை மகளும், யேசுமணி குமரனின் அன்பு மனைவியும், அலிஸ்ரன் (பிரான்ஸ்), யஸ்மி, தாரணி, ஆன்சி ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிங்கம், காலஞ்சென்ற மரியப்பிள்ளை, மரியாம்பிள்ளை — றீற்றம்மா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், யேசுமணி, காலஞ்சென்ற றீற்றம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸில் 03-01-98 ஆம் திகதி சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட இருப்பதால், அவரின் ஆன்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி 03-01-98 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ பீற்றர் (குமார்)
(சித்தப்பா)

37, ஓடக்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(52348)

## திருமதி மனுவல் லூர்த்தம்மா

(தங்கமணி)

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனுவல் லூர்த்தம்மா 1-1-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கென்றிமனுவல் (மலாயன் பென்சனர்) அவர்களின் அன்பு மனைவியும், லோகநாதன் (சுவிஸ்), யோகநாதன், அமரநாதன் (ஜேர்மனி), றோகினி, சாமினி (திருமலை), மீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளம் (சுவிஸ்), யேசுதாசன் (ஜேர்மனி), கில்லரி ரெட்ணநாயகம் (சுவிஸ்), தேவதாஸ் (திருமலை), கிளி, சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் மற்றும் அன்புப் பேரப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து 3-1-98 இன்று சனிக்கிழமை (பு.நே) 2.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. யோகநாதன்
(மகன்)

இல: 8, கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(52345)

## முருகேசு இராமலிங்கம்

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையில் வசித்த முருகேசு இராமலிங்கம் 16-12-1997 அன்று அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முருகேசு நாகம்மாவின் அன்பு மகனும், யோகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பு துரைராசா, காலஞ்சென்ற பாலசிங்கம (கிச்சி, அமெரிக்கா) மற்றும் திருமதி பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், யோகரஞ்சினி, திருமதி செல்வரஞ்சினி, மனோரஞ்சினி, அமுதரஞ்சினி, சசிகலா (அனைவரும் அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அமெரிக்காவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. பாலசிங்கம்
(பேறாமகன்)
இலங்கை வங்கி,
மானிப்பாய்.

லக்சுமி வில்லா,
வல்லை றோட்,
சங்கானை.

# வேலையற்ற பட்டதாரிகள் கூட்டம்

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ். தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம் பெறவிருக்கின்றது. (உ-7)

# ஆண்டு விழா

சாவகச்சேரி பாரதிபாலர் கழகத்தின் 32 ஆவது ஆண்டு விழா நாளை காலை 10.00 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் பாரதி பாலர் கழக அதிபர் திருமதி புனிதவதி இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனும் முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1 இன் பணிப்பாளர் சு. இரத்தினராசா, தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் போசகர் த. நவரத்தினராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு. செ. சரவணபவாவும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி ஆனந்தி சபாரத்தினம், அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் நா. அருட்சோதி ஆகியோரும் கலந்து கொள்வர்.

பாரதி பாலர் கழக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (உ-31)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 1995/96

பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கி கிளையில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுக்கான கால அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகையில் இடப்பட்டுள்ளது.

கலைப்பீடம்
1994/95, 1995/96
பிரிவுகள்

விஞ்ஞானம்
1993/94, 1994/95
நிதிப்பிரிவில் வழங்கப்படும்

மருத்துவம்
1990/91, 1991/92
1992/93, 1993/94
1994/95, 1995/96
பிரிவுகள் நிதிப்பிரிவில் வழங்கப்படும்.

(சி/2542) -பதிவாளர்


# லிபேட்டி சினிமா


அச்சுவேலி.
இன்று
30 அடி அகலத் திரையில்
விஜய், சங்கீதா
நடிக்க
பூவே உனக்காக
குடும்பச் சித்திரம்
நேரம்: 10-30, 2-30


# உடுவில் கமநல நிலையம் விடுமுறை நாள்களிலும் சேவை

வலிகாமம் தெற்கு, ஐ ௨ உடுவில் கமநல கேந்திர நிலையம் விவசாயிகளின் நலன் கருதி சனிக்கிழமை மற்றும் விடுமுறை நாள்களிலும் முழுநேரமாகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரைநேரமாகவும் திறந்து செயற்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு வேண்டிய ரீ. டி. எம், அமோனியம் சல்பேட், யூரியா, ஜே. எஸ். பி, எம். ஓ. பி. போன்றவையும், மிளகாய், வெண்டி, தென்னை மற்றும் மரக்கறிகளுக்கு தேவையான உரக் கலவைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விநியோகிக்கப்படுகின்றன. (ஐ-152)

# வெள்ளிவிழா வாழ்த்துக்கள்



## அருள் திரு. R. அன்ரன் மத்தாயஸ்

வெள்ளிவிழாக் காணும் அருள்திரு R அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் பணி இன்னும் பல்லாண்டுகள் சிறக்க அன்போடு வாழ்த்துகின்றோம்.

புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரும், பணியாளர்களும்.

(52342)

# வாழ்த்துகின்றோம்

எதிர்வரும் 06-01-1998 இல் பொன்விழாக்காணும் பொன்விழா நாயகனை வாழ்த்துகின்றோம்.

புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத்தந்தை

அருட்திரு

கலாநிதி R. அன்ரன் மத்தாயஸ்

அவர்கள் தனது பணி வாழ்வில் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
புஸ்பா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
சூசைப்பிள்ளை குடும்பத்தினர்,
அருள்நாயகம் குடும்பத்தினர்.

இல. 192, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(52344)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை யோகேந்திரன்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கமலாம்பிகை யோகேந்திரன் அவர்கள் கனடாவில் 31-12-1997 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற யோகேந்திரன் சிக்கம் செல்லையாபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை சந்திரசேகர், திருமதி இரத்தினம்மா சந்திரசேகர் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிக்கம் செல்லையாபிள்ளை, காலஞ்சென்ற இராசமுத்து சிக்கம் செல்லையாபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், இரஞ்சன் செல்லையாபிள்ளை (கனடா), இரமேஸ் (கனடா), குழகன் (கொழும்பு), கார்த்திகாயினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலைச்செல்வி செல்லையாபிள்ளையின் அன்பு மாமியாரும், திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவதாசன் (மின் பொறியியலாளர்), சிவானந்தன் (கனடா), டாக்டர் மனோன்மணி (களுபோவில வைத்தியசாலை), டாக்டர் லோகேஸ்வரி (நியூசிலாந்து), விமலாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி நாகபூசணி குமாரசுவாமி (கொழும்பு), செல்விராயர் செல்லையாபிள்ளை, திருமதி தேவி பத்மநாதன் (கனடா), செல்வி அம்பிகை செல்லையாபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி), திருமதி சிவா இராமநாதன் (முன்னாள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர், இளைப்பாறிய பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலயம் 02) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் (05-01-1998) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி சிவா இராமநாதன்
(மைத்துனி)

'பத்மநாதம்',
இருபாலை,
கோப்பாய்.

(52347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடுவதை இராணுவம் தவிர்க்குமாம்!

## புலிகளும் மென்மையான போக்கை கடைப்பிடிக்கவே விரும்புகின்றனர்?

யாழ். குடாநாட்டைக் களமாகக் கொண்டு அண்மைக் காலத்தில் மோதி வந்தவை இரு அணிகள்.

ஒன்று — ஸ்ரீலங்கா அரசுப் படைகள்.

மற்றையது — தமிழீழ விடுதலைப் புலிகள்.

இந்த மோதல்களுக்கு மத்தியில்தான் குடாநாட்டு மக்களுக்கு காதில் பூச்சுற்றும் வேலையாக உள்ளூராட்சித் தேர்தல்கள் திணிக்கப்பட்டன. தமிழ்க் கட்சிகளும் தங்கள் பங்குக்கு மக்கள் காதில் பூ வைப்பதற்காக களத்தில் வந்து குதித்தன.

இந்த ஆரவாரங்கள் ஆர்ப்பாட்டங்களினால் கலங்கிப் போனார்கள் குடாநாட்டு மக்கள்.

இந்தியப்படை இங்கிருந்த காலத்தில் நடந்தது போல சூடுகள், வெட்டுக்கள் தீர்க்கப்பட.... பதிலுக்கு பழிவாங்கல்கள் தொடர... குடாநாடு மீண்டும் பெரிய ரணகளமாகிவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு.

ஆனால் நிலைமை எதிர்பார்த்ததற்கு மாறாக நீறு பூத்த நெருப்பாகத் தொடர்கின்றது.

இந்தியப் படை இருந்த காலத்திலும் குடாநாட்டு மக்கள் மீது தேர்தல்கள் திணிக்கப்பட்டன. அப்போது அவற்றை முறியடிக்கும் முயற்சியாக சில உத்திகளை விடுதலைப் புலிகள் கையாண்டனர். வேட்பாளர்கள் மிரட்டப்பட்டனர்; அல்லது சுடப்பட்டனர்; தேர்தல் நோட்டீஸ்கள் அச்சிடுவதற்கு அச்சகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது; தேர்தல் காலத்தில் உள்ளூர்ப் பத்திரிகைகள் தாமாகவே பிரசுரத்தைச் சிறிது காலத்துக்கு நிறுத்திக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டன. எனினும் அரச அதிகாரிகள் இந்தியப்படையினரால் பலவந்தப்படுத்தப்பட்டு தேர்தல் கடமைகள் செய்யப் பணிக்கப்பட்டனர்; அதன் பிரதிபலனை அதிகாரிகள் அனுபவிக்க வேண்டியதாயிற்று.

ஆனால் தற்போது ஸ்ரீலங்காப் படைகளின் கட்டுப்பாட்டில் மீண்டும் குடாநாடு கொண்டுவரப்பட்டிருப்பதை அடுத்து நடத்தப்படும் இந்தத் தேர்தல்களில் தமது பழைய உத்திகளை பின்பற்றுவதில் புலிகளுக்கு உடன்பாடு இல்லை எனத் தெரிகின்றது; அல்லது பழைய உத்திகளை நடைமுறைப் படுத்தும் நிலையில் புலிகள் இல்லை என்று கூறப்படுகின்றது சில சமயம், பழைய உத்திகளைப் பயன்படுத்துவது தமக்கு பாதகமான ஒரு நிலைமையை ஏற்படுத்தலாம் என புலிகள் எண்ணக் கூடும்.

எது எப்படியென்றாலும் பழைய உத்திகளைப் பின்பற்றும் பாணியை புலிகள் இன்னும் வெளிப்படுத்தவில்லை — திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களைத்தவிர.

அக்கடிதங்களில் தேர்தல் பணியில் ஈடுபடவேண்டாம் என்று உங்கள் ஊழியர்களுக்கு ஆலோசனை கூறுங்கள் என்று மட்டும் விநயமாகக் கோரப்பட்டதாகத் தெரிகின்றது.

எது எப்படியென்றாலும் தேர்தல் தொடர்பாகத் தமது கடும்போக்கை — கடுமையான முகத்தை இன்னும் புலிகள் காட்டவில்லை; சில சமயங்களில் காட்டாமலும் விடலாம். இது விடயத்தில் Soft Pedal (மென்மையாக மிதிக்கவே) அவர்கள் விரும்புவதாகத் தெரிகின்றது.

அதற்குக் காரணங்கள் இருக்கலாம்.

மறுபுறத்தில் தேர்தல் தொடர்பாக ஸ்ரீலங்காப் படைகளும் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. இந்தியப் படைகள் தேர்தலை இங்கு நடைமுறைப்படுத்திய விதம் யாழ்ப்பாண மக்களால் மறந்துவிடக் கூடியதொன்றல்ல.

தேர்தல் குறித்து வட பகுதி இராணுவத்துக்குப் பொறுப்பான மூத்த அதிகாரி ஒருவரிடம் கேட்டேன்.

''தேர்தல் நெருங்கும் இறுதி நேரத்தில் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி குடாநாட்டு மக்களிடம் விடுதலைப் புலிகள் ஒரு கோரிக்கையை முன்வைக்கக் கூடும் என்று ஒரு பேச்சடிபடுகின்றது. அப்படி ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டு பிரசாரப்படுத்தப்பட்டால் அதை முறியடிக்க எதுவும் செய்வீர்களா? வாக்களிக்கும்படி மக்களை, பலவந்தப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவம் இறங்குமா?'' — என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தியப்படை இங்கிருந்த காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரட்டப்பட்டு வாக்குச் சாவடிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு வாக்களிக்கப் பலவந்தப்படுத்தப்பட்ட சம்பவங்கள் மக்களுக்கு நினைவிருக்கலாம்.

மாகாணசபைத் தேர்தல் காலத்தில் குடாநாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட (கட்சிகளின் அல்லது அணிகளின்) வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்படாமல் இராணுவக் கெடுபிடிகள் மூலம் தேர்தல் நடைபெற இடமளிக்காமல் பார்த்துக் கொண்டதும் நினைவு கூரத்தக்கது.

இத்தகைய செயல்கள் எதிலும் இராணுவம் இறங்காது என்று அடித்துக் கூறினார் அந்த அதிகாரி.

''தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் ஜனநாயக நடவடிக்கை மூலமும் மக்கள் கருத்தை வெளிப்படுத்த வைக்கலாம். ஆனால் அக்கோரிக்கையை ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள சக்திகள்தான் கோர வேண்டும். ஆயுதங்களை நம்பியிருக்கும் — ஆயுதங்களால் மக்களை — அரசை — மிரட்ட முயலும் விடுதலைப் புலிகள், பகிஷ்கரிப்புக் கோரிக்கையை ஒரு ஜனநாயக ரீதியின் மக்கள் கருத்தை வெளியிட வைக்கும் ஒரு முறையாகக் கருதுவது பொருத்தமற்றது; கேலிக்கூத்தானது. புலிகள் அவ்வாறு பிரசாரம் செய்தால் மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை பிரயோகிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாம் பிரசாரம் செய்வோம். ஆனால் அதற்காக வாக்களிக்குமாறு மக்களைப் பலவந்தப்படுத்த மாட்டோம்'' — என்றார் அவர்.

இந்த மூத்த இராணுவ அதிகாரியின் பதில், தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடுவதில் இராணுவம் அதிகம் நாட்டம் காட்டாது என்பதைத் தெளிவுபடுத்தினாலும் யதார்த்தத்தில் அது அனுசரிக்கப்படுமா என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எனினும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை தேர்தல் சட்ட விதிகளுக்குஅமைய கையாளப்படுவதையே இராணுவம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அவருடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம், தீவகத்தில் தேர்தல் வன்முறையின் ஓர் இயக்க (கட்சி) வேட்பாளர் மாற்று இயக்கத்தினரால் உடைந்த போத்தலினால் குத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து ஒரு தொலைபேசி அழைப்பு அவருக்கு வந்தது.

''இது தேர்தல் விவகாரம். தேர்தல் சட்டவிதிகள் மீறப்பட்டால் — சட்டம், ஒழுங்குக்கு முரணான செயல்கள் இடம்பெற்றால் — பொலீஸுக்குத் தான் முதலில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும். தேர்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலீஸாரையே சார்ந்தது. அவர்களால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் போனால் உதவிக்கு அவர்கள் எம்மை அழைப்பர். எனவே நீங்கள் முதலில் பொலீஸில் முறைப்பாடு செய்யுங்கள்'' — என்றும் ஆலோசனை கூறினார் அந்த மூத்த இராணுவ அதிகாரி.

சில கட்சிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது பற்றிய விபரத்துடன், என்ன நடவடிக்கை எடுப்பது என்று கேட்டு களத்திலிருந்து இராணுவ அதிகாரி ஒருவர் அந்த மூத்த அதிகாரியுடன் தொடர்பு கொண்டார்.

''எம். பிக்களுடனும் கட்சித் தலைவர்களுடனும் பாது




காப்புக்குச் செல்வோரைத் தவிர வேறு எவரும் ஆயுதங்களுடன் நடமாடமுடியாது. அப்படி கட்சிக்காரர்கள் யாராவது நடமாடினால், அப்படி நடமாட முடியாது; நடமாடக்கூடாதுஎன்றுமுதல் தடவை அவர்களுக்கு ஆலோசனை கூறுங்கள். மீண்டும் ஆயுதங்களுடன் நடமாடினால் ஆயுதங்களைப் பறிமுதல் செய்யுங்கள். திரும்பவும் அந்நபர் ஆயுதம் ஒன்றுடன் வந்தால் ஆயுதத்தைப் பறிமுதல் செய்வதுடன் அவரையும் கைது செய்யுங்கள்'' —என்று திட்டவட்டமாக பணிப்புரை விடுத்தார் அந்த அதிகாரி.

'ஜனநாயக முறையில் தேர்தல் நடப்பதை உறுதி செய்ய எங்களால் இயன்ற அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம்'— என்றும் அவர் சொன்னார்.

இராணுவமும், விடுதலைப் புலிகளும் தேர்தல் தொடர்பான தமது போக்கில் மென்மைத் தன்மையைக் கடைப் [illegible] பிடிக்காமல்' தேர்தலை நடத்தி முடிக்க விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பது போலப்படுகின்றது.

புளொட்டும், ஈ.பி.டி.பியும் கறுவிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எந்நேரமும் மோதல் வெடிக்கலாம் என்று அஞ்சுகின்றார் ஸ்ரீமான் பொதுஜனம்.

நகர மத்தியில் ஆயுதங்களுடன் அலைவதும் எடுப்பு எடுப்பதும் கட்சி மோதல்களுக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது என்கின்றார் பொதுஜனம் ஒருவர்.

தேர்தல்கள், அதற்குரிய சட்ட விதிப்படி நடைபெறுகின்றதா என்பதை கண்காணிக்க விசேட கண்காணிப்புக் குழு ஒன்றை அமைப்பதற்கு அரசு இணங்கியிருக்கின்றது.

தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவம் தலையிட முயற்சித்தால் இந்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்துக்கு அது எடுத்துச் செல்லப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் தேர்தல் ஆணையாளர், யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய கூட்டத்தில் தேர்தல் கண்காணிப்புக்குழு அமைக்கப்படுவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வெளிநாட்டு தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றைத் தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கலாம் என்ற ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் ஈ.பி.டி.பி.யின் எம்.பி. ஒருவர் இதனை எதிர்த்தார்.

''வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் போகமாட்டார்கள். படையினர் கூட்டிச் செல்லும் — சில தெரிவு செய்யப்பட்ட — வாக்களிப்பு நிலையங்களுக்கு மட்டும் சென்றுவிட்டு, வாக்களிப்புச் சுமுகமாக — நேர்மையாக — சட்ட விதிகளுக்கு அமைவாக — நடந்ததென அறிக்கை கொடுத்து விடுவார்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு யாழ். விஜயம் ஓர் உல்லாசப் பயணமாக முடிந்துவிடும். உள்ளார்த்தமாக இந்தப் பிரச்சினையை அணுகி— கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு — தேர்தல்களை அவர்கள் கண்காணிக்க மாட்டார்கள். ஆகவே உள்நாட்டில் பணிபுரியும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாகக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்படுவதே நல்லது. அவர்கள் ஊர், இடம், பிரச்சினைகள் தெரிந்தவர்கள் என்பதால் எத்தகைய முறைகளில் சட்ட மீறல் இடம்பெறலாம் என்பதைக் கண்டுபிடித்து அந்தந்த வழியே பார்த்து உண்மைகளைக் கண்டறிவர்'' — இப்படி அந்த எம். பி. குறிப்பிட்டார்.

ஆனால் அடுத்த நாள், சில கொழும்புப் பத்திரிகைகளில் ''யாழ். குடாநாட்டுத் தேர்தலை வெளிநாட்டு பிரதிநிதிகள் கொண்ட குழு கண்காணிப்பதை ஈ. பி. டி. பி. முற்றாக] எதிர்க்கின்றது' என்ற பாணியில் ஒரு செய்தி வெளியாகியது.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் விட உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் மூலம் ஆள்களைத் திரட்டி அவர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை அமைப்பது சிறந்ததுஎன்பதே ஈ. பி. டி. பியின் நிலைப்பாடு.

தேர்தல் காலத்தில் அசம்பாவிதங்கள் அதிகம் நடக்காது என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குடாநாட்டில் நிலை கொண்டுள்ள துருப்புக்களுக்கு மேல

**பாசுபதன்**

திகமாக துருப்புக்களை குடாநாட்டுக்கு அனுப்ப பாதுகாப்பு வட்டாரங்கள் இணங்கியிருப்பதாகவும் குடாநாட்டில் உள்ள இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் ஒரு புறம் தேர்தல் மறுபுறம் பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னால் வடக்கிற்கான தரைப்பாதையைத் திறந்து விடுதல், ஐம்பதாவது சுதந்திர தின(பொன் விழா) நடவடிக்கைகளுக்காக கண்டியிலும் தலைநகர் கொழும்பிலும் பாதுகாப்பைப் பலப்படுத்தல் ஆகிய தேவைகளுக்கு மேலதிக துருப்புகளை அரசு தேடி நிற்கின்றது. இவற்றுக்கு மத்தியில் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்துக்கு மேலதிகத் துருப்புக்களை அனுப்புவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

இதனிடையே —

தேர்தல்பிரசாரம் தொடர்பாக போட்டியிடும் கட்சிகளுக்கு சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

கட்சி ஒன்றின் தொண்டர்கள் யாழ்ப்பாணத்தில் ஓடித் திரியும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் தமது தேர்தல் பிரசார போஸ்டர்களை ஒட்டி விட்டனர்.

உடனடியாக அந்தக்கட்சி வட்டாரங்களுக்குத் தகவல் பறந்தது.

''வாகனங்கள், பஸ் போன்றவற்றில் தேர்தல் பிரசார போஸ்டர்கள் ஒட்டுவது சட்ட விரோதமான செயலாகும். அத்தகைய போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தால் தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைய சம்பந்தப்பட்ட அமைப்பின் அல்லது சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளரைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தலாம் — என்ற தகவல் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து அந்தக் கட்சியின் தொண்டர்களினாலேயே பஸ்களில் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் நீக்கப்பட்டன.

இன்னும் தேர்தல் பிரசாரம் உச்சக்கட்டத்தை அடையவில்லை. உச்சக்கட்டத்தை அடையும் போது பிரசார

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லந்து கல்வி நிலையம்
வண் - வடமேற்கு, ஆனைக்கோட்டை.
யாழ். முன்னணி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கும் நிறுவனம்
கலை, வர்த்தக வகுப்புக்கள்
**A/L 2000 ஆண்டு**
ஆரம்பம்: 10-01-98 காலை 8 மணி
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
— நிர்வாகி
(52331)

## வாழ்த்துகின்றோம்
குருத்துவப்பணியில் வெள்ளிவிழாக் காணும்
**அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ்**
அடிகளாரை வாழ்த்துவதில் சென். பெனடிக்ற் றோ. க. த. க. பாடசாலை பெருமைப்படுகிறது. தங்கள் பணி மேலும் சிறக்கவும், தொடர்ந்து வளரவும் எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்கள்,
யாழ். சென். பெனடிக்ற்
றோ க. த. க. பாடசாலை,
(52326)

## G. A. Q. 98
**(பேராதனை)**
★ பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் மேற் கூறப்பட்ட பாட நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(49896)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்: 08 — 12 — 1909
விண்ணுலகில்: 04 — 12 — 1997
**அமரர் கார்த்திகேசு நடராசா**
அன்பால், பண்பால், அறிவால் எம்மை வழி நடத்தி வாழ்வூட்டிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாள்கள் கடந்தாலும் அவரின் பாச நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
"சாவம்மை"
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
(52171)

## தென்மராட்சியில் மாதாந்த உதவிப்பணம்
தென்மராட்சிப் பிரதேசத்தில் மாதாந்த உதவிப்பணம் மற்றும் புற்றுநோய், காசநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கானடிசம்பர்மாதக் கொடுப்பனவும் அவர்கள் தங்கயுள்ள பிரிவு அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பிரதேச செயலர் நியமனம்
பளை பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் யாழ்ப்பாணம் பிரதேச செயலராக 1-1-1998 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
இவரின் இடத்திற்கு ச. புத்தி சிகாமணி நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## ஐடியல் கல்வி நிறுவனம்
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.
**ஆண்டு 4 முதல் O/L வரை**
**புதிய பிரிவு**
ஆரம்பம்: 5-1-98
மாலை 3 மணி
அனுமதிக்கு முந்துங்கள்.
(52333)

## தேவை
அனுபவமுள்ள சப்பிளையர் சுவீற்ஸ் மேக்கர் உடன் தேவை
**குலம் கிறீம் ஹவுஸ்**
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(52330)

## கீன்
திருநெல்வேலி
**A/L 2000**
கலை, வர்த்தக வகுப்புக்கள்
05 - 01 - 1998
திங்கள் மாலை 3.00 மணிக்கு ஆரம்பம்.
(52317)

## ஸ்ரீ செல்வா மினி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
10.30, 2.30 (ப. நே.)
விஜய், (பேபி) சாலினி நடித்த
**காதலுக்கு மரியாதை**
(புதிய பிரதி)
கடைசி 2 தினங்களுக்கு மட்டும்.
பெண்களுக்கு முன் கூட்டியே பதிவு
(52313)


## நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.
**A\L 2000**
(வழமையான ஆசிரியர் குழு)
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்: 10-01-98 சனி (காலை 8 மணி)
அனுமதிகளைப்பெற்றுக் கொள்ளவும்.
(49893)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
உயரப்புலம் கி. மு. சங்கத் தலைவராக, மானிப்பாய் கோவிற்பற்று இந்துசமய விருத்திச் சங்கச் செயலாளராக, யாழ். இலக்கிய வட்டச் செயலாளராகப் பல பதவிகளை வகித்துவரும் மூத்த எழுத்தாளர், ஓய்வு பெற்ற அதிபர், சிறந்த சமூக சேவையாளர்.
**புத்தொளி ந. சிவபாதம்**
அவர்கள்
யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக (J. P.) நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி மனமார வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(49898)

## கண்ணீர் அஞ்சலி
தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர்,
உதவி அரசாங்க அதிபர்
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய தலைவர்
உயர் திரு. ஆறுமுகம் தியாகராசா
அவர்களின் பாசம் மிக்க தாயார்
திருமதி
**ஆறுமுகம் வடிவாம்பிகை (வள்ளியம்மை)**
(நயினாதீவு)
அவர்களின் (1 — 1 — 1998 வவுனியாவில்) திடீர் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.
துயருற்றிருக்கும் உதவி அரசாங்க அதிபருக்கும், குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

செயலக அலுவலர்கள்,
கிராம அலுவலர்கள்,
சிற்றூழியர்கள்.
பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.
(52323)

இதயம் நெக்குருகும்
## 5-ம் ஆண்டு நினைவுக் கலசம்
மண் மகிழ: 23 — 05 — 1949

கண் நெகிழ: 10 — 01 — 1992
**அமரர் இராசையா கந்தசாமி**
அவர்கள்
(உரிமையாளர்:- கீதா ஜுவலர்ஸ், சாவகச்சேரி)
திதி:- 03 — 01 — 1998

அள்ளி யணைத்தெடுத்து ஆளாக்கி யறிவீந்து
அன்பா யெம்மையெலாம் அரவணைத்து
உள்ளமெலாம் நிறைந்திருந்த உத்தமரே உலகளந்த
ஒப்பிலாப்புகழ் நாயகரே எம் தலைவா!
வெள்ளமெனக் கண்சிந்தி வேதனையில் நாம்வாட
வேகமுடன் எமைமறந்து எங்குற்றீர்?
தள்ளரிய பிரிவுத் தீ தன்னாலெம் உளமெரியத்
தந்தோமைந் தாமாண்டு அஞ்சலிகள்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மனைவி, மக்கள்,
உறவினர்கள்.
சங்கத்தானை,
சாவகச்சேரி,
(52299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள் 29-01-1998

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

நாம் தேர்தல் காலத்தில் மட்டும் உங்களை நாடி வருபவர்கள் அல்லர். யுத்த அழிவுகள் தமிழர்களைச் சின்னாபின்னப் படுத்தி, அகதிகளாக்கி ஓட ஓட விரட்டியடித்தபோதும் அவல நிலையிலிருந்து அவர்களைப் படிப்படியாக மீட்டெடுக்கின்ற மறுவாழ்வு நடவடிக்கைகளின் போதும் மக்கள் மத்தியிலே வாழ்கின்றோம்; பணிபுரிகின்றோம்; துன்பத்திலும், இன்பத்திலும் தோளோடு தோள் நிற்கின்றோம். எமது ஸ்தாபன நலன்களை விட உங்கள் நலன்களை உறுதிப்படுத்தவே எமது வளத்தையும் காலத்தையும் செலவழிக்கின்றோம்


தேர்தல் காலத்தில் மாத்திரமன்றி உங்கள் மத்தியில் என்றும் உங்களில் ஒருவராக வாழ்ந்து பணிபுரிபவர்கள். நாம் சந்தர்ப்பவாத அரசியல் பேசவில்லை. எமது இனத்தை நேசிக்கின்றோம். மக்களின் அன்றாட அவசிய தேவைகளை உணர்கின்றோம். அவர்களது விடிவிற்காகவும், சரிநிகர் சமானமாய் வாழும் உரிமைக்காகவும் உழைக்கின்றோம். எமது அனுபவங்களின் அடிப்படையில் மக்களை வழிநடத்தும் புதிய பாதையை வகுக்கின்றோம். அப்பாதையில் எமது மக்களைத் தோளோடு தோள் நின்று கரத்துடன் கரம் இணைந்து அழைத்துச் செல்கின்றோம்.

எத்தகைய இடர்வரினும் தொடர்ந்து ஐக்கியமாக, அறிவுபூர்வமாகச் சிந்தித்து, இரண்டறக் கலந்து, அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களை முறையான சமூக, பொருளாதார, அரசியல் கட்டுமானத்தை நோக்கி வெற்றி நடை போட வைக்க விரும்புகிறோம். எமதுபயணம் உறுதியாகவும், கொண்ட குறி தவறாமலும் அமைய நாம் தெரிவுசெய்த வழிகாட்டிகளே எமது வேட்பாளர்கள்.

**உங்கள் ஆதரவின் மூலமே உரிமைகளுக்கான போராட்டத்திலும், சமூகக் கடமையிலும், புனர்வாழ்வுப் பணிகளிலும், மேலும் மேலும் காத்திரமான பங்கைத் தொடர்ந்து செலுத்தமுடியும் என நம்புகின்றோம்.**

## உங்கள் சின்னம்





# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறிமா கைவலன் பிறவுண் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும்.
[சி/2512]

நல்ல நிலையில் உள்ள 3 சிறீ தொடர் இலக்கம் உடைய A 40. பரீனா கார் (இயந்திரம் - MINOR 1000) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகுருநாதன் கராஜ், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
[52322]

ஜேர்மன் வயவின் 'ஒலிம்பஸ்' (HALF FRAME) கமரா, பிளாஷ், பற்றறி சார்ஜர், "வோனோ" ஸ்பிறிங் கட்டில், கந்தோர் மேசை, சோலார், எலக்ரோனிக் பிலிப்ஸ் இரத்த முத்த மீற்றர், 887, ஆஸ்பத்திரி வீதி, (சுண்டுக்குளி), யாழ்ப்பாணம். [52243]

நல்ல நிலையிலுள்ள C m 125 T விற்பனைக்கு உண்டு. விலை 40,000/- தொடர்பு: பேவி சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (52325)

## விற்பனையாகிறது

1998 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி? பிறந்த திகதிப்படி 98 ஆம் ஆண்டு நிகழப் போகும் பலாபலன்களை முன் கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். சோதிடர் V. A சிவராசா, (வேலணை) 152 B, அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
[52298]

## தவறிவிட்டது

"ஆனந்தகிரி" வட்டுக் கோட்டை மேற்கைச் சேர்ந்த செல்வி நாகேஸ்வரி சிவசம்புவின் 417041273 இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கஸ்தூரியார் வீதியிலுள்ள உதயன் பணிமனையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(52305)

நாகரத்தினம் இராசையா என்பவருடைய தேசிய (440103944 V) விசேட காரியாலய, அடையாள அட்டைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 48/7, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.
(52329)

செல்லத்துரை சிவகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (690574209V) யாழ். நகருக்கும், நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநாவுக்கரசு தச்சுத் தொழிற்சாலை, மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(52321)

## AL 2000
(கலை, வர்த்தகப்)
ஆரம்பம்:
**10 - 01 - 1998**
(காலை 8 மணி)
அனுமதிகள்
01-01-98இல் இருந்து வழங்கப்படுகின்றன.
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

## (O/L) MATHS 98

புலமைப் பரிசில வகுப்பிலிருந்து (O/L) வரை கட்டாய பாடமாகிய கணிதபாடத்தினை 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.
(52308)

## திருமணசேவை

சகல மணமக்களது குறிப்புகள், விவரங்கள், படங்களை எமது சேவையில் ஒன்றிணைத்து பொருத்தமான திருமணங்களை நிறைவேற்றலாம். எமது சேவையில் பல்வேறு தரத்திலான மணமக்களும் உள்ளனர். "சேவை நம்பகம்" விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர்.
(52324)

## சோதிடம்

உள்நாட்டு வெளிநாட்டு சாதகக் குறிப்பு எழுத விவாகப் பொருத்தம் பார்க்க சிவம் சோதிடர், 158, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(52300)

## உடன் விற்பனைக்கு

பிறிமா புறோயிலர் ஒருநாள குஞ்சுகளும் ஒரு மாதம வளர்ச்சியடைநத பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், பல இன அழகிய கலர் வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பண்ணை, மானிப்பாய்.
[52259]

## A/L கணித வகுப்புகள்

A/L வகுப்பிற்கான தூய பிரயோக கணித பிரத்தியேக வகுப்புகள் 7.1.98 (புதன்) ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: ஆசிரியர் ஸ்ரீறாஜ் 108, பிறவுண் வீதி. (நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் விறகு காலை முன்பாக)
(52311)

## NEW BRIGHT EDUCATION CENTRE
## நியூ பிறைற் கல்வி நிலையம்

இல. 37, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
**1998 கல்வி ஆண்டு**
ஆண்டு 01 முதல் O/L வரை
5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை
விசேட வகுப்புக்கள்
தட்டச்சு வகுப்புக்கள்
**ஆரம்பம்: 03-01-98** சனிக்கிழமை
(52312)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கே. கே. இராஜரத்தினம்**
(உரிமையாளர், இராஜரத்தினம் நகைமாளிகை)

தாயின் மடியில்: **15 - 7 - 47**
தலைவனின் நிழலில் **05 - 12 - 97**

பாசத்தின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!
விழிகள் நீர் சுமந்தே நாளும்
உன் நினைவுகளில் மிதக்கின்றோம்.
கழிகின்ற பொழுதெல்லாம் நீ சென்ற
வழி பார்த்து கலங்குகின்றோம்.
துன்பம் தாங்காமல் துடிக்கிறது எம் இதயம்.
கூட உன் நினைவு நிழலாய் தொடர்கின்றதே.
ஐயகோ! உன் ஆத்ம சாந்திக்கு
எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
அஞ்சலிக்கின்றோம்.

எம் குடும்பத் தலைவரின் மறைவினால் நாம் கலங்கி நின்ற போது பல்வேறு வழிகளில் எமக்கு உதவிய அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—குடும்பத்தினர்

தாவடி,
கொக்குவில்.
(52251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம்

# மூக்குக் கண்ணாடி வழங்கல்

இடம்: கழகச் செயலகம்,
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
(தபாற் கந்தோர் அருகில்)
காலம்: **04 - 01 - 98 ஞாயிறு**
காலை 10 மணி முதல் 12 மணி வரை
எப்பாக் பரிசோதனை செய்யப்பட்டு
வழங்கப்பட்ட சிட்டையுடன் நேரில் வரவும்.
(சி/2533) தலைவர்

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
03-01-1998




## செல்வன் சி. கார்திக்

வவுனியாவைச் சேர்ந்த சிவகுமார் சுபாஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சி. கார்திக்

தனது முதலாவது பிறந்த தினத்தை (03.01-98) இன்று வவுனியாவிலுள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, மாமாமார், மாமிமார், சித்தி, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீருஞ் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
வவுனியா. (52273)

# குருத்துவ வெள்ளி விழா வாழ்த்துக்கள்



குருத்துவ வாழ்வின்
**25 ஆண்டுகளைக் கண்டு மகிழும்**
**அருட்திரு. அன்ரன் மத்தாயஸ்**
அவர்களை
அகமும் முகமும் மலர அன்புடனும் செபத்துடனும்
வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பெற்றோர்:
திரு. ஜே. டி. மத்தாயஸ்,
திருமதி அருணம்ம மாத்தாயஸ்

சகோதரர்:
திரு. திருமதி மரியதாசன்,
திருமதி கிறேஸ் பெனடிக்ற்
திரு. திருமதி ஜோய், திரு திருமதி றஞ்சன்,
திரு. திருமதி சந்திரன், திரு. திருமதி கிறிஸ்ரி

மருமக்கள்:
அமரன், விவேகா, தீபா, ஜபோ, அஞ்சலா, பிரான்சிஸ், கிளறன்ஸ், ஷாலினி, டினேஷா, துஷாறா, றாஜன், கிஷாந்த்.
(52318)

# வடபுல தொழிற்றுறை கழகம் விரைவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். மாவட்டத்தில் தொழிற்றுறையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ''வடபுல தொழிற்றுறைக் கழகம்'' ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீரவின் ஆலோசனையின் பேரிலே மேற்படி அமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த அமைப்பின் ஊடாக தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைந்த வட்டியுடனான கடனுதவி, தொழில் நுட்ப உதவி, மூலப்பொருள்களை கட்டணமின்றி கொழும்பிலிருந்து கொண்டு வருதல், தொழில் நுட்ப பயிற்சி போன்ற தொழிற்றுறை சார்ந்த உதவிகள் வழங்கப்படும்.

இத்துறையில் ஈடுபட்டிருக்கும் தனிநபர்களோ அல்லது நிறுவனங்களோ ''புறோமோட்டேர்ஸ் எஞ்ஜினியரிங்'' நிறுவனத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# நாட்டுக்குள் ஹெரோயின் கடத்தும் கோடீஸ்வரர்கள்

## கைது செய்ய வலை விரிப்பு

கொழும்பு, ஜன. 3

சர்வதேச மட்டத்தில் ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனச் சந்தேகிக்கப்படும் 12 கோடீஸ்வர வர்த்தகர்களைக் கைது செய்யும் நோக்கில் கனால் மற்றும் போதைப்பொருள் தடுப்பு இயக்க அதிகாரிகள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கோடீஸ்வர வர்த்தகர்கள் பாகிஸ்தான், லாவோஸ், பர்மா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு போதை வஸ்துக்களை இலங்கைக்கு கடத்தி வருகின்றனர் என்ற தகவல் விசாரணைகளில் இருந்து வெளிவந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வியாபாரிகள் மாதாந்தம் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளை நாட்டிற்குள் கடத்திவருவதாகவும் இதனால் அவர்கள் இரண்டு மடங்கு லாபம் அடைகிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# யாழ். கூட்டுறவு சமாசத்துக்கு 35 வகை உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். மாவட்ட விவசாய, உற்பத்தி கூட்டுறவு நுகர்வோர் சமாசத்திற்கு 35 வகையான உணவுப்பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதற்கான கப்பல் கட்டணத்தின் அரைவாசியை சமாசம் பொறுப்பேற்றுள்ளது. எஞ்சிய அரைப்பங்கை பொருள்களின் லாபம் மூலம் அறவிடப்படும்.

சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் இத்தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் நடந்த சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த தடவை கப்பல் கட்டணம் இன்றிப் பொருள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

இதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மக்கள் பொருள்களைக் கொழும்பு விலைக்கே பெறக் கூடியதாக இருக்கும்.

பொருள்கள் மக்களைச் சென்றடைவதற்கு சங்க நிர்வாகிகள், கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் — என்றும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

A\L 2000
( கலை - வர்த்தகம் )
ஆரம்பம்: 10 - 01 - 98 (8. 00 மணி)
( அனுமதிகள் வழங்கப்படுகின்றன )
புதியகலை வர்த்தகக்கல்லூரி
N. C. C. A
மணிக்கூட்டு வீதி, யாழ்.
(49895)

BRIGHT INSTITUTE
10, பிளர்ச்சஸ் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
விடுமுறையின் பின் மீண்டும்
03-01-1998
காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.
ஆண்டு 6 முதல் O/L வரை
பல வருட கற்பித்தல் அனுபவம் வாய்ந்த
எமது வழமையான ஆசிரியர் குழு.
★ கணித பாடத்தில் குறைவானவர்களுக்கு விசேட வகுப்புக்கள்
(52332)

# வேலையற்ற பட்டதாரிகள் விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு

## உரிய நியமனங்களை வழங்க அவர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கு—கிழக்கில் உள்ள அரச நிறுவனங்களில் பட்டதாரி தகைமையுள்ள வெற்றிடங்களுக்கும் மற்றும்சமுர்த்தி முகாமையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய பதவி வெற்றிடங்களுக்கும் வடக்கு - கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளை நியமனம் செய்யநடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த ஈ. பி. டி. பி. தூதுக்குழுவினர் இந்த விடயம் குறித்து அவரது கவனத்துக்கு கொண்டு வந்தனர். அதனை அடுத்தே ஜனாதிபதி இப் பணிப்புரையை வழங்கினார்.

அரசாங்க நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் போது இன விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படாமை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை வெகுவிரைவில் திறக்க நடவடிக்கை எடுத்தமை, உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களின் 1995 -96 ஆம் ஆண்டுகளுக்கான சம்பளம் வழங்கப்படாமை யாழ்ப்பாணத்துக்கு மேலதிகமாக 75 பஸ் வண்டிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம். வடக்கு - கிழக்கில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கல் போன்ற விடயங்களையும் ஈ. பி. டி. பி. குழுவினர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இவ்விடயங்கள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்தார்.

உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளப் பாக்கியை தைப்பொங்கலுக்கு முன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (ஐ-9)

# நல்லை ஆதீனத்தில் சமய தீட்சை

கொழும்புத்துறை, ஜன. 3

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலையில் சைவசமய ஆசார சீலர்களுக்கு சமயதீட்சை அளிக்கப் பட்டு வருகின்றது.

நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் நல்லாசியுடன் பலர் இங்கு வந்து சமய தீட்சை பெற்றுச் செல்கின்றனர். (ஐ-30)

# பிறந்த நாள் அறநிதிய விழா

யாழ்ப்பாணம், ஜன. 3

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 73 ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. தற்பரானந்தன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞான சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

விழாவில் 'பத்துச் சொற்பொழிவுகள்' என்ற நூல் வெளியிடப்படும். ஆசிரியர் ஆறு. திருமுருகன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மாவைக் கந்தன் ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் முதற் பிரதிபெறுவர்.

பிறந்தநாள் அறநிதிக் கொடையை கைதடி அரசினர் முதியோர் இல்லப் பொறுப்பாளர் திருமதி இ. துரைரத்தினம் ஏற்பார்.

# சனசமூக நிலையங்களுக்கு நூல் கொள்வனவுக்கு நிதி

தென்மராட்சி, ஜன. 3

சாவகச்சேரி பிரதேச சபை பொது நூலகங்களின் கிளை நூல் நிலையங்களாக இயங்கும் ஆறு சனசமூக நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குச் சபை நிதியிலிருந்து தலா 5 ஆயிரம் வீதம் 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கிளை நூல் நிலையங்களாக இயங்கும் மீசாலை வடக்கு சனசமூக நிலையம், மறவன்புலோ சிவகவி சனசமூக நிலையம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம், மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா சன சமூக நிலையம், மட்டுவில் வடக்கு செல்வவிநாயகர் சனசமூக நிலையம், மந்துவில் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கே நிதிவழங்கப்பட்டது. (ஐ-117)

அறிவித்தல்
யாழ். மாவட்ட
தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் [வ-து]
அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அத்துடன்
பொங்கல் வாழ்த்துக்கள்

பருத்தித்துறை காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களிலிருந்து அரச, தனியார் வர்த்தகர்களுக்கு வரும் பொருள்களை யாழ்ப்பாணம் வரை காவி வருவதற்கான [லொறி] ஒப்பந்தம் அரச அதிபரினால் எங்கள் சங்கத்திற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்பதை அனைவர்க்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காங்கேசன்துறையிலிருந்து யாழ். வரை மட்டும் 2.900 ரூபா
பருத்தித்துறையிலிருந்து யாழ். வரை மட்டும் 3 400 ரூபா

மேலும் யாழ் குடாநாட்டின் எந்தப் பகுதிக்கு பொருள்களைக் கொண்டு செல்வதானாலும் இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக கூலியைப் பேசி நிர்ணயித்துக் கொள்ளவும்.

10 - 08 - 96 யாழ். செயலக சுற்றறிக்கை பி டி/ ஈ. எஸ்/எஸ்/242 இன் படி தாமதக் கட்டணங்கள் அறவிடப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

நன்றி
சி. வேதாரணியம் — தலைவர்
S. S. மரியநாயகம் — செயலாளர்

விசேட பொதுக்கூட்டம்
எதிர்வரும் 05-01-98 திங்கள் காலை 9 மணிக்கு விசேட பொதுக்கூட்டம் சங்கப் பணிமனையில் நடைபெறும். அங்கத்தவர்கள், சாரதிகள் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
சி. வேதாரணியம் — தலைவர்
S. S. மரியநாயகம் — செயலாளர்
(சி/2537)

சாவகச்சேரி நகர்
பாரதி பாலர் கழகம்
32 ஆவது ஆண்டு விழா
இடம்: நுணாவில் கிழக்கு யா/ அமிர்தாம்பிகை வித்தியாசாலை, சாவகச்சேரி. (யூனியன் பேக்கறி முன்பாக)
காலம்: 04 - 01 - 1998 ஞாயிறு மு. ப. 10 மணி (புதிய நேரம்)
தலைமை: திருமதி புனிதவதி இராமலிங்கம்
'பாரதி பாலர் கழக இயக்குநர் சபை'
தென்மராட்சி
இந்து இளைஞர் ஒன்றியம்.
இலங்கை வங்கி வீதி,
சாவகச்சேரி.
(52341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போக்குவரத்துப் பிரச்சினை: விரைவில் தீர்க்க ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜன. 3

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பாக ஆராய ஒருவார காலத்தில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வதாக ஜனாதிபதி உறுதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியுடன் கடந்த திங்களன்று நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஈ.பி.டி.பி தூதுக்குழுவினர் மக்கள் அனுபவிக்கும் போக்குவரத்துப் பிரச்சினை குறித்து விளக்கினார். இதற்குப்பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்த ஏனைய விடயங்கள் வருமாறு!

★ வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் பிற மாவட்டங்களுக்குச் செல்ல அல்லது வவுனியாவில் வசிப்பதற்கான பாஸ் அனுமதி முறையை நீக்கல்:

★ திருமலை - யாழ்ப்பாணத்துக்கான கப்பல் போக்குவரத்தை சீராக நடைபெற நடவடிக்கை எடுத்தல்.

★ யாழ்ப்பாணத்துக்கான பிரயாண அனுமதி முறையை நீக்கல்,

★ யாழ். - கொழும்பு விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு முன் அனுமதி பெறல் மற்றும் விமான டிக்கட் போன்றவற்றில் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் நீக்கல்.

★ கொழும்பு மற்றும் வடக்கு- கிழக்கில் அடாவடித்தனமான கைதுகள், சித்திரவதை என்பன நிறுத்தல்.

★ களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகள் மீதான படுகொலைத் தாக்குதல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படாமை' இன்னும் களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளுக்கு பாதுகாப்பு தொடர்பான விடயங்கள்:

★ அம்பாறை 4 ஆம் காலனி மக்கள் மீதான பொலிஸாரின் அட்டூழியம்.

★ யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கணனிகள் கொண்டு செல்ல பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாமை.

(உ-3)

## வெற்றி உறுதி படையினருக்கு செங்கண்மாரி தடுப்பூசி

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மத்தியில் செங்கண்மாரி நோய் பரவுவதைத் தடுப்பதற்கு இராணுவத் தளபதி தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற் கட்டமாக தற்போது இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரில் 5ஆயிரத்து 620 படைவீரர்களுக்கு செங்கண்மாரி நோய்க்கான முதற்கட்ட தடுப்பூசியும், 3 ஆயிரத்து 896 படைவீரர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் 150 படைவீரர்களுக்கு பூரண தடுப்பூசியும் போடப்பட்டுள்ளன.

மேற்படி நோய் தொடர்பாக படையினர் மத்தியில் உருவாகும் அச்சத்தைப் போக்குவதற்கான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள் படையினருக்கு வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

## குடிதண்ணீரில் தொற்று நீக்க படையினருக்கு மாத்திரைகள்

கொழும்பு, ஜன. 3

வன்னியில் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினருக்கு சுகாதார அமைச்சு ஒரு தொகுதி மாத்திரைகளை அனுப்பிவைத்துள்ளது.

குடி தண்ணீரில் காணப்படும் கிருமிகளை அழிப்பதற்காக இம்மாத்திரைகள் பயன்படுத்தப்படும்.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினர் மத்தியில் நீர்சம்பந்தப்பட்ட நோய்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-21-7)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜன.3

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று முதல் தொடர்ந்து 10 நாள்களுக்கு திருவெம்பாவை பூஜை இடம்பெறவுள்ளது.

(ஐ)

★ ★ ★

நல்லை ஆதீனத்தில் நாளை ஞாயிறு காலை 9 மணி முதல் திருவாசக முற்றோதல் ஆதீன முதல்வர் தலைமையில் இடம் பெறும்.

(ஐ-30)

★ ★ ★

நல்லூர் வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் கதைப் படிப்பு பூர்த்தியை ஒட்டி இன்று காலை 9 மணிக்கு விசேடமாக, அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

(ஐ)

★ ★ ★

சாவகச்சேரி சப்பச்சிமாவடி ஸ்ரீசக்கராழ்வார் தேவஸ்தானத்தில் மார்கழி ஞாயிறு மூன்றாம் வாரத்தை ஒட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்கவுள்ளார்.

(ஐ)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முதல் தினமும் காலை 6.00 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி ஓதுதலும் தொடர்ந்து அபிஷேகமும், காலை 6.30 மணிக்கு பூஜையும் நடைபெறும்.

(ஐ-154)

★ ★ ★

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப்பிள்ளையார், மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆகிய கோயில்களில் திருவெம்பாவை விழாக்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

(ஐ-111)

★ ★ ★

நெடுந்தீவு மத்தி பெருக்கடிபிள்ளையார் கோயிலில் திருவெம்பாவை விழா கடந்த புதினைந்து ஆண்டுகளின் சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி பத்து நாள்கள் நடைபெறும் விழாவில் இறுதி நாளன்று ஆருத்ரா தரிசனமும் இடம் பெறும்.

(ஐ-111)

★ ★ ★

கல்வயல் அருள்மிகு வேதவனப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனி காலை விசேட பூசைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். தேர்த்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஐ-31)

★ ★ ★

கந்தரோடை அருள்மிகு வற்றாக்கைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பிகாதேவி சமேத விஸ்வநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு, இன்று முதல் தினமும் காலை மூலமூர்த்திகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

(ஐ-8)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்திபம்பதி அருள் மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் கோயிலில் இன்று சனிக்கிழமை அதிகாலை 5-30 மணிக்கு உதயத்தின் முன் திருவெம்பாவை பூசை, வழிபாடுகள் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

மேலைப்புலோலி தம்பகிட்டி ஸ்ரீபண்டாரி அம்மன் கோயிலில் திருவெம்பாவையை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முதல் தொடர்ந்து பத்து தினங்களுக்கு தொடர் சொற்பொழிவு இடம் பெறும்.

''பரமனைப் பரவிய பாவையர்'' என்னும் தலைப்பில் இந்து மறுமலர்ச்சி ஆதீன குருமார் அர்ச்சகர் மகாசபையின் அமைப்பாளர் சிவத்திரு அழகு ஜெகதீஸ்வர தேசிகர் இத்தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

இத்தொடர் சொற்பொழிவு தினமும் காலை 5.30 மணிக்கு இடம்பெறும்.

## உள்ளூராட்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

உத்திகளும் அதனால் ஏற்படும் மோதல்களும் வேடிக்கையாகவும் போகலாம்; விபரீதமாகவும் மாறலாம்.

தேர்தல் திருவிழா அரங்கேற இன்னும் 26 நாள்களே இருக்கின்றன. இதற்குள் சஞ்சீவி வாசகர் ஒருவர் நியாயமான கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றார். அது இதுதான்:—

தேர்தல் என்றால் — அதுவும் உள்ளூராட்சித் தேர்தல் என்றால் — முதலில் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் என்பது உள்ளூர் மக்களுக்குத் தெரிய வேண்டும். சில இடங்களில் போட்டியிடும் ஒரிரு முதன்மை வேட்பாளர்களைத் தவிர மற்றைய வேட்பாளர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியவே தெரியாது. அத்தகைய வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலை எங்கேயாவது தேடிப்பிடித்துப் பார்வையிட்டாலும் கூட, அப்படி நபர்—உயிருள்ள மனிதன் — இருக்கின்றாரா என்பது கூடத் தெரியவில்லை. எனவே போஸ்டர்களுக்கும், சின்னம் பொறிப்பதற்கும் லட்சக் கணக்கான ரூபாவை செலவிடும் கட்சிகள், தமது வேட்பாளர்களின் படங்கள், விலாசம், குறிப்புகள், விவரங்கள், அவர் செய்த பொதுச்சேவை ஆகியவற்றை சிறுசிறு கைநூல்களாக அச்சிட்டு மக்களிடம் தந்தாலாவது அதில் ஏதேனும் முகம் தங்களுக்குத் தெரிகின்றதா என்று பார்த்து மக்கள் வாக்களிக்க முடியும். யார், எவர் என்று தெரியாமல் யாருக்கு வாக்களிப்பது?— இது அந்த வாசகரின் கேள்வி.

அவரின் இந்த நியாயமான கோரிக்கை பிரசாரத்துக்குப் பணத்தை வாரி இறைக்கும் கட்சிகளுக்கு சமர்ப்பணம்.

## அரங்கு

குடாநாட்டில்தேர்தல் வந்ததுதான்வந்தது.வீட்டுச் சொந்தக் காரர்கள் பாடு அதோ பாடாய்ப் போய்விட்டது.

''கட்சிச் சுலோகங்களை — சின்னங்களை — ஒட்டும், 'பெயின்ட்' மூலம் பொறிக்கும் கோஷ்டிகளிடமிருந்து வீட்டுச் சுவர்கள், கட்டடங்களைக் காப்பாற்ற விசேட பாதுகாப்பு அதிகாரிகளைப் போட வேண்டியிருக்கின்றது — எனச் சீறுகின்றார் ஒரு யாழ்ப்பாணத்துக்காரர்.

அதுவும் இருட்டிய பிறகு — ஊரடங்கு நடைமுறைக்கு வரும் 9 மணிக்கு முன்னர் — மூச்சு விடாமல் காதும் காதும் வைத்தால் போல் காரியத்தை கனகச்சிதமாகச் செய்து விட்டுப் போகும் கோஷ்டிகளால்தான் அதிக நெருக்கடி.

அங்கிங் கெனாதபடி நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைப் போல் யாழ். நகர் எங்கும் இப்போது இடம் பெற்றிருப்பது கட்சிகளின் சுலோகங்கள்தான்.

போஸ்டர், பசைவாளி, ஸ்பிறே பெயிண்ட், லாண்ட்மாஸ்டரில் பொருத்தப்பட்ட 'ஜெனரேட்டர்', 'கொம்பிறஷர்' ஆகியவை சகிதம் அலையும் குழுக்கள், தங்கள் கட்சியின் பெயரையும் சின்னத்தையும், கொள்கைகளையும் பிரசாரப் படுத்துகின்றார்களோஇல்லையோ, சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர்களின் வாக்குகளை மட்டும் தமது கட்சிக்கு எதிராக மாற்றிவிடுகின்றார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

கட்சித் தலைவர்களுக்கு இது விளங்குமோ என்னமோ?

நகரைச் சுத்தப்படுத்தி, அழகுபடுத்தும் பதவிக்கு போட்டி போடும் கட்சிகள் இத்தகைய போஸ்டர்கள், சின்னங்களைப் பொறிக்கும் வேலைகளால் நகரை அசுத்தப்படுத்தலாமா?

★ ★ ★ ★

போதியளவு ஜெனரேட்டர் வசதிகள், மின் விநியோக உபகரண வசதிகள் போன்றவை இல்லாத போதும் கிடைத்ததை வைத்துக் கொண்டு தன்னால் இயன்ற சேவையை — முடிந்தளவுக்கு — வழங்கி வருகின்றது இலங்கை மின்சாரசபையின் யாழ். பிராந்தியப் பிரிவு.

மின்சார சபையின் பணிகளுக்கு இடையூறாக, குழப்பங்களைப் பண்ணி, சபைக்கு கெட்ட பெயர் தேடித் தரும் நோக்குடன் சில கும்பல்கள் செயற்படுவதாக அங்கலாய்க்கின்றார் மின்சாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர்.

யாழ். மாநகரசபைப் பிரதேசத்திற்குள் நவீன முறையிலான—பல வயர்களை ஒன்றாகக் கொண்ட ஒரு 'கோட்' வயர் மூலம்— மின்சாரத்தை விநியோகிக்கும் முறையை நடைமுறைப்படுத்தியதை அடுத்து நகரப் பகுதியில் 'கள்ளக் கரண்ட்' தில்லுமுல்லு அடியோடு குறைந்து விட்டது. அதையும் மீறி 'கள்ளக் கரண்ட்' எடுத்த ஒரு சில பேர்வழிகள் சபையிடம் வகையாக மாட்டிக் கொண்டதால், அப்பிரச்சினை நகரில் இல்லை என்று கூறுமளவுக்குக் குறைந்துவிட்டது.

ஆனால் வெளியிடங்களில் இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இலங்கை மின்சார சபை தன்னிடம் ஊழியர் பற்றாக்குறை இருப்பதால், வீதிகளில் மின் விநியோகக் கம்பிகளை இழுக்கும் வேலையை சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருக்கின்றது. ஆனால் வீதியில் உள்ள மின்சாரக் கம்பிகளில் இருந்து வீடுகளுக்கு மின் விநியோகத்துக்கான இணைப்பை வழங்கும் பொறுப்பை சபை முற்றும் முழுதாக தன்னிடமே வைத்துள்ளது. சில பிரதேச சபைகளில் பணியாற்றும் ஊழியர்கள் பொதுமக்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் வேலையை தம்பாட்டில் தாராளமாகச் செய்து வருகின்றார்களாம்.

கல்வியங்காடுப் பகுதியில் இவ்வாறு பணம் சுருட்டிய சிலர் சிக்கியிருப்பதாக மின்சார சபை உயரதிகாரி ஒருவர் சொன்னார். சம்பந்தப்பட்டோருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியுடன் கூறினார் அவர்.

''ஏற்கனவே இடம்பெயர்வுக்கு முன்னர் மின் இணைப்புப் பெற்றிருந்த எந்த வீட்டுக்கும் மீண்டும் இணைப்பு வழங்க எதுவித கட்டணமும் இல்லை. இலவசமாக மின் இணைப்புக் கொடுக்கப்படும். புதிதாக இணைப்பு வழங்கவே கட்டணம் அறவிடப்படும். அவ்வாறு மின்சார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் எதுவும் வங்கிகள் மூலமாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே மின்சார சபையின் பெயரில் அல்லது மின் விநியோக இணைப்புப் பெறுவதற்காக யாருக்கும் யாரும் பணம் கொடுக்கக் கூடாது. அப்படி ஊழியர்கள் யாராவது பணம், நிதி கேட்டால் உடனடியாக சபைக்கு அறிவித்தால் தக்க நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும். பொதுமக்கள் இது விடயத்தில் ஒத்துழைப்பதன் மூலமே ஊழலை ஒழிக்க முடியும்.''— என்று அவர் சொன்னார்.

''மின் இணைப்பு மற்றும் விநியோகப் பணிக்கு வருபவர், அதற்காக மின் கம்பங்களில் ஏறுபவர் போன்றோர் சபையின் ஊழியரா அல்லது சபையால் அப்பணிக்கு அமர்த்தப்பட்டவரா என்பதை பொதுமக்கள் விசாரித்து உறுதிப்படுத்துவதன் மூலமும் மோசடிப் பேர்வழிகளைப் பிடிக்க முடியும்''— என்றும் அவர் குறிப்பிட்டார்.


★ ★ ★ ★

காங்கேசனில் 10 மெகா வாட்ஸ் வலு ஜெனரேற்றர்களை ஸ்தாபித்து அங்கிருந்து குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. ஆனால் முக்கியமான ஒன்றை மறந்து விட்டார்களாம். இவ்வளவு மின்சாரம் தயாரிப்பதற்கு ஒரு நாளுக்கு சுமார் 40 ஆயிரம் லீற்றர் டீஸல் தேவை. தட்டுப்பாடின்றி இவ்வளவு டீஸலைத் தருவிப்பது குறித்தும் அதைக் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் பற்றியும் ஆராயாமல் திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டனராம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் அ. தி. மு. கவின் கூட்டணி




## பாலர் பாடசாலை திறப்பு

வடமராட்சி, ஜன. 3
தென்பு லோலி துறையா மூலை இலங்கேஸ்வரன் சன சமூக நிலைய பாலர் பாட சாலை இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செய வர் ஆ. சிவசாமியினால் திறந்துவைக்கப்படும்.
(ஐ-173)

## வ. பி. போ. ச. ஊழியர் சம்பளம்

வட பிராந்திய போக்கு வரத்துச் சபை ஊழியர்களின் மார்கழி மாதச் சம்பளம் முழுமையாக எதிர்வரும் திங் கட்கிழமை வழங்கப்பட விருக் கின்றது.

இதற்கென சுமார் இருபது இலட்சம் ரூபா கொழும்பிலி ருந்து அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் வி. என். சொக்கலிங்கம் தெரி வித்துள்ளார். (உ-109)

# புலிகளை ஒழித்துக் கட்டினாலும் அவர்கள் மீண்டும் தலைதூக்குவர்

## அதுவே யதார்த்தம் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு. ஜன. 3
ஒழிக்க. ஒழிக்க ஜே.வி.பி யினர் தலை தூக்குவது போல விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டினாலும் அவர் கள் மீண்டும் தலைதூக்கவே செய்வார்கள். எனவே இன்று நாடு உள்ள சூழ் நிலையில் நாட்டைக் காப் பாற்ற வேண்டுமானால் அர சியல் தீர்வு யோசனைகள் மூலம் சமாதானத்தை ஏற் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இதிலி ருந்து நாம் தவறுவோமா னால் நாடு சிதறுண்டு போவதைத் தடுக்க முடி யாது போய்விடும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்க இவ்வாறு தெரிவித் தார்.

காலி கோட்டை மைதா னத்தில் நடைபெற்ற மக்கள் வங்கியின் 'சுரதுர' கடன் வழங்கும் திட்டத்தின் அறி முக வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

கஷ்டங்கள், ன்பங்கள் அற்பமாகவுள்ளன சிங்கள வர் மத்தியிலிருந்து எழுந்த ஜே. வி, பி இயக்கத்தின ருக்கு எதிராக மூன்றுமுறை நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் ஒழிக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது மீண் டும் ஜே. வி. பி தலைதூக்கி வருகிறது.

இதேபோல கஷ்டங்கள், குறைபாடுகள், வறுமை என் பன பெருமளவு உள்ள வட பகுதியில் தோன்றிய புலி களை ஒழித்துக் கட்டினா லும் புலிகள் இயக்கம் மீண் டும் தோன்றாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ரோகண விஜேவீர ஒழிக் கப்பட்டார். நடந்ததென்ன? மேலும் பல விஜேவீரக் கள் உருவாகவில்லையா? அதுபோல பிரபாகரனை ஒழித்துக் கட்டலாம். ஆனால் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகுவார்கள் இதுதான் யதார்த்தம்.

எனவே சிங்கள மக்கள் இதனைத் தீர்க்க தரிசனத் தோடு உணர்ந்து நாட் டைக் காப்பாற்ற அரசுக்கு உதவ வேண்டும்.

எமது நாட்டைப்பொறுத்த வரை வேலை வாய்ப்புத் தான் ஒரு பாரிய பிரச்சி னையாகவுள்ளது. இந்த வேலைவாய்ப்புப் பிரச்சினை யால்தான் தீவிரவாத நட வடிக்கைகளும் சிவில் யுத்தங் களும் உருவாகின.

ஜே. வி. பி இயக்கமும் எல் ரி. ரி. ஈ இயக்கமும் இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட விரக்தியைப் பயன்படுத்தி போராட்டங் களை ஆரம்பித்து தீவிர வாத செயல்களில் அவர் களை நாட்டம் கொள்ளச் செய்தன. அதன் விளை வையே நாடு இன்று அனு பவிக்கிறது.

இந்த நாட்டைக் காப் பாற்ற வேண்டுமானால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் அப் பொழுதுதான் யுத்தத்திற்கு செலவாகும் பணத்தை நாட் டின் அபிவிருத்திக்குப் பயன் படுத்த முடியும். இப்படிச் செய்தால் மட்டுமே இளை ஞர் மத்தியில் தோன்றியுள்ள வேலை வாய்ப்பு இன்மை யைப் போக்க முடியும். இதனை நோக்கமாகக் கொண்டே அரசு தீர்வு யோசனையை முன் வைத் துள்ளது. என்றார். [ஐ-7]

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு சமுர்த்தி முகவர் நியமனம்

## விண்ணப்பங்கள் செயலகத்தில் பெறலாம்

யாழ். மாவட்டத்தில்வேலை யற்ற பட்டதாரிகளுக்கு சமுர்த்தி முகவர் நியமனம் விரைவில் வழங்கப்படவிருக் கிறது.

இந்தப்பதவிக்கான விண் ணப்ப படிவங்கள் இன்று முதல் மூன்று தினங்களுக்கு யாழ். செயலக திட்டமிடல் கிளையில் வைத்து வழங் கப்படவுள்ளன.

பட்டதாரிச் சான்றிதழ் களைச் சமர்ப்பித்து படிவத் தைப் பெற்று பூர்த்தி செய்து உடனடியாகவே மீளக் கையளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
(ஐ- 3 - 9)

# மீண்டும் அஸார் இந்தியக் கப்டன்!

## டெண்டுல்கர் 'அவுட்'!!

புதுடில்லி, ஜன. 8
இந்தியாவின் கிரிக்கெட் அணித் தலைவர் பதவியில் இருந்து சச்சின் டெண்டுல்கர் நீக்கப்பட்டார். மீண்டும் புதிய கப்டனாக ஏப்ரல் மத்தி வரை முகமட் அஸா ருதீன் நியமிக்கப்பட்டிருக்கின் றார்.

நேற்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தேர்வாளர்கள் ஐவரும் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

கடந்த ஆண்டில் டெண் டுல்கர் தலைமையில் 12 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கு பற்றிய இந்திய அணி அதில் ஒன்றில் கூட வெற்றி பெற வில்லை; 39 ஒரு நாள் ஆட் டங்களில் பத்தில் மட்டுமே இந்திய அணியால் வெல்ல முடிந்தது.

1996 ஒகஸ்டில் இந்திய கப்டன் பதவியை டெண்டுல் கர் ஏற்ற பின்னர் இதுவரை நடந்த 17 டெஸ்ட் ஆட்டங் நாள் ஆட்டங்களில் 17 இலும் மட்டுமே இந்தியா வெற்றி பெற்றது.

டெண்டுல்கரின் தலைமை யின் கீழ் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை ஆகிய நாடுகளுடன் அந்தந்த நாடுகளில் நடை பெற்ற ஆட்டத் தொடர் களில் இந்தியா மண் கவ்வி யது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 10 ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகும் — மூன்று நாடுகள் பங்குபற்றும் — கிரிக்கெட் தொடரின் போதும் —

மார்ச் மாதம் ஆஸ்திரேலி யாவுக்கு எதிராக இந்தியா வில் நடைபெறும் கிரிக்கெட் தொடரின் போதும் —

ஏப்ரலில் மூன்று நாடு களுக்கு இடையில் இந்தியா வில் நடைபெறும் கிரிக்கெட் மோதலின் போதும் —

இந்திய அணிக்கு அஸா ருதீன் தலைமை வகிப்பார்.

## நூல் வெளியீடு

ஸ்ரீலலிதாம்பிகை பேராயி ரம் தொகுத்த "பாராயண தோத்திரம்" நூல் வெளி யீட்டு விழா நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணி முதல் அளவெட்டி அருள்மிகு ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயத்தில் இந்து சமயப் பேரவையின் உப தலைவர் ஆ. மகாலிங்கம் தலைமை யில் நடைபெறும்.

மாவியப்பிட்டி ஸ்ரீ தென் கைலாச சிவன் சந்நிதான முன்றலில் இருந்து காலை [illegible] மையில் நூறு பிரதிகள் ஊர் வலமாக விழா அரங்கிற்கு [illegible]

# ஆயுதங்களின்றியே பணிபுரிவோம்!

## ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 3
"நாம் ஜனநாயக வழிக்கு வந்தவர்கள். பொது மக்கள் மத்தியில் ஆயுதங்கள் இல்லா மலேயே வேலை செய்ய விரும் புகின்றோம்."

— இவ்வாறு விளக்கமளித் திருக்கின்றது ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு.

நேற்று அந்த அமைப்பு விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டி ருக்கின்றது. அந்த அறிக்கை யில் கூறப்பட்டிருப்பதாவது:

தேர்தலுக்காக யாழ்ப்பா ணத்திலுள்ள அரசியல் கட்சி களுக்கு ஆயுதங்கள் வழங்கப் பட்டதாகக் கொழும்புப் பத் திரிகைகளை மேற்கோள் காட்டி உதயன் பத்திரிகை யில் செய்தி வெளியிடப்பட் டது.

எம்மைப் பொறுத்தவரை அவ்வாறு ஓர் இரும்புத்துண்டு கூட வழங்கப்படவில்லை. நாங்கள் கேட்கவுமில்லை; கேட்கவும் மாட்டோம்.

ஏனெனில் நாங்கள் ஜன நாயக வழிக்கு வந்தவர்கள். பொதுமக்கள் மத்தியில் ஆயு தங்கள் இல்லாமலேயே வேலை செய்ய விரும்புகின் றோம். ஆயுதங்களற்ற வெகு ஜன இயக்கத்தைக் கட்டி எழுப்புவதே எமது நோக்க மாகும்.

1992 இல் எமது இரண் டாவது மாநாட்டின் தீர்மா னத்தின் அடிப்படையிலேயே செயற்படுகின்றோம். அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானமும் இது தான்.

மக்களின் அரசியல் அபிலா ஷைகளைப் பிரதிபலிக்கும் இயக்கமாகவே எமது இயக் கத்தைக் கட்டியெழுப்பவிருக் கிறோம் — என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:-

நேற்று உதயனில் "தமிழ்க் கட்சிகள் தமது ஆயுத பலத்தை அதிகரிப்பதற்கு அர சாங்கம் அனுமதி" என்ற தலைப்பில் வெளியான செய் தியில் —

"உள்ளூராட்சித் தேர்த லில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் யாழ். குடாநாட்டி லும்தீவுப்பகுதிகளிலும் உள்ள தமது ஆயுதக் குழுக்களின் பலத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளித் திருப்பதாக" மட்டுமே தெரி விக்கப்பட்டிருந்தது.

நேர்தலுக்காக யாழ்ப்பா ணத்தில்உள்ள அரசியல் கட்சி களுக்கு ஆயுதங்கள் வழங் கப்பட்டதாக அச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை.
(ஆ-ர்)

## பட்டதாரி ஆசிரியர் கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜன. 3
யாழ். பட்டதாரி ஆசிரியர் களது புதியசம்பள திட்டமும், எதிர்கால வளர்ச்சியும், ஒருங் கமைப்பும் பற்றிய கலந் துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடை பெறும் என யாழ். பட்டதாரி ஆசிரியர் நலன்புரிக் கழகத் தின் பொதுச் செயலாளர் வே. கே. தனபாலன் தெரி வித்தார். (உ-30)

### நாளை

**மார்கழி 20**

ஞாயிற்றுக்கிழமை

திதி: ஷஷ்டி
பிற்பகல் 1.24 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 3.54 வரை.
சுபநேரம்: 9.31-11.01
ராகுகாலம்: 5.01-6.31
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நீர் விநியோகம் மறுசீரமைப்பு

நெடுந்தீவு, ஜன. 3
ஜேர்மன் தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவுக்கான குடிதண் ணீர் விநியோகச் சேவைகள் மறுசீரமைப்புச் செய்யப் படும்.

ஜேர்மன் தொழில் நுட்ப உதவித் திட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அண்மையில் நெடுந்தீவுக்கு வருகைதந்து குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தைப் பார்வையிட்ட னர்.

தற்சமயம் சிதைந்து கிடக் கும் நீர் விநியோகத் தொட் டியைப் புனரமைக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது.
(ஐ-111)

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 3
கடந்தமாதம் நடைபெற்று முடிந்த ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் களை மதிப்பீடு செய்யும் பணி கள் நேற்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் ஆரம்பமாகின.

30 பிரதம மதிப்பீட்டாளர் களின் கீழ் 350 ஆசிரியர்கள் பரீட்சகர்களாகக் கடமை யாற்றுகின்றனர்.

12 வருடங்களுக்குப் பின்பு முதல் தடவையாக யாழ்ப்பா ணத்தில் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் நடைபெறுவது குறிப்பிடத் தக்கது. (உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்துக!

## சமாதானப் பேரவை கோரும்

கொழும்பு, ஜன. 3

''யுத்தம் தொடர்வதை நாம் கவலையுடன் கண்டிக்கிறோம். நியாயமான தீர்வையும் கௌரவமான சமாதானத்தையும் எட்டுவதற்கு காலதாமதமின்றி பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி புலிகளையும் அரசையும் கோருகின்றோம்.''

—இவ்வாறு வேண்டுகோள் விடுக்கும் பிரேரணை ஒன்று இன்றைய தினம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெறும் தேசிய சமாதானப் பேரவைப் பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது

இந்த மாநாட்டில் மட்டக்களப்பில் இருந்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானத்தில் இடம்பெறும் விடயங்கள் வருமாறு:-

சமாதானத்துக்கான யுத்தம் இது என்று கூறப்படுவதை நாம் ஏற்க முடியாது. எங்களுக்காக யுத்தம் செய்ய வேண்டாம் என்று கோருகின்றோம்.

எல்லா சமூகங்களினதும் எதிர்காலத்தை சமமான — கௌரவமான — அடிப்படையில் நிர்ணயிக்கின்ற நியாயமான சமாதானமே தேவையானது.

கௌரவமான — நியாயமான — தீர்வு கிட்டாமல் அடிப்படை முரண்பாட்டை உருவாக்கிய அமைப்பு முறையை முறையான ஜனநாயக அரசின் மூலமும் சமூகத்தின் மூலமும் அகற்ற வேண்டும்.

அதற்கு அரசமைப்பு திருத்தப்படுவது அவசியமாகும்.

யுத்தத்தினால், மனித உரிமைகள் மீறப்படுவது சர்வசாதாரணமாகி வருகின்றது. இரு தரப்பிலும் இளைஞர், யுவதிகளின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் யுத்தத்தினால் பணயம் வைக்கப்பட்டுள்ளனர். யுத்தத்துக்கு செலவிடப்படும் பல நூறு கோடி ரூபாக்களை ஏழ்மை ஒழிப்புக்குச் செலவிட முடியும்.

எந்த முன் நிபந்தனையுமின்றி—

சம கௌரவத்துடன்—

இரு தரப்பினரும் இணங்கும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்—

நாட்டின் சுயாதிபத்தியத்தைக் காக்கும் விதத்தில்—

பேச்சுக்களை ஆரம்பித்து நடத்த வேண்டும். (உ-9)


உ

சிவமயம்

வண்ணை ஸ்ரீ சாந்தையர்மடம்

### ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

### விநாயகசஷ்டி விரதம்

காலம்: 03-01-98 சனிக்கிழமை

நிகழ்ச்சி:

காலை 7.00 மணி காலைப்பூசை,

காலை 8.30 மணி சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்

பகல் 10,30 மணி கணபதி ஹோமம்

பகல் 11.30 மணி சங்காபிஷேகம்

பி. ப. 2.00 மணி பிள்ளையார் கதைப்படிப்பு

பி. ப. 2.30 மணி மாலைப்பூசை

பி. ப. 3.00 மணி ஸ்ரீபஞ்சமுக விநாயகருக்கு விசேட பூசை

பி. ப. 3,30 மணி

ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் உற்சவமும் கயமுகாசூரசங்காரமும்

அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்

மங்கள இசை:

நாதஸ்வர கான கலாரத்தினம்
N. R. சுந்தரமூர்த்தி

தவில்வித்துவான்
லயஞானதிலகம்
P. கணேசன்

அளவெட்டி நாதஸ்வரவித்துவான்கள்
R. கேதீஸ்வரன்
K. செல்வரத்தினம்

தவில்வித்துவான்கள்
லயஞானகலாநிதி
T. உதயசங்கர்
K. சிவமூர்த்தி

நாதஸ்வர இசைச்செல்வன்
K. ரத்தினகுமார் குழுவினர்
[மாக்கையா]

உபயம்-

புஸ்பா அன் கோ
யாழ்ப்பாணம்.

(சி/2553)


# வலி.மேற்கில் நான்கு இடங்களில் நீர் விநியோக திட்ட புனரமைப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நான்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களைப் புனரமைப்பு செய்வதற்கு ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

பொன்னாலை, அராலி வடக்கு, அராலி தெற்கு, சங்கரத்தை ஆகிய இடங்களிலுள்ள நீர் விநியோகத் திட்டங்களே இவ்வாறு புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ்வருடத்தில் (1998) முதல் ஆறு மாதகாலப்பகுதியில் இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க இதற்கான வேலைகளை மேற்கொள்வதற்காக சங்கானையிலுள்ள வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் வெளிக்கள அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கான உபகரணங்களையும், பொருள்களையும் ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கும். பொது மக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளதாக வலி. மேற்கு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-135]

## பரீட்சை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறியின் பரீட்சைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இப்பாடநெறியினைப் பயின்ற மாணவர்கள் தத்தமது பிரதேச இளைஞர் சேவைகள் அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பரீட்சையில் தோற்றுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அதிகாரி தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# ஈ. பி. ஆர். எல். எவ். குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 3

பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வேலணை பிரதேச சபைப் பகுதிக்குச் சென்ற தமது கட்சி உறுப்பினர்களுடன் மற்றொரு தமிழ்க் கட்சியின் வேட்பாளர் மது போதையில் வாய்த் தகராறில் ஈடுபட்டதாக ஈ.பி.ஆர்.எல் எவ். அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று முன் தினம் வேலணைப் பிரதேச சபைப் பகுதிக்கு பிரசாரத்திற்குச் சென்ற போது எமது கட்சித் தோழர்களுடன் மற்றொரு கட்சியின் வேட்பாளர் ஒருவர் மது போதையில் நின்று கூட்டத்தைக் கூட்டி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதோடு அங்கு ஒட்டப்பட்ட எமது கட்சியின் போஸ்டர்களையும் கிழித்தெறிந்தார்.

இது ஒரு ஜனநாயகவிரோத அநாகரிகச் செயல். இந்தச் செயலை ஈ.பி ஆர்.எல்.எவ். வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே நாம் கூறிக்கொண்டதை திரும்பவும் வலியுறுத்த விரும்புகின்றோம். தேர்தலில் பங்குபற்றும் கட்சிகள் தாம் போட்டியிடும் எந்தவொரு தேர்தல் பகுதிக்கும் சென்று வர உரிமையுடையன. நடைபெற்ற சம்பவங்கள் அந்த உரிமையை மீறும் செயலாகும்.

ஜனநாயக வழிக்கு வந்ததாகக் கூறப்படும் சம்பந்தப்பட்ட கட்சியினர் இதனை விளங்கிக்கொள்ளாது செயற்படுவது துரதிர்ஷ்டவசமான விடயமே. இனிமேலாவது தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஈ.பி ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

'தீவுப் பகுதியில் பிரசாரம் செய்யமுடியாத நிலை குறித்து தாங்கள் கூட்டிய மாநாட்டில் நாம் முறையிட்டோம். அங்கு அதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்று உறுதி கூறியிருந்தீர்கள். அதன் பின்பே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்ய யாழ். பொலீஸ் நிலையத்துக்குச் சென்றோம். அங்கு முறைப்பாடு ஏற்கப்படவில்லை. ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அங்கு தெரிவிக்கப்பட்டது.

தீவுப் பகுதியில் பிரசாரம் செய்ய சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும்—என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-3)

## கைகலப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணைகளை நடத்திவரும் அதே நேரத்தில் —

இச்சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவரும், அவரது சகோதரனும் பொலீஸில் சரண் அடைந்துள்ளனர். (உ-3)

## தரித்து...

(முதலாம் பக்கத் தொடர்)

ஹெலியில் நெருப்புப் பற்றியதாக இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

அந்த ஹெலியில்வந்த உணவுப் பொருள்களை அங்கே இறக்கிவிட்டு அங்கிருந்து காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்ல திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

## கூட்டணி..

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டன.

(வழக்குத் தாக்கல் பற்றிய செய்தி கிடைக்க முன்னர் வரையப்பட்ட ''உள்ளும் புறமும்'' கட்டுரை சஞ்சிகையின் 11 ஆம் பக்கத்தில்.)

## இத்தாலிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பல் ஒன்றில் இவர்களை ஏற்றி வந்த கப்பல் ஊழியர்கள், இவர்களிடமிருந்த பொருள்களைச் சூறையாடிவிட்டு அவர்களை நடுக்கடலில் விட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த அகதிகளில் சிலர் வைத்திய சிகிச்சைக்காக இத்தாலி ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அகதிகள்விடயத்தில் தாராளக் கொள்கையைக் கடைப்பிடிப்பதால் இத்தாலிக்குள் சட்ட விரோதமாக அகதிகள் நுழைவது அதிகரித்து வருகின்றது. (உ-3)


## மரண அறிவித்தல்

### சொ. பஞ்சாட்சர ஐயர்

[பஞ்சன ஐயர்]

புங்குடுதீவு கிழக்கு, கலட்டி வரசித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சொ. பஞ்சாட்சர ஐயர் சிலாபத்தில் 28-12-1997 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாம்பாள் அம்மா, விஜயலக்ஷ்மி அம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி கண்ணம்மா அம்மா, இரத்தின ஐயரின் சகோதரரும், காலஞ்சென்ற சிவஸ்ரீ கணேசராஜக்குருக்கள், திருமதி கருணாகடாட்சி, தியாகராஜ ஐயர் (பாப்பா, சிலாபம்), சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் (பாலாக் குருக்கள், திருக்கேதீஸ்வரம், கொழும்பு முகத்துவாரம் பிள்ளையார் கோவில் பிரதம குரு), திருமதி சறோஜா, பஞ்சாட்சரக் குருக்கள் (கனடா), திருமதி விமலாம்பிகை சபாநாதக் குருக்கள் (மட்டுவில்), சிவஸ்ரீ கிருஷ்ணராஜக் குருக்கள் (ராசன் ஐயா, கனடா), சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி, கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி நாகரத்தின அம்மா, கணேசராஜக் குருக்கள், சிவஸ்ரீ தியாகராஜ ஐயர் (P.M. சிலாபம்), திருமதி ஜெகதாம்பிகை பாலசுப்பிரமணியக் குருக்கள் (கொழும்பு), சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் (கனடா), சிவஸ்ரீ சபாநாதக் குருக்கள் (மட்டுவில்), திருமதி ஜானகி கிருஷ்ணராஜக் குருக்கள் (கனடா), திருமதி ஜெயந்தி விஜயகுமாரக் குருக்கள் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03 01-98) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குச் சிலாபத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள்,
சிவஸ்ரீ ப. கிருஷ்ணராஜக் குருக்கள்,
சிவஸ்ரீ ப. விஜயகுமாரக் குருக்கள்.

108/33, குருணாகல் வீதி,
சிலாபம்.
தொலைபேசி: 03222035

(சி/2544)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03 01 98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்:

**நியூ பிரியங்கா**
**நகை மாளிகை**

177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(52119)

03 – 01 – 1998 சனிக்கிழமை

## கருத்துக் கலசம்

மயூரா

### நலம்பெற....

புதியன எப்போதும் முதலில் புதுமை பொலிந்தனவாகவே தோன்றும். புதியவற்றில் ஒரு வகை மலர்ச்சி காணப்படும். அந்த மலர்ச்சி மனதுக்கு இதமளிக்கும்; புத்துணர்வையும் புத்துணர்ச்சியையும் தரும்.

நேற்று முன்தினம் மலர்ந்த புத்தாண்டும் அத்தகு உணர்வையும், உணர்ச்சியையும் மக்கள் மனங்களில் தோற்றுவித்துள்ளது. புதியன பழையனவாகி விடுவது இயற்கை; இயல்பு; தவிர்க்க முடியாதது.

காலம் பொன்னானது. புதிய ஆண்டு பழையதாகிக் கழிந்து செல்லு முன்னர் அதனைத் தக்கபடி பயன்படுத்தப் பழக வேண்டும். இந்த வருடத்தில் தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் என்னென்ன புதிய பணிகளை ஆற்றலாம்; ஆற்ற முடியும்; ஆற்ற வேண்டும் என்பதனை திட்டமிடுவதற்குரிய காலம் இது.

கடந்த ஆண்டுகளிலும் சரி, இரண்டு நாள்களுக்கு முன்னர் கழிந்த வருடத்திலும் சரி, தமிழர்களின் வாழ்க்கை துன்ப துயரங்கள் மலிந்ததாகவே அமைந்தது. பல கஷ்டங்களுக்கும், பிரச்சினைகளுக்கும், சிரமங்களுக்கும் முகம் கொடுக்கும் அவலமுறும் நிலையே காணப்பட்டது. தனிநபர் ஒவ்வொருவரும், குடும்பம் ஒவ்வொன்றும், ஏதோ ஒரு வகையில் பாதிப்புற நேர்ந்தது.

சமூக மட்டத்திலும் பல புதிய பிரச்சினைகள், தாக்கங்கள் அனேகமாக சகல துறைகளிலும் தோன்றியுள்ளன.

சுயநலம் மிகுந்தவர்களாக நாம் – எமது சமூகம் — வாழப் பழக்கப்பட்டு விட்டதால் பல சீர்கேடுகளும் ஒழுங்கீனங்களும் மலிந்து விட்டன.

மற்றவர்களை முந்திக் கொள்ள முண்டியடித்தல், அடுத்தவனை கீழே விழுத்தி விட முனைதல், அவனை உயர்ந்து செல்லவிடாது குழி பறித்தல், தேவையற்ற குற்றச் சாட்டுகளைச் சொல்ல ஒருவனுக்கு எதிராகப் ''பெட்டிசன்'' அனுப்புதல் ஆகிய குணவியல்புகள் களையப்பட வேண்டும்.

எங்களை விடவும் ஆதரவற்றவர்கள், வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள், பல வகைகளாலும் நலிவுற்றவர்கள் நம்மிடையே அதிகரித்து விட்டார்கள் என்பதனைக் கவனத்தில் கொள்வது இன்றியமையாததாகும். அவர்கள் மீது அன்பு செலுத்தவும் ஆதரவு காட்டவும் எங்களது மனவியல்பை மாற்றிக் கொள்ளும் உணர்வு அவசியம்.

எதனையும் ஆக்கபூர்வமாகப் பார்க்கவும், செயற்படவும் ஆர்வம் கொள்வதே நல்லது. பின்னடைவோம்; பின்னிற்போம் என்ற அச்சமும் அசமந்தமும் தவிர்க்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டில் இவற்றில் கருத்துக் கொள்ளவும், நடைமுறையில் மாற்றிக் கொள்ளவும் சங்கற்பம் கொள்வோமாக. அதுவே வீடும் நாடும் நலம் பெற வழி செய்யும்.

# பாலைவனத்தில் போர் முழக்கம்!

ஆறு வருடங்களுக்கு முன் வளைகுடாப் போரில் ஈராக் பணிந்து பின்வாங்கிய பின், விவகாரம் முடிந்து விட்டது என்று மூட்டை கட்டிக் கொள்ள அமெரிக்கா தயாராக இல்லை.

உலக வர்த்தகச் சந்தையிலே முன்பிருந்தபடி ஈராக் தனது வியாபாரத்தைத் தொடர வேண்டுமானால், ஐ. நா. விதிக்கும் சில நிபந்தனைகளை அது ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இல்லையென்றால், ஈராக் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என்று தொடர்ந்து நிர்ப்பந்தம் செய்து வந்தது அமெரிக்கா.

''ஆக்கிரமித்த குவைத்தை விட்டுவிட்டதுடன் பகை முடிந்தது. மேலும் எங்களது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் கிடையாது'!' என்று கூறிய ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், அமெரிக்காவின் கெடுபிடிகளை நிராகரித்தார். விளைவு, ஈராக் மீது கடுமையான பொருளாதாரத் தடை.




தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் மசகு எண்ணெயில் ஐந்து சதவிகிதத்தைக் கூட ஏற்றுமதி செய்யமுடியாமல், வருமானம் இழந்து கடுமையான உணவுப்பற்றாக் குறை, பஞ்சம் என்ற நிலைக்கு ஈராக் தள்ளப்பட்டது. கடைசியில் வேறுவழியின்றி ஐ. நா.வின் சில நிபந்தனைகளை மட்டும் ஏற்றுக் கொண்டார் சதாம். அதைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்யும் எண்ணெய்க்குப் பதிலாக, அதற்கு ஈடான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்ள அனுமதி கிடைத்தது.

ஓரளவு சரியான நிலைமை வந்ததும் தனது அடுத்த கணையை எடுத்தது அமெரிக்கா. அந்தக் கணைக்குப் பெயர்தான் ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழு.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், எந்த ஒருபோரிலும் அணு ஆயுதங்களையோ, இரசாயன அல்லது விஷ நுண்ணுயிர் ஆயுதங்களையோ பிரயோகிக்கக் கூடாது என்று ஐ. நா. பாதுகாப்புக்குழு ஏற்கெனவே தடை விதித்திருக்கிறது. ஆனால், அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் தன் இஷ்டத்துக்கு ஈராக் அந்தப் பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்து சேமித்து வைத்திருக்கிறது. அதைக் கண்டுபிடித்து, மொத்தமாக அழிக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்கா வைத்த கண்டிப்பான கோரிக்கை. அதன் முதல்படியாக நவம்பரில் ஈராக்குக்கு அனுப்பப் பட்டது ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழு.

அந்தக் குழுவில் அமெரிக்கா, பிரிட்டன், பிரேஸில், ஜேர்மனி உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் ஈராக்கின் தலைநகர் பக்தாத்துக்குள் நுழைந்த சில மணி நேரங்களிலேயே அதிரடி உத்தரவைப் பிறப்பித்தார் சதாம்.

''யார் வேண்டுமானாலும் வரட்டும். வருக...வருக என ஈராக் அவர்களை வரவேற்கிறது. எந்த ஆயுதக் கிடங்கையும் அவர்கள் பரிசோதிக்கட்டும். ஆனால், அமெரிக்கர்கள் மட்டும் எங்கள் நாட்டுக்குள் நுழையக்கூடாது. அந்தக் குழுவில் அடியெடுத்து வைத்திருக்கும் அமெரிக்கர்கள் கண்டிப்பாக உடனே வெளியேறியே ஆகவேண்டும்'' என்பதுதான் சதாம் போட்ட உத்தரவு.




சதாமின் ஆதரவாளர்கள்

வேறு வழியின்றி சதாமின் உத்தரவுக்குச் சம்மதித்த [illegible] வினர். ஆனால், மறுநாள் காலைதான் அமெரிக்கா திரும்ப அடுத்த விமானம். அதனால், அதுவரை நாட்டுக்குள் இருக்க அனுமதி கேட்கப்பட, ''அதெல்லாம் முடியாது. இப்போதே, இந்தநிமிஷமே குழுவின் அமெரிக்க உறுப்பினர்கள் வெளியேற வேண்டும்'' என்று தனது பட்டை மீசை துடி துடிக்க கர்ஜித்தார் சதாம். இரவுமணி 11 ஆகிவிட்டது. இருந்தாலும், உத்தரவுப்படி வெளியேறத் தயாராயினர் அந்த ஆறு அமெரிக்கர்கள். போனால் போகிறதென்று அவர்களின் பாதுகாப்புக்கென சில இராணுவ வீரர்களை அனுப்பினார் சதாம்.

''சுமார் 400 மைல் நீள, கடும் குளிர் வீசும் பாலைவன இரவுப்பயணம் அது. ஓரிடத்தில் எங்களை ஏற்றிச் சென்ற காரின் டிரைவர் அசந்து தூங்கிவிட...சிறு விபத்து நடந்தது. நல்ல வேளையாக யாருக்கும் பெரிதான காயம் இல்லை. ஒருவழியாக மறுநாள் விடிகாலை ஜோர்டான் எல்லையை அடைந்ததும்தான் எங்களுக்கு நிம்மதிவந்தது. ஆனால், எங்களுடன் பயணித்த ஈராக் வீரர்கள் நட்புடனும் அன்புடனும் பழகியதுதான் ஒரே ஆறுதலான விஷயம்'' என்கிறார் அந்த அமெரிக்கக் குழுவின் தலைவரானரிச்சர்ட் பட்லர்.

வெளியேற்றப்பட்ட தங்களைப் பத்திரமாக ஜோர்டானில் சேர்ப்பதில் சதாம் அக்கறை காட்டினார் என்று குழு உறுப்பினர்கள் சொன்னாலும் கடுப்பாகிப் போனது அமெரிக்கா. 'USS—நிமிட்ஸ்' மற்றும் 'USS—ஜார்ஜ வாஷிங்டன்' என்ற இரு விமானம் தாங்கிக் கப்பல்கள், இருபதாயிரம் போர் வீரர்கள் என ஈராக்கின் எல்லையில் கொண்டுவந்து கடலில் நிறுத்திவிட்டது. சென்ற முறை அமெரிக்காவுக்கு ஆதரவாகப் போரில் உதவிய பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகள் இம்முறை நடுநிலை வகிக்கப் போவதாக அறிவித்து விட்டன. (தங்கள் நாட்டின் சில பெரிய நிறுவனங்கள் ஈராக்குடன் புதிய வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திவிட்டதும், சுற்றுச் சூழலில் மீண்டும் ஒரு பேரழிவை இந்த நாடுகள் விரும்பாததுமே இதற்குக் காரணம்.) பிரிட்டன் மட்டும் இப்போதைக்கு அமெரிக்காவின் முடிவுக்குப் பக்கவாத்தியம் போடுகிறது. மற்ற நாடுகள் எல்லாம் தங்கள் ஆதரவைப் பின்வாங்குவது கண்டு யோசித்த அமெரிக்கா, கடந்த ஒரு வருடத்துக்குள் நியாயத்துக்குப் புறம்பாக ஈராக் என்னவெல்லாம் செய்திருக்கிறது... அதன் இன்றைய போர்பலம் என்ன என்பதையெல்லாம் பட்டியலிட்டு ஓர் அறிக்கையைத் தயாரித்து மற்ற நாடுகளுக்கு அனுப்பியுள்ளது.



அமெரிக்காவில் அவசர மீட்புப்பயிற்சி

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திணைக்கள ஆயத்த ஏற்பாடுகள்

# கட்சிகளின் வழக்குகளால் பாதிப்புறலாம்!

யாழ்ப்பாண அரசியலில் தேர்தல் கருமேகம் சூழ்ந்திருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் யாழ்ப்பாணத்திலேயே என்றாலும் இத்தேர்தல் தொடர்பாக அனைவரினதும் பார்வை அனேகமாக இப்புத்தாண்டின் முதல் வாரத்தில் அனேகமாக கொழும்பில் நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் அமைந்திருக்கும் ஹல்ஸ்டோர்ப் பக்கமே திரும்பும் என்று எதிர்பார்க்கலாம்.

இத்தேர்தல்கள் தொடர்பாக இரு கட்சிகள் இவ்வாரத்தில் நீதிமன்றத்துக்குப் போகப் போவது உறுதியாகி விட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுமே (ஈ. பி. ஆர், எல். எவ்வுமே) அவை.

சில உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கு தாங்கள் தாக்கல் செய்த மனுக்கள் — ஒரு சில வேட்பாளர்களின் வயதைக் காட்டி — ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இக்கட்சிகள் இரண்டும் நீதிமன்றத்துக்குச் செல்லுகின்றன.

இக்கட்சிகள் இரண்டும் இந்த வாரத்தில் தேர்தல் ஆட்சேபனை மனுக்களை தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த தேர்தல் மனுக்களால் கஷ்டப்படப் போகும் முதல் நபர் தேர்தல் ஆணையாளர்தான். இந்த மனுக்கள் தொடர்பாக நீதிமன்றத்துக்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு ஒரு புறம் இருக்க, அவரது தேர்தல் தொடர்பான முன்னாயத்தங்களை நீதிமன்ற முடிவு குழப்பிவிடவும் வாய்ப்புண்டு என்பது தான் அவருக்குள்ள முதல் சிக்கலாகும்.

இந்த வாரத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும் எதிர்வரும் 8ஆம் திகதி — வியாழக்கிழமை வரை — நீதிமன்ற விடுமுறை தினமாகும். அதற்கு முன்னர் விடுமுறை கால நீதிமன்றத்தில் இந்த வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு. எனவே 8ஆம் திகதிக்குப் பின்னரே வழக்குகள் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டதும் சில சமயங்களில் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விசாரணை முடியும் வரை தேர்தலை நிறுத்தி வைக்கும்படி நீதிமன்ற இடைக்கால தடை உத்தரவு விதிக்கலாம். அல்லது வழக்கின் அவசர தன்மைகருதி, வழக்குக்கு முன்னுரிமை கொடுத்து இரண்டொரு நாள்களில் வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கவும் முன்வரலாம்.

ஆனால், வழக்குத் தொடர்பாக சில பூர்வாங்க ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் கிளப்பப்பட்டு அதன் மேல் அது தொடர்பான விசாரணைகள் மேலும் சில தினங்களுக்கு இழுபடும் வாய்ப்பும் உண்டு.

உதாரணமாக—

வழக்குத் தாக்கல் செய்யும் கட்சிகள், வழக்கின் எதிராளிகளாக (அல்லது எதிர்மனுதாரர்களாக) சட்டமா அதிபரையும், தேர்தல் ஆணையாளரையும், தெரிவத்தாட்சி அலுவலகரையும் குறிப்பிட்டு விட்டு தேர்தலில் போட்டியிடும் ஏனைய கட்சிகளையோ அவற்றின் பிரதிநிதிகளையோ தமது மனுக்களில் எதிராளியாகக் குறிப்பிடாமல் தவிர்த்துக் கொள்ளக்கூடும்.

அப்படித் தவிர்த்தால், நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதை விரும்பாத மற்றைய (தேர்தலில் போட்டியிடும்) கட்சிகள் சும்மா இருக்கப் போவதில்லை.

இந்த வழக்குகளில் தங்களையும் எதிர்மனுதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளும்படி கோரி அக்கட்சிகள் நிச்சயம் நீதிமன்றத்துக்குப் போகும். அத்தகைய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அக்கட்சிகளையும் எதிர்மனுதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதா என்பது குறித்து முதலில் பூர்வாங்க விசாரணை நடத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே காலம் இழுபடலாம்.

வழக்குத் தாக்கல் செய்யும் கட்சிகள், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் ஏனைய கட்சிகளை அல்லது தமது மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான ஆட்சேபனையை தேர்தல் அதிகாரி முன்பாகக் கிளப்பிய கட்சிகளை தமது மனுக்களில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டால் கூட

## உள்ளும் புறமும்

குறுமுனி

அக்கட்சிகளுக்கு எல்லாம் நோட்டீஸ் அனுப்பி, அவை பதில் மனுத்தாக்கல் செய்து, அதன் பின்னர் வழக்கை விசாரித்து, தீர்ப்பு வழங்குவது என்றால் சில சமயங்களில் வாரக் கணக்கில் கூட காலம் பிடிக்கலாம்.

### நெருக்கடி வரும்

எனவே நீதிமன்றம் ஆரம்பத்திலேயே சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டால் தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்தல் நடத்தக் கூடியதாக தமது தேர்தல் ஆயத்தப் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். வாக்குச்சீட்டுகள் அச்சிடுவது தொடக்கம் ஏனைய வேலைகள் அனைத்தையும் தேர்தல் ஆணையாளரின் அலுவலகம் திட்டமிட்டபடி செய்து கொண்டிருக்கும்.

அவ்வேளையில், வழக்குத் தாக்கல் செய்த கட்சிகளுக்கு சார்பாக நீதிமன்றத் தீர்ப்பு வெளியானால், தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் பாடு படு சிக்கலாகி விடும். அத்தகைய சந்தர்ப்பத்தில் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல்களை—நீதிமன்றத் தீர்ப்புக்கு ஏற்ப ஏற்று—வாக்குச்சீட்டில் சேர்க்க வேண்டிய நிலைக்கு தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தள்ளப்படும். அதாவது புதிய வாக்குச் சீட்டுக்களை அவசர அவசரமாக அச்சிட வேண்டிய நெருக்கடிக்கு தேர்தல் திணைக்களம் தள்ளப்படும்.

எட்டாம் திகதிக்குப் பின்னர் நீதிமன்றம் வழக்கை விசாரித்து, மனுதாரர்களுக்கு சார்பான தீர்ப்பு ஒன்றை வழங்குமானால்—

அதற்குப் பின்னர் — எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்பாக — புதிய வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டு, அவற்றை வடக்கே கொண்டு வந்து, 29 ஆம் திகதியன்று தேர்தல் நடத்துவது என்பது மிகக்கஷ்டமான காரியமாகவே இருக்கும்.

வழக்குத் தீர்ப்பு வழக்காளிகளுககு (மனுதாரர்களுக்கு) சார்பாக வராமல், வேட்பு மனுக்களை தேர்தல் அதிகாரிகள் நிராகரித்தது சரியே என்று தீர்ப்பு வருமானால் தேர்தல் திணைக்களம், தான் ஏற்கனவே மேற்கொண்ட ஆயத்தப் பணிகளுடன் தொடர்ந்து தேர்தலை நடத்தி முடித்து விடலாம்; இடையில் குழம்பி விடத் தேவையில்லை.

ஆனால் குறிப்பிட்ட இரு கட்சிகளும் நீதிமன்றத்துக்குப் போவதை தேர்தல் அதிகாரிகளும், சில அரச பாதுகாப்பு உயர்பீடத்தினரும் வரவேற்பதாகத் தெரிகின்றது.

"தற்போது ஐந்து உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட விவகாரமே அனேகமாக நீதிமன்றத்துக்குப் போகவிருக்கின்றது. அப்படிப் போனால் அந்த ஐந்து உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல்கள் தாமதமடையக் கூடும். தற்போதைய நிலையில் யாழ். குடாநாட்டில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கு ஒரே நேரத்தில் — ஒரே நாளில் — தேர்தல் நடத்த வேண்டிய நிலை இருக்கின்றது. பாதுகாப்பு மற்றும் அரச உயர்பீடத்தையும் அதிகாரிகளையும் பொறுத்தவரை பாதுகாப்பு ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் இது ஒரு மிகநெருக்கடியான பணியாகும். நீதிமன்றத் தாமதம் காரணமாக ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தள்ளிப் போனால் பன்னிரண்டு உள்ளூராட்சி சபைகளுக்குத் தனியாகவும், நீதிமன்ற சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் யாழ். மாநகரசபை உட்பட ஏனைய ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்குத் தனியாகவும் இரண்டு கட்டங்களில் (Stagger Basis) தேர்தல்களை நடத்த வாய்ப்பு ஏற்படும். பாதுகாப்பு, நிர்வாக அடிப்படையில் அதிகாரிகளின் பளுவையும் பொறுப்பையும் இது மிகவும் குறைப்பதாக இருக்கும்." — என்று கூறினார் ஓர் அதிகாரி.

வேட்புமனு நிராகரிப்புத் தொடர்பாகசர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ஆறு உள்ளூராட்சி சபைகள் வருமாறு:-

- ★ வலி வடக்கு பிரதேச சபை.
- ★ வலி தென்மேற்கு பிரதேச சபை.
- ★ பருத்தித்துறை பிரதேச சபை.
- ★ சாவகச்சேரி பிரதேச சபை.
- ★ யாழ்ப்பாணம் மாநகர சபை.
- ★ ஊர்காவற்துறைப் பிரதேச சபை.

இவற்றில் ஊர்காவற்துறை பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். தாக்கல் செய்த மனு சமாதான நீதிவானினால் உறுதிப்படுத்தப் [illegible] பாக ஈ. பி. ஆர். எல். எவ். வழக்குத்தாக்கல் செய்யாது எனத் தெரிகின்றது.

ஏனைய ஐந்து சபைகளின் தேர்தல்களுக்கு தாக்கல்செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. ஆர். எல். எவ்வும் வழக்குத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சபைகளுக்கு இவ்விருகட்சிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர்களின் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட வேட்பாளர்களின் வயது தொடர்பாகவே ஆட்சேபனைகள் கிளப்பப்பட்டன, அதனை ஏற்றே தேர்தல் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மனுக்களை நிராகரித்திருந்தனர்.

★ ★ ★

யாழ். குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை குறித்து தேர்தல் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பு —

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை —

யாழ். குடாநாட்டில் தற்போது வசிக்கக் கூடிய வாக்காளர்களின் எண்ணிக்கை —

ஆகியவை குறித்து கடந்த வார சஞ்சீவியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய பதிவுகளில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வாக்காளர்களில் சுமார் இரண்டரை லட்சம் முதல் மூன்று லட்சம் வாக்காளர்கள் குடாநாட்டில் இப்போது இல்லாதது குறித்தும் —

இதைப் பயன்படுத்திதாராளமாக கள்ளவாக்கு போடுவது தடபுடலாக நடக்கும் என்பது குறித்தும் — கூட சஞ்சீவியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் கடந்த வார முற்பகுதியில் இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தேர்தல் ஆணையாளர் கொழும்பில் சந்தித்துப் பேசிய போதும் அங்கு இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறியவருகின்றது.

ஈ. பி. டி. பி. யின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இந்த விவகாரத்தைத் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

வாக்காளர் பெருமளவில் இல்லாததைப் பயன்படுத்தி கள்ள வாக்குப் போட திட்டமிடப்படலாம் என்றும் —

அதைத் தடுப்பதற்கும், நீதியான முறையில் வாக்குப் பதிவு இடம்பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும் — அவர் கோரினார்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதில் கவனமாக இருந்தால் கள்ளவாக்குப் போடுவதை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பொறுப்பை கிராமசேவை அதிகாரிகள் மூலம் மேற்கொள்ள வேண்டும் எனவும் —

தமது பிரிவில் வசிக்கின்ற — குடாநாட்டில் தற்போதுள்ள — வாக்காளர்களுக்கு மட்டுமே வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் —

அவர் ஆலோசனை கூறினார்.

வேட்பாளர் பாதுகாப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடும் வேட்பாளர்களில் முதன்மை வேட்பாளர்களுக்கு மட்டும் பாதுகாப்பு வழங்குவதற்கு இக்கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

தீவுப்பகுதிக்கு சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சில தடைகள் இருப்பதாக சில கட்சிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். இந்த விடயத்தில் அக்கட்சிகளின் குற்றச்சாட்டு பொதுவாக ஈ. பி. டி. பி. அமைப்புக்கு எதிராகவே அமைந்தது.

இப்போது குடாநாட்டில் ஈ. பி. டி. பிக்கும், புளொட்டுக்கும் இடையில் சிறிய முறுகல் நிலை இருப்பதை யாவரும் அறிவர். அது ஆயுத மோதலாக வெடித்து விடக் கூடாது என்பதே பலரினதும் வேண்டுதல்.

ஈ. பி. டி. பியிலிருந்து பிரிந்து நின்று செயற்படும் இரு எம். பிக்களான—சகோதரர்களான — இ. இராமமூர்த்தி (சீலன்), இ. இராமேஸ்வரன் (மதன்) இருவருக்கும் விசேட பாதுகாப்பு மற்றும் வசதிகளை வழங்குவதன் மூலம் தனது உட்கட்சி விவகாரங்களில் புளொட் மூக்கை நுழைப்பதாக ஈ. பி. டி. பி. கருதுகின்றது.

"ஜனநாயக முறையில் செயற்பட வந்திருக்கும் இரு எம். பிக்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம். அதில் என்ன தவறு?"— என்று நினைக்கிறது புளொட்.

என்றாலும் தேர்தல் சூட்டோடு இந்த முறுகல் நிலையும் சேர்ந்து ஓர் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றது.

இந்த விடயம் குறித்து ஈ. பி. டிபியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும்—

புளொட்டின் உபதலைவரும் யாழ். மாநகரசபைக்கு புளொட் சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளருமான மாணிக்கதாசனும்—

சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசியில் பேசினார்கள் என்று தெரிகின்றது.

எனினும் தொலைபேசி உரையாடலில் இருதரப்பும் தமது நிலையை விட்டுக் கொடுக்காமல் வெகு கறாராகப் பேசியதாகவும்—

முறுகல்நிலையைத்தணிவிக்கும் ஆக்க பூர்வமானஏற்பாடு எதுவும் அந்த உரையாடலில் எட்டப்படவில்லை என்றும்—

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவுப்பகுதியில் தேர்தல் கால வன்செயல் ஒன்றில் இயக்கம் ஒன்றின் உறுப்பினர் ஒருவர் கண்ணாடி வெட்டுக் காயத்திற்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் இந்த முறுகலின் ஒரு வெளிப்பாடே.

இதற்கிடையில் நெடுந்தீவில் தேர்தல் நடவடிக்கைகளை எப்படிமேற்கொள்வது என்று கட்சிகள் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் பரவலாகச் சிந்திக்கப்படுகின்றது.


நெடுந்தீவில் இராணுவமோ, கடற்படையோ, பொலிஸோ இல்லை. முற்றும் முழுதாக ஈ. பி. டி.யின் கட்டுப்பாட்டில் நெடுந்தீவு உள்ளது.

தேர்தல் காலத்தில் அங்கு எவ்வாறு பணியாற்றுவது? பொலிஸார் மற்றும் படையினரை அனுப்புவதா? அப்படியாயின் எவ்வளவு காலத்துக்கு அவர்கள் அங்கு தங்குவது?—என்பன உட்பட பல விடயங்களை அதிகாரிகள் சிந்திக்கின்றனர்.

ஈ. பி. டி. பியின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ள ஒரு தீவில் (XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முயன்று பாருங்கள்



1. ஒரு பண்ணையாருக்கு நான்கு பிள்ளைகள். அவருக்கு வட்ட வடிவான பண்ணை ஒன்று சொந்தமாக இருந்தது அந்தப் பண்ணையில் இருந்து வருடாந்தம் ஒரு கோடி எண்பது லட்சம் ரூபா அவருக்கு வருமானம் கிட்டுகின்றது. அந்தப் பண்ணையை பல துண்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு துண்டிலிருந்தும் வருடாந்தம் கிடைக்கும் பணத்தை (லட்சங்களில்) படம் மூலம் அவர் குறித்து வைத்துள்ளார். தமது மறைவுக்குப் பின்னர் நான்கு பிள்ளைகளுக்கும் சமனாக வருமானம் கிடைக்கக் கூடியதாக பண்ணையை நான்காகப் பிரித்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும்படி உயில் எழுதி வைத்துவிட்டு அவர் காலமாகி விட்டார். பண்ணையை பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்க முடியாமல் பண்ணையாரின் சட்டத்தரணி தடுமாறுகின்றார். உங்களால் உதவ முடியுமா? ஒரு தடவை முயற்சித்துப் பாருங்களேன்.

2. ஒரு சிறுவன், வயது மூத்த ஒருவரைப் பார்த்து உங்கள் வயது என்ன என்று கேட்டான். அவர் தமது வயதை கணக்குப் புதிராகப் போட்டார். என் வாழ்நாளில் கால் பாகம் பையனாகக் கழிந்தது. ஐந்தில் ஒரு பாகம் வாலிபனாக வளர்ந்தேன். மூன்றில் ஒரு பாகம் மனிதனாகக் கழித்தேன். இப்போது பதின் மூன்று ஆண்டுகள் முதுமையில் உள்ளேன்.'' — என்றார் அவர்.

அவரின் வயது என்ன? கூறுங்கள் பார்க்கலாம்.



3. மேலே உள்ள சதுரத்தை அதனுள் இருக்கின்ற சிறிய சதுரங்களின் அடிப்படையில் 11 துண்டுகளாகப் பிரிக்க வேண்டும். 11 துண்டுகளும் வித்தியாசமான அளவுகளில் இருக்கலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் தனித்தனியே சதுர வடிவினதாக அமைய வேண்டும். எங்கே பிரியுங்கள் பார்க்கலாம்.

(விடைகள் XIII ஆம் பக்கம் பார்க்க)

## கன்றுக்குட்டி

கன்றுக்குட்டி கன்றுக்குட்டி
கிட்ட கொஞ்சம் வாரியா?
கடலை மிட்டாய் தந்திடுவேன்
கடிச்சு கொஞ்சம் தாரியா?


எங்ககூட விளையாட
தம்பி தங்கை இல்லையே!
கன்றுக்குட்டி நீயிருக்க
கவலை எனக்கு இல்லையே!

புள்ளி மானைப் போலவே
துள்ளித்துள்ளி ஓடுகிறாய்
நல்ல பாலை நான்குடிக்க
தினமும் உதவி செய்கிறாய்!

அபிராமி கனகசபாபதிகுருக்கள்
(ஆண்டு 2,
நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை)

## ஊன் உண்ணும் கழுகு

கழுகு வஞ்சகக் குணமுடையது; மேலும் இது பிற உயிரினங்களைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கும் இயல்புமுடையது. எனவேதான், பிறரைத் துன்புறுத்திக் கொண்டே இருப்பவரைக் 'கழுகு' என்கிறார்கள்.



இரக்கமற்ற கொடிய பார்வை யுடையவரையும் 'கழுகுப்பார்வை' உடையவர் என்று சொல்வது உண்டு.

கழுகு பருந்தின் இனத்தைச் சேர்ந்தது. பருந்திலும் பெரிய உருவமுடையது. இதற்குக் 'கூனி' என்றும் பெயருண்டு.

சில வெண்மையான கழுகுகள் பருந்தளவு உருவமுடையவை. அவற்


### பிராணிகள் உலகம்

றின் அலகு மஞ்சள் நிறமாக இருக்கும். கழுகின் கழுத்திலும், தலையிலும் மயிர் இராது. பெரும்பாலும் கழுகுகள் கருஞ் சாம்பல் நிறமுடையனவாகவே இருக்கும்.

கழுகுகளின் கண்கள் சிறியவை. எனினும் மிக

(XII ஆம் பக்கம் பார்க்க)

## செய்து பாருங்கள்



மேலேயுள்ள மூன்று அமைப்புக்களையும் கையை காகிதத்திலிருந்து எடுக்காமல் ஒரே தொடர் கோட்டினால் வரைந்து, வரைய ஆரம்பித்த இடத்திலேயே கொண்டு வந்து முடிக்க வேண்டும். வரைந்த கோட்டுக்கு மேல் மீண்டும் கோடு வரையக் கூடாது. செய்து பாருங்களேன்.

(விடைகள் XIII ஆம் பக்கம் பார்க்க)

## மாமாப் பாட்டு

பட்டணத்தை பார்க்கப் போகும் சின்னமாமா...
இந்தப் பையனை நீ மறந்திடாதே சின்னமாமா...

பாப்பாவுக்கு ஊதுகுழல் சின்னமாமா...
அந்த பட்டணத்தில் வாங்கி வராய் சின்னமாமா...

அக்காளுக்கு ரப்பர் வளையல் சின்னமாமா...
அங்கே அழகழகாய் வாங்கிவராய் சின்னமாமா...

பிரியமுள்ள அம்மாவுக்கு சின்னமாமா...
நல்ல பெங்களூர்ச் சேலை வேண்டும் சின்னமாமா...

அப்பாவுக்குச் சட்டைத்துணி சின்னமாமா...
ஓர் ஆறு கெஜம் வாங்கிவராய் சின்னமாமா...

தாத்தாவுக்கு ஊன்றிச் செல்லச் சின்னமாமா...
நல்ல ஊன்றுகோல் வேண்டும் எங்கள் சின்னமாமா...

- கிருஷ்ணசாமி துளசிகரன் -
(ஆண்டு 2, மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை)

## உங்களால் முடியுமா?

பின்வரும் தகவல்களை வைத்து விடையைக் கண்டு பிடிக்க உங்களால் முடிகின்றதா பாருங்கள்.

அ) மூன்றெழுத்து மகாகவி இவர். நடு எழுத்து இல்லா விட்டால் அரைவாசியாகி விடுவார். முதல் எழுத்தை இழந்தால் அழகியாக வருவார். அவர் யார்?

ஆ) இது ஒரு ஏழு எழுத்து மலர். முதல் மூன்றெழுத்தும் கேட்டால் மக்களுக்குக் கெடிக்கலக்கம்; வெடித்து வினை பண்ணி விடும். கடைசி நான்கு எழுத்தும் தனித்தும் மலராகும், முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்து இருக்கும் இடத்தில் ஆதி மனிதன் வாழ்ந்தானாம். அந்த மலர் என்ன?

இ) நான்கு எழுத்து இராசி இது. மண் போன்ற பொருள்களை அள்ளப் பயன்படும் வீட்டுப் பாவனைப் பொருளும் கூட. முதல் இரண்டு எழுத்தும் தாண்டும்படி பணிக்கும். மூன்றாவது எழுத்தை இழக்க ஒரு வாத்தியம் பிறக்கும். அந்த இராசி என்ன?


ஈ) உணவில் மணம் சேர்க்கப் பயன்படும். ஆறு எழுத்துத் தாவரம். முதல் இரண்டு எழுத்தும் சோறுடன் சேர்த்து உண்பது. முதலாவது, நான்காவது, ஐந்தாவது எழுத்துக்கள் தண்ணி அள்ளப் பயன்படும். மூன்றாவது எழுத்தும் கடைசி எழுத்தும் தொழிலைக் குறிக்கும். முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்து வருவதில் 64 வகைகள் உண்டாம். உணவில் மணம் சேர்க்கப் பயன்படும் அப்பொருள் என்ன?

உ) இது நான்கு எழுத்துச் சொல். உங்களுக்கு நன்கு பரிச்சயமானவன். தினசரி காலையில் வருபவன். ஆனால் இன்று மட்டும் வரான். அவனின் பெயரின் முதலாவது, கடைசி எழுத்துக்களைச் சேர்த்தால் முன்னிலையில் ஒரு வார்த்தையும் இரண்டாவது, கடைசி எழுத்துக்களைச் சேர்த்தால் தன்மையில் ஒரு வார்த்தையும் கிடைக்கும். அவன் யார்?

த. பவானந்த்
(யாழ். பரியோவான் கல்லூரி)

(விடைகள் XIII ஆம் பக்கம் பார்க்க)

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படிவேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

விடைகள் XIII ஆம் பக்கத்தில்)




## கண்டுபிடியுங்கள்!

அன்புள்ள சிறுவர், சிறுமியரே!

நாளை மறுதினம் புதிய ஆண்டுக்காக பாடசாலை ஆரம்பமாகி விடும். எங்கே அதற்கு முன்னர் கீழேயுள்ள கணக்குப் புதிர்களை விடுவியுங்கள் பார்க்கலாம். ஒவ்வொரு கணக்கிலும் கேள்விக் குறிப்பிட்ட இடத்தில் வரவேண்டிய இலக்கங்களை உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா?



1) 459 + 2?5 = 724
2) 2? × 21 = ?67
3) 78? — 2?5 = 554
4) 924 — 69? = ??6
5) 3 × 3 × 3 × 3 × 3 × ? = 72?
6) 6?5 × 7 = 45?5
7) 512 × ?? = 1075?
8) 9? × 58 = ?7?2
9) 124 × 6? = ?556
10) 27 × 15? = 4??6
11) 26 × ?? × 17 = 14144
12) 36?48 ÷ 56 = 658
13) 7 × 7 × 7 × ? = 24?1
14) 10,485 ÷ 4 = 2?3
15) 11,289 + 256? = 1???6
16) 156? ÷ 65 = ?4
17) 29?40 ÷ 45 = 6?2
18) 63 × 12 × 2? = 21?24
19) (21 + ?) × (17 + 8) = 67?
20) (42 + ?) ÷ (? + 8) = 4




மேலே நான்கு பிராணிகளின் படமும் அவற்றின் காலடிச் சுவடுகளின் வடிவமும் தரப்பட்டுள்ளன. சுவடுகளின் வடிவங்கள் சரியானவை. ஆனால் அளவுப் பரிமாணங்களில் ஒன்று பெரிது படுத்தியும் மற்றது சிறிது படுத்தியும் காட்டப்பட்டுள்ளன. எந்தப் பிராணியின் சுவடு எது என்று சோடிசேர்க்க முடிகின்றதா பாருங்கள்.

(விடைகள் XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமை விளையட்டும் புத்தாண்டே!

தூங்காத கண்கள் — இனி
தூங்கவேண்டும் புத்தாண்டே!
பூக்காத மரங்கள் — இனி
பூக்கவேண்டும் புத்தாண்டே!

பறக்காத புறாக்கள் — இனி
பறக்கவேண்டும் புத்தாண்டே!
இறக்காத கண்ணீர் — இனி
இறக்கவேண்டும் புத்தாண்டே!

சிரிக்காத மக்கள் — இனி
சிரிக்க வேண்டும் புத்தாண்டே!
சிவக்காத நெஞ்சுகள் — இனி
சிவக்க வேண்டும் புத்தாண்டே!

சந்தன மழையில் — இனி
சமாதானம் நனையட்டும் புத்தாண்டே!
செந்தமிழ்க் கவிதையில் — இனி
தோழமை விளையட்டும் புத்தாண்டே!

— நல்லை அமிழ்தன் —

# இன்றைய நாள்களிலே....!

செவ்வந்தி வானம் சிரித்திருக்கும்! சுகம் தளிர்க்கச்
செய்யவென எண்ணிச் சிறுநிலவு பூத்திருக்கும்!
இவ்வளவும் இருந்தென்ன? ஊரடங்கும் வேளையென
இருக்கின்ற சுதவெல்லாம் தமைப் பொருத்தும்.

ஆறாச்சு மணியென்றால் அம்மாவின் மனம் உதறும்
எண்ணமெல்லாம் வந்து பிள்ளை மனம் பதறும்
வீறுடனே போயொருநாள் வீணாக 'மாட்டி' வந்த
'வீக்க'மின்னும் மாறவில்லையென்றே உடல் கதறும்!

'செக்கிங்'கெனச் சொல்வார்; சைக்கிளை நீ உருட்டென்பார்;
செல்லும் வழியினிலே நினைத்தவுடன் நிறுத்திடுவார்;
உக்கல் கிடுகெனினும் வேலியென ஒன்றிருத்தல்
இம்மண்ணின் மரபுஅதை வெட்டிச் சிதை என்பார்.

வீதிக் கரையெல்லாம் நெடுமரங்கள் வளர்த்திருந்து
விளைந்து நிழல் சுரந்த காலங்கள் இருந்ததுண்டு;
ஏதின்று ஆச்சு..? எல்லாமே மறைந்த பின்பு
எழில் மழுங்கி வெறுமையுடன் பாலையெனச் சுடுகிறது!

காலம் எமை விரட்டி வேடிக்கை பார்க்கிறதோ?
கலகத்தில் மாட்டிவிட்டு விலகி நின்று சிரிக்கிறதோ...?
நீலக் கடலெங்கள் நிம்மதியை விழுங்கிவிட்டு
நிற்க மாட்டாமல் விழுந்து ஓடுறதோ...?

எல்லாமேயின்று எதிர்ப்புக்குள் நடந்தாலும்...
எரிநெருப்பாய் வாழ்க்கை எமக்குள் தகித்தாலும்...
வெல்லமென உயிரை நினைப்பதுண்மை! அதனாற்றான்
வெயிலுக்குள் எமை வருத்தப் பழகியிருக்கின்றோம்!

— தாட்சாயணி —

# காணாமல் போனவர்கள்!

முன்பெல்லாம் இங்குமீசை முளைக்காத இளம்பெடியள்
கண்பார்க்க முன்னாலே காணாமற் போவார்கள்,
தோட்டத்தில் செல்லையர் தோளினிலே வெய்யில்பட
வீட்டிலே அவர்பெட்டை விடுகதையாய் மறைந்துவிடும்!

'இன்னாற்ற பெட்டை இவனோட ஓடிற்றாம்' என்று
அன்னம்மாக் கிழவியின்வாய் அவல்மெல்லத் தொடங்கிவிடும்
பொன்னையர் சுருட்டடித்துப் புகைபோக்கிக் கதைசொல்ல
கண்காது வைப்பவரோ கடுகதியிற் செயற்படுவர்!

முழுதாக ஒருவருடம் முடிவடைய, குழந்தையுடன்
காணாமல் போனவர்கள் கண்ணெதிரே தெரிவார்கள்
''கழுதைகள்'' எனத்திட்டிக் கனகதைகள் சொன்னவரும்
'அழகான குழந்தை'யென அன்புடனே அழைப்பார்கள்!

இப்போதும் பலஇளைஞர் இளவயதில் தொலைந்தார்கள்
எப்போது வருவாரோ எனஏங்கித் காத்திருக்க
அப்பாவும் அம்மாவும் அழுதபடி வீற்றிருக்க
உப்பாற்று வெளிதனிலே உடலாகக் கிடைப்பார்கள்!

காதலனைக் காணாது கன்னியவள் தவமிருக்க
மோதலிலே உயிர்துறந்த மூத்த ஒரு தலைவரென
சாதலின் பின்புகூடச் சரிதைகளே மாற்றப்பட
வேதனையின் விளிம்பினிலே வெம்பிடுவாள் பேதையவள்!

பாண்வாங்கத் தெருமீது படியிறங்கிச் சென்றவர்கள்,
மீன்பிடிக்கக் கடல்மீது மிடிதீர்க்கச் சென்றவர்கள்
கான்கரையில் பெண்களுக்கு கடுப்பேத்தும் வாலிபரும்
காணாமற் போனார்கள், எக் கடன் தீரச் சென்றார்கள்?!

செய்தவனை ஓடவிட்டுச் சேர்ந்தவனைச் சிறையடைக்க,
செய்தவினை என்னவென்று தெரியாது அவன்முழிக்க,
கைதுகளும் களவுகளும் காட்சிகளாய் முன்விரிய
பைந்தமிழர் முற்பிறப்பில் பாவந்தான் செய்தாரோ?!

தொலைந்தவரின் முகவரியை தேடுபவர் நாளெல்லாம்
அலைந்ததுவே கண்டமிச்சம், அதுவிட்டு உருப்படியாய்
காணாமற் சென்றவரைக் கண்டறியச் சென்றவர்கள்
காணாமல் போனதுதான் கடைசியிலே வரலாறா?!

— கி. வாயுபுத்திரன் —

# மீண்டும் வருமா வசந்த காலம்?

வற்றாப்பளைப்
பொங்கலுக்கு
வள்ளத்தில்
வன்னி சென்று
முல்லைத்தீவு
மாமி வீட்டில்
மூன்று நாள் நின்று
பண்டிக்கருக்கல் திண்டு
வந்த நாள்கள்
வசந்த நாள்கள்.

அந்தியட்டிக்கு
அஸ்தி போட
கீரிமலை சென்று
கிரியை செய்து
கிணறு கேணி
கடல் என
மாறி மாறிக்
குளித்துக் கும்மாளம் போட்டு
மகிழ்ந்த நாள்கள்
வசந்த நாள்கள்.

காரைநகர்
கஷோனா பீச்சில்
காதலியுடன்
காதல் மொழி
பேசிய நாள்கள்
பேரின்ப நாள்கள்.

சிவராத்திரிக்கு
சிவனைத் தரிசிக்க
திருக்கேதீஸ்வரம்
சென்று
பாலாவியில் நீராடி
பரமனைப் பணிந்த நாள்கள்
புனித நாள்கள்.

சிறிதர்
திரையரங்கில்
நடுச்சாமம்
பல்கணியிலிருந்து
பாசமலர் படம்
பார்த்து சுதந்திரமாய்
அதிகாலை வீடு
வந்த நாள்கள்
வசந்த நாள்கள்.

முற்ற வெளியில்
முத்தான தமிழ் விழாக்கள்
பார்த்த நாள்கள்
பரவச நாள்கள்.

விடிய விடிய
காளி கோயிலில்
காத்தான் கூத்தும்
மயான காண்டமும்
கண்டு கழித்திருந்த
காலம்
கற்கண்டுக் காலம்.

இன்று அது
கற்பனைக்
காலம்
இனி விடிந்தால்
மீண்டும் வருமோ
அந்த வசந்த காலம்?

— துரைசீலன் —

# வாழ்க்கையின் பாதையில்

கண்ணால் காணும் காட்சிகள்
யாவும் மாயமடா! — ஒரு
பொன் போல் மின்னும்
நகரம் கூட உள்ளதடா!

ஏழை என்னும் நிலையை
எண்ணி வருந்தாதே — சிறு
வாழை போலே தலையைக்
கீழே கவிழாதே!
நாளை என்னும் நாளும்
உண்டு மறவாதே! — உன்
மூளையும்முயற்சியும்மூலதனம்
இடத்தயங்காதே!

நாயும் நரியும் வழியில்
வரலாம் கவனமடா! — நீ
ஓயும் பொழுதில் கடித்துக்
குதறும் மனிதரடா!
வாயும் பொய்யும் இல்லை
என்றால் நாய் தூக்கும்—அவர்
தீயும் வைப்பார் ஒவ்வொரு
கணமும் விழித்திரடா!

நாற்றாய் நட்டால் நாளை
முளைக்கும் காத்து இரு!—புது
ஊற்றாய் வானம் நீரைப்
பொழியும் பார்த்து இரு!
காற்றில் பூவின் வாசம்
பரவப் பூத்து விடும்! —நல்ல
காயும், கனியும் கையில்
செல்வம் சேர்த்து தரும்!

— க. இளங்குமரன் —

# "ஒல"

என்றுமே என்னிதயம்
உனைத்தேடி அலைகிறது,
ஒன்றுமே இன்றுவரை
புரிவதாகவோ நீயில்லை.
உன்னழகை உன்னிலையை
உயர்வாக மதிக்கின்றேன்.
உலகிலே உன்கவினை
எனையன்றி யார் (இ) ரசிப்பர்?
திருவாக இருந்த உன்னைத்
தீண்டி ஒதுக்கியவர் யார்?
தில்லை நடராஜன் கூடத்
தீதாக வுனைக் கருதான்.
அருவாக நீயிருந்து
அகலாமல் என்னுள்ளே
அழகு குலையாமல்
ஆர்ப்பரிக்கும் எழுத்து நீ!

— அளவையூர். கே. எஸ். சிவஞானராஜா —

# புதுக்கோலம் கொள்ளாயோ புத்தாண்டே!

புத்தாண்டே புத்தாண்டே
புதுக்கோலம் கொள்ளாயோ!
புதுக்கொள்கை பூண்டு நீயும்
புவியதனில் வருவாயோ!
பத்தாண்டு காலமாய்
நாம் படும் துன்பமெல்லாம்
பனிபோல் விலத்திடவே
வழி செய்து தருவாயோ!

நாட்டுக்குள்ளே இடம் பெயர்ந்து
நல்லதெல்லாம் நாம் இழந்தோம்
வீடு வாசல் சொத்தெல்லாம்
விட்டு விட்டே நாம் உள்ளோம்
இங்கு மங்கும் இடம் மாறி
இன்னல் பல கண்டுள்ளோம்
அச்சத்துடன் நாம் இருந்து
ஆண்டவனை துணை கொண்டோம்.

உறவென்ற பல உயிரை
காற்றுடனே விட்டு விட்டோம்
ஊரெல்லாம் கூடி நின்று
ஒப்பாரி வைத்து நின்றோம்
பாரெல்லாம் பரந்த மக்கள்
இதையெல்லாம் அறிந்திருந்தார்
புத்தாண்டே நீ வருவாய்
இக்கோலம் மாற்றிடுவாய்.

நாட்டை விட்டு இடம் பெயர்ந்தோர்
நல்லபடி வாழ்கின்றார்
அச்சமின்றி அவரும் அங்கு
இச்சை கொண்டு திரிகின்றார்
ஆனாலும் உறவை விட்டு
தனிமரமாய் நிற்கின்றார்
அதனாலே அவர் மனமும்
அலைமோதி இருக்கின்றார்.

பாரெல்லாம் போர் முழக்கம்
ஊர் எல்லாம் அழு ஒலம்
தேர்கண்ட ஆலயமும்
புதர் மண்டி உள்ளதம்மா
கார்மேகக் கண்ணன் அவன்
தேர்கொண்டு வந்துநின்று
போர் எல்லாம் முடித்துவைக்க
சங்கு ஊதச் சொல்லாயோ!

சிலுவையில் அறைந்த போதும்
சலனமற்று இருந்த யேசு
செவ்விரத்தம் சிந்தி அவரும்
உலகில் ஒளி தந்து நின்றார்
பொறுமையதை பெருமையாக
உலகில் அவர் காட்டிச் சென்றார்
யேசுபோல் ஓர் அவதாரம்
அகிலமதில் தருவாயோ!

மனிதர் குல மேம்பாட்டுக்காய்
வந்துதித்த நபி பெருமான்
மறு உயிரின் துன்பம் கண்டு
துறவு கொண்ட புத்தபிரான்
இவர்களின் துணை கொண்டு
இவ்வுலகில் நீ வருவாய்
மனிதர்படும் அவலமெல்லாம்
மாயமாய் நீ தீர்த்திடுவாய்,

கடந்த கால கவலையெல்லாம்
மாறியே நாம் கழிக்கவேண்டும்.
புவியதனில் உன் வருகை
புதுத்தென்பை தரவேண்டும்
நிலையற்ற வாழ்வில் நாமும்
நிம்மதியாய் வாழவேண்டும்
அகிலமதில் உன் பெயரும் (1998)
ஆழவே பதிய வேண்டும்.

— இ.சி தெட்சணாமூர்த்தி —

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் இருந்து கடலுக்கு

எதியோப்பியன் எயர் லைன்ஸ் விமானமான போயிங் 767 புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தபிளைட்961இன் விமானி லியோல். துணை விமானி யோனாஸ். இருவரும் பேசிக்கொண்டனர். தமது இருக்கைகளில் அமர்ந்தவாறு பறப்புக்கு முன்பதான அனைத்துப் பரிசீலனைகளையும் முடித்துக் கொண்டனர்.

விமானம் இடையில் 3 தளங்களைத் தொட்டுச் செல்ல வேண்டும். எனினும் தொடர்ச்சியான 12 மணி நேரப் பறப்பு நடவடிக்கை அது. காலநிலை சீராக இருந்தது. விமானத்தின் இரண்டு இயந்திரங்களுமே மிகவும் துல்லியமாகச் செயற்படத் தொடங்கின.

42 வயதான விமானி லியோலும் 34 வயதான துணை விமானி யோனாசும் வழமைபோல மிக உற்சாகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். மனதில் எந்த விதமான நெருடலும் இருக்கவில்லை.

நேரம் காலை 10–45 ஐ எட்டிவிட்டது. புறப்பட வேண்டிய நேரம் அது. தயாராகி கம்பீரமாக நின்று கொண்டிருந்த அந்த ஜெட் விமானத்தில் இன்னமும் பயணிகள் ஏறி முடியவில்லை.

எதியோப்பிய தலைநகரான அடிஸ் அபாபாதான்



கடலில் வீழ்ந்து மூழ்கும் விமானத்தை கரையிலிருந்து வீடியோ 'கமரா' மூலம் ஒருவர் படம் எடுத்தார்.

அந்த விமானத்தளம். அது ஆபிரிக்காவின் வடக்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கிறது. எதியோப்பியாவில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தம் கரரணமாக விமான நிலையத்தில் சோதனைக் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தன.

பயணிகள் ஆள் ஆளாக சோதனைகளை முடித்துக் கொண்டு விமானத்தில் ஏறி இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

166 பயணிகளும் 9விமான பணியாளர்களுமாக மொத்தம் 175 பேர் விமானத்தில் இடம் பிடித்து இருந்தனர்.

இயந்திரங்கள் இயங்கத் தொடங்கி ஓசை உச்சம் அடைகிறது. விமானம் மெதுவாக ஓடு பாதையில் உருளத் தொடங்கி, தனதுநிலை எடுத்துக்கொண்டபின் அசுர வேகம் பிடிக்கிறது.

நேரம் 11.09 ஐக் காட்டும் போது ஓடுபாதையினைக் கைவிட்டு மேலெழவும் ரயர்கள் உள்வாங்கப்படுகின்றன. முகில்கள் அற்ற தெளிவான வானத்தில் 31 ஆயிரம் அடிகளை விமானம் எட்டி விட்டது.

சுறுசுறுப்பாக கணனிகளை விட துல்லியமாகச் செயற்பட்ட விமானிகள் மெல்ல ஓயத் தொடங்கினர். பயணிகள் அயலில் இருப்பவர்களுடன் புன்னகை உதிர்த்தும் அறிமுகம் செய்தும் அந்தப் 12 மணி நேரத்தைச் சமாளிக்க ஆயத்தமாகிக் கொண்டனர்.

அந்நேரம் இருக்கைகளில் இருந்து எழுந்த 3 இளைஞர்களின் செயல் எல்லார் வயிற்றிலும் புளியைக் கரைத்தது. ஒருவன் கையில் ஜொனி வோக்கர் பிளைக்லேபல் விஸ்கிப் போத்தல்!

ஆம். எதியோப்பிய எயர் லைன்ஸுக்கு விமானக்கடத்தல் ஒன்றும் புதிய சமாசாரம் அல்ல. விமானிகள் இது தொடர்பான நிலைமைகளைச் சமாளிக்க விசேட பயிற்சி பெற்றவர்கள். அதுவும் லியோல் ஏற்கனவே இரண்டு கடத்தல்களைத் தன் சாதுரியத்தால் சமாளித்துப் பாராட்டுப் பெற்றவன்.

விமானம் பறக்கும்போது கடத்தல்பற்றிப் பகிடிக்கும் நினைக்கக்கூடாது என்பது லியோலின் வாதம். சந்தித்தால் சாதுரியமாகச் சமாளிக்க வேண்டும். அவர்கள் கேட்பதற்கெல்லாம் மறுப்புத் தெரிவிக்காமல் முதலில் இணங்கவேண்டும். சரியான சந்தர்ப்பம் வரும்போது தப்பிக்கலாம்.

இவையே விமானக் கம்பனிகளும் பொதுவாக விடுக்கும் அறிவுறுத்தல்களும் ஆகும். அவற்றுக்கு அமையச் செயற்பட்டு கடத்தல்காரர்களின் கண்களில் மண்ணைத்தூவி விமானத்தைத் தரையிறக்கி அவர்களை உயிரோடு கைது செய்வித்தவன்தான்லியோல். இம்முறை...?

இந்தப் பயங்கரம் நடந்து ஓர் ஆண்டு கழிந்து விட்டது. 1996இன் அந்த நவம்பர் 23ஐ பலரும் வாழ்க்கையில் மறக்க முடியாது. மேலும் பலருக்கு மீண்டும் அந்நாளை நினைவு கூர முடியாது. காரணம் அதுதான் அவர்களின் நினைவுநாள் ஆகிவிட்டது.

மதியாஸ், அலமேகு என்ற இரண்டு கிறிஸ்தவர்களும் சுல்தான் ஹுசைன் என்ற

**175 பேருடன் கடத்தப்பட்ட விமானம் எரிபொருள் தீர்ந்து கடலுக்குள் வீழ்ந்தது. பயணிகள் கதி என்னவாயிற்று? ஓராண்டுக்கு முன்னர் நடந்த நெஞ்சை அதிர வைக்கும் சம்பவம் இது.**

முஸ்லிமும் ஆக அந்த மூன்று இளைஞர்களும் எழுந்து நடைபாதை வழியே விமானி அறையை நோக்கி முன்னேறினர். அவர்களின் முகத்தில் தெரிந்த தீவிரம் அனைவர் கண்களிலும் பீதியைப் புகட்டியது.

சடாரெனத் திறந்தது விமானி அறைக் கதவு. உள்ளே நுழைந்த அலமேகுவின் கறுப்புக் கையுறைக்கு ஒரு டென்னிஸ் பந்து அளவான உருண்டை படாரெனத் திரும்பிய அனுபவம் மிக்க துணை விமானி யோனோஸினால் கையில் இருக்கும் பொருள் என்ன எனத் தெளிவாகக் கூறஇயலவில்லை,

தொடர்ந்து மதியாசும் சுல்தானும் விமானி அறைக்குள் புகுந்து கொண்டனர். வெளியே இன்னும் கடத்தல்காரர்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் இவர்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுக்கத் தயக்கத்தைக் கொடுத்தது.

மொத்து மொத்தென யோனாஸின்தலையில் முஷ்டிகள் மோதின. மண்டைவலி தாங்காது மயங்கும் வேளை அவன் அறைக்கு வெளியே இழுத்து வீசப்பட்டான். இந்த ஆரவார அடிதடிக்கிடையில் தனது இக்கட்டை விமானி லியோல் வானலையில் பரப்பிவிட்டான்.

**இது ஓர் உண்மைச் சம்பவம்**

'பிளைட் ஒன்பது – ஆறு – ஒன்று கடத்தப்படுகிறது' என்ற அச்செய்தியைகிடைத்ததாக பிறிதோர் விமானி பதில் செய்தியும் அனுப்பிவிட்டான். பறக்கும் உலகம் பரபரப்பானது. விமானச் சமிக்ஞைகள் உலகெங்கும் பறந்தன. ஆபிரிக்க கண்டத்தில் 31000 அடிகள் – அதாவது $5\frac{1}{2}$ மைல்கள் உயரத்தில் — யார் உதவிக்கு வரப் போகிறார்கள்?

கடத்தல்காரர்கள் பயணிகளுக்கான அறிவிப்பை உத்தியோகபூர்வமாக விடுத்தனர். செய்வதறியாது பயணிகள் கதி கலங்கி நின்றனர்.

''விமானம் எமது கட்டுப்பாட்டில் வந்து விட்டது. போகும் இடம் எமது தேவை கருதி மாற்றப்படுகிறது. சாகத் தயங்காத நாங்கள் – தேவைப்பட்டால் வைத்திருக்கும் வெடிகுண்டை வெடிக்க வைப்போம்.''

அறிவிப்பின் உக்கிரமும், தீவிரமும்ஆபத்தானநிலைமைகளைக் கோடிகாட்டின. மதியாஸ் துணை விமானியின் ஆசனத்தில் லாவகமாக அமர்ந்து கொண்டான். அவனுக்கு விமானத்தைப் பற்றி என்ன விளங்குமோ? சுல்தான் விமானி அறை வாசலைக் காத்து நின்றான்.

''ஓ.கே! உங்களுக்கு என்ன வேண்டும்?'' இது லியோலின் வழமையான தந்திரத்தின் முதற்படி!

''நாங்கள் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருகிறோம்; விமானத்தை அத்திசைக்கு திருப்பு''

''அது பத்து மணி நேரப் பறப்பு. இந்து சமுத்திரத்தை தாண்ட முன் இடையில் எரிபொருள் தீர்ந்துவிடும். இது எட்ட முடியாத இலக்கு.''

''நோ. ஆஸ்திரேலியா அல்லது குண்டுவெடிப்பு. நோ அதர் சொயிஸ். எது வேண்டும்?''

எரிபொருள் நிலைமை 14 தொன் எனக் காட்டியது. மணிக்கு 5தொன் எரிபொருளை இந்த ஜெட் எரித்துக் கொண்டிருக்கும். விளக்கத்தை அவர்கள் ஏற்கிறார்கள் இல்லை.

நைரோபியில் எரிபொருள் நிரப்ப அனுமதி கேட்ட விமானியின் உத்திக்கு கடத்தல்காரர்கள் இடங்கொடுக்கவில்லை. இன்னும் சுமார் இரண்டரை மணி நேரம் நிம்மதியாகப் பறக்கலாம் என்ற ஆறுதல் விமானியின் மனதிலே பால் வார்த்தது. அதற்கிடையில் ஒரு வழிக்கு இவர்கள் வரத்தானே வேண்டும்?

நைரோபியில் இருந்து சேதி வந்தது. தாராளமாக மும்பாஸாவில் எண்ணெய் நிரப்பிக் கொண்டு போகலாம். யாரும் எந்த இடைஞ்சலும் தரமாட்டார்கள் என்ற அந்த சேதியையும்கூட கடத்தல்காரர்கள் ஏற்கவில்லை.

அத்துடன் அவர்களின் உத்தரவுக்கு ஏற்ப வழமைக்குப் புறம்பான பாதையில் விமானம் திசை திருப்பப்பட்டது. எனினும் சடாரெனக் கடலுக்கு மேலாகப் பறக்காமல் கரையை அண்டி ஓடு பாதைகள் ஏதாவது தென்படுகின்றனவா எனத் துளாவியபடி விமானி செயற்பட்டுக் கொண்டிருந்தான். கடலுக்குள் இறங்கி விட்டால் முடிவு நிச்சயமாகி விடும்.

கரையை அண்டிப் பறக்கும் விமானத்தின் போக்குப் பிடிக்காத கடத்தல்காரர்கள் அடம்பிடித்தனர். சரி! விமானம் கடலை நோக்கித் திரும்பிவிட்டது. ஆனால் இப்போது திரும்புகிற இடம் பற்றி விமானிக்கு கொஞ்சம் திருப்தி. கடலில் முதலில் கொம்றோஸ் தீவுகள் மிதக்கும். அங்கே விமான நிலையம் தென்படும். தப்பினால் மடகஸ்கார் இருக்கிறதே. தெம்பை வரவழைத்துக் கொண்டு கடத்தல்காரர்களுடன் பேசினான்.

''இவ்வளவு அப்பாவிகளையும் ஏன் கொல்ல வேண்டும்? இதில் யாருக்கு என்ன லாபம்? நீங்கள் சாக வேண்டுமானால் வீட்டிலே செத்துக் கொள்ளலாமே?''

''அதில் என்ன லாபம்? இப்படி என்றால் உலகம் முழுவதும் தெரிய வருமே! இது சரித்திரம் ஆகிவிடுமே. இது கூடத் தெரியாதா?'' — என்றான் மதியாஸ்.

எரிபொருள் நிலைமை மடகஸ்காரை எட்டிவிடப் போதாது என விமானி உணர்ந்தான். இனி கொம்றொஸ் தீவுதான் ஒரே தீர்வு. வாழ்வா?சாவா? என்றநிலையில் அங்கு தென்படும் ஓடு பாதையில் விமானத்தைத் தரையிறக்கி விடல் வேண்டும்.

இன்னும் 45 நிமிடங்கள்... இன்னும் 30 நிமிடங்கள் என்றெல்லாம் விமானி தெரிவித்ததை அவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதேவேளை பயணிகளிடம் தாங்கள் பெரிய வள்ளல்கள் போல நடிக்கவும் அவர்கள் தவறவில்லை.

பயணிகளை பாத்ரூம் போக அனுமதித்து இருக்கிறார்கள். போதாததற்கு குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும்படி விமானப் பணிப் பெண்களுக்குக் கட்டளை இட்டும் இருக்கிறார்கள். மனித சமுதாயத்துக்கு ஏதோ அளப்பரிய சேவை செய்துவிட்ட பெருமிதம் இதில் அவர்களுக்கு! சீவன் போகிற நேரம் யார் இதை ரசிக்கப் போகிறார்கள்?

லியோல் நெற்றி வியர்வையைக் கையால் வழித்துத் துடைத்தபடி விமானத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த 'ஏசி'யிலும் அவனுக்கு குப்பென்று வியர்த்தது.

கொம்றோஸ் தீவுகள் தென்பட்டன. நீண்ட ஓடு பாதை கண்ணில் படுகிறது. அதை நோக்கி விமானத்தை நெறிப்படுத்தும் நேரம் எரிபொருள் நிலைமை நிமிடங்களைக் குறைத்துக்கொண்டு மோசமடைகிறது,

அந்த நிலையிலும் அவர்கள் அவனது தரையிறக்க முயற்சிக்கு முட்டுக்கட்டையாகவே நின்றார்கள். அங்கே செல்ல வேண்டாம் என அவன் கையைப் பிடித்து ஆணிகளை உலுக்கினார்கள்.

மு. சிவநேசன்

வலது பக்க தாங்கி பூச்சியத்தை எட்டி இயந்திரம் ஓய்ந்து போனது. முதல் முறையாக பயணிகளுக்கான அறிவிப்பை விமானி மேற்கொண்டபோது அனைவரும் அலறிப்புடைத்து ஆரவாரப்பட்டனர்.

இடது பக்கத்தாங்கியில் சில செக்கன்களுக்கே எரிபொருள் இருப்பதாகவும் தீர்ந்தவுடன் எஞ்சின் நின்றுவிடும் என்றும் விமானி தெரிவித்தான்.

கடூரம் குறையாத பார்வையுடன் கொலை வெறி பிடித்தவர்கள் அசையாது நின்றனர். இனி அசைந்தும் லாபம் இல்லை என்ற நிலைமை. ஓடுபாதையை விடுத்து இழுபறிப்பட்டதில் விமானம் திசைதிரும்பிக் கடலுக்கு மேலாகப் பறக்கிறதே.

வெளியே விழுந்து கிடந்த துணை விமானி யோனாஸ் எழுந்து பயணிகளிடம் உயிர்

(Xஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ணனைக் குழப்பிய கண்ணன்

இராமாயணத்தில் கும்பகர்ணனும் மஹாபாரதத்தில் கர்ணனும் செஞ்சோற்றுக் கடன்கழித்த செம்மல்கள். தின்ற உப்புக்குத் துரோகம் செய்யாமல் தவறென்று தெரிந்ததும் தர்மத்தை எதிர்த்து அதர்மத்தின் பக்கம் நின்று இறுதிவரை போராடியவர்கள் இருவரும்.

கும்பகர்ணன் கடமையைச் செய்யும்போது குறுக்கிட்டுக் குழப்ப யாரும் இருக்கவில்லை.

ஆனால், கர்ணன் கடமையைச் செய்யும்போது அவனைக் கலக்கிய சம்பவங்களை உருவாக்கக் கண்ணன் காரணமாக இருந்தான்.

கங்கையாற்றில் பேழை ஒன்றில் மிதந்து வந்த பிள்ளை ஒன்றைக்கண்டெடுத்து, சீராட்டி வளர்த்தவன் ஹஸ்தினாபுரத்துத் தேரோட்டி ஒருவன். அந்தப் பிள்ளையைத் தன் அரிய நண்பனாக ஆக்கிக்கொண்டு, அவனை அங்கதேச அதிபதி கர்ணனாக உயர்த்தியவன் கௌரவத் தலைவன் துரியோதனன்.

தன் பிறப்பின் இரகசியம் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த கர்ணனுக்கு, அந்த உண்மையை விளக்கியது அவன் தாய் குந்திதேவி என்பது தெரிந்த புராணம். குந்திதேவி கர்ணனைச் சந்தித்து, அவன் காப்பாற்றி வைத்திருந்த பேழையிலுள்ள ஆடையை அணிந்து தானே அவன் தாய்என்று உணர்த்து முன்பே, கர்ணனுக்கு இந்த இரகசியத்தை வெளிப்படுத்தியவன் கண்ணன் என்பது பலருக்குத் தெரியாத கதை...

ஹஸ்தினாபுரத்துக்குப் பாண்டவர் தூதனாக ஸ்ரீகிருஷ்ணன் வந்தபோது முதலில் சந்தித்தது விதுரனை. அதனால் விளைந்தது அவன் வில்லுக்குவினை!

ஹஸ்தினாபுரம் விட்டுப் புறப்படுமுன் கடைசியாகக் கண்ணன் சந்தித்தது கர்ணனை. அதனால் விளைந்தது அர்ச்சுனன் வெற்றி.

அரண்மனைக் கொலுமண்டபத்திலே குருக்ஷேத்திரப் போருக்கு சங்கநாதம்எழுப்பிவிட்டு, தன்னைக் காண கண்ணன் ஏன் தன் அரண்மனைக்கு வந்திருக்கிறான் என்று ஆச்சரியப்பட்டான் கர்ணன். ஒருவேளைபாண்டவர்களைக் காக்கத்தன்னிடம் எதையாவது யாசிக்க வந்திருக்கிறானோ என்று எண்ணினான்.

அப்போது கண்ணன், ''கர்ணா! உன்னிடம் நான் இப்போது எதையும் யாசிக்க வரவில்லை. உன்னைப் பற்றிய ஓர் உண்மையை உன்னிடம் தெரிவித்துப்போகவே வந்தேன். அது உன் பிறப்பின் இரகசியத்தைப் பற்றிய உண்மை'' என்றான்.

காலமெல்லாம், தன் தாய் தந்தையர் யாரென்றும்—தான் பிறந்த குலம் எதுவென்றும் தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தவன் கர்ணன். தன் பிறப்பின் உண்மை தெரியாததால் ஏளனத்துக்கும், நகைப்பிற்கும் ஆளாகித் துடித்துக்கொண்டிருந்த அவனுள் ஒரு கணம் நம்பிக்கை ஒளி பிறந்தது.


''கிருஷ்ணா என் பிறப்பின் இரகசியம் உனக்குத் தெரியுமா?சொல் கிருஷ்ணா! நீ சொல்வது உண்மையானால் நீ கேட்ட பொருள் தருகிறேன்'' என்றான் கர்ணன்.

''கர்ணா! நீ சூரியபுத்திரன். உன் தாய் குந்திதேவி. பாண்டவர்களைப் பெற்றவள்தான் உன்னையும் பெற்றவள்'' என்றான் கிருஷ்ணன்.

கர்ணன் உரக்கச் சிரித்தான். ''கிருஷ்ணா! பாண்டவர்களை வெற்றி பெறச்செய்ய இப்படியொரு சூழ்ச்சியா? உன் நாடகம் விந்தையாக இருக்கிறது'' என்றான்.

''கர்ணா! இதில் வஞ்சனையோ சூதோ ஏதுமில்லை. நான் சொல்வது சத்தியம். திருமணத்துக்கு முன்பே துர்வாசர் உபதேசித்த மந்திரம் ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்து சூரிய தேவன் அருளால் உன்னைப் பெற்றாள் குந்தி. அவமானத்திற்கும் அபவாதத்திற்கும் பயந்து உன்னைக் கங்கையாற்றில் ஒரு பேழையில் விட்டாள்.

''பேழையில் உள்ள ஆடையை எவளால் அணிய முடிகிறதோ அவளே உன் தாய் என்று அசரீரி உனக்குச் சொல்லியுள்ளதை நானும் அறிவேன். உன் தாய் குந்திதேவி நாளை உன்னைச் சந்தித்து அதனை அணிந்து நான் கூறிய உண்மையை நிரூபிப்பாள்''—என்றான் கண்ணன்.



கர்ணன் கண்களில் நீர் மல்கியது.

### கர்ணனின் சந்தேகம்

''கண்ணா, நீ சொன்னது உண்மையானால் நான் க்ஷத்ரியன் என்பது தெளிவாகிவிடும். என் மீது சுமத்தப்பட்ட இழிவுகள் நீங்கி விடும். ஆனால், கிருஷ்ணா ஒரு சந்தேகம். தன் மகன் அருச்சுனனைக் காக்க என்னிடமிருந்தே கவசகுண்டலங்களைத் தானம் வாங்கிச் சென்றான் இந்திரன். பீமனைக் காக்க தன்மகன் ஹனுமானையே பக்கபலமாகத் தந்திருக்கிறான் வாயுதேவன். சாவே வராமல் தர்மனைக் காத்துக் கொண்டிருக்கிறான் யமதர்மன். அஸ்வினி தேவர்கள் நகுலசகாதேவர்களுக்கு அரணாக நிற்கிறார்கள். என் தந்தை என நீ கூறும் சூரிய தேவன்—அன்றாடம் நான் வழிபடும் ஆராதனை தெய்வம்—இந்த உண்மையை கூட ஏன் என்னிடம் கூறவில்லை? என்பொருட்டு ஏன் எதுவும் செய்யவில்லை?'' என்று கேட்டான் கர்ணன்.

### கண்ணன் விளக்கம்

''கர்ணா, குந்தியின் திருமணத்திற்கு முன்பே உன் பிறப்பு நிகழ்ந்து விட்டது. இதனை யாரிடமும் வெளிப்படுத்துவதில்லை என்று சூரிய தேவன் குந்திக்கு வாக்களித்துவிட்டான். அதனால்தான் அவன் இதனை உனக்குத் தெரிவிக்கவில்லை.

''உன்னைக் காப்பாற்றும் வல்லமையை உனக்கே தர, உன்னுள்ளே தர்மசிந்தனையை வளர்த்து, இல்லையென்று வந்தவர்க்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளல் தன்மையை உனக்கு ஏற்படுத்தியுள்ளான் உன் தந்தை சூரியதேவன்.

''உன்னுடைய தானமும், தர்மமும், தயையும், கருணையும் உனக்கு அரணாக அமைந்துள்ளன. உன்னை வெல்வது மிகக் கடினம். மரணம்கூட நீ விரும்பினால் தான் உன்னை வந்தடையும்'' என்றான் கண்ணன்.

''கிருஷ்ணா, மிக்க நன்றி. நீ சொன்னபடி நாளை குந்திதேவி வந்து அவளே என் தாயென நிரூபித்துவிட்டால் என் துயரங்கள் அனைத்தும் மறைந்துவிடும். நானே பாண்டவர்களுக்கு மூத்தவன் என்றால் பாண்டவர்கள் ராஜ்யம் தர்மனுக்கும் மூத்தவனான என்னைத் தானே சேரவேண்டும்? அதனை நான் துரியோதனனுக்கே விட்டுக்கொடுத்துவிடுவேன். அவனையே கௌரவபாண்டவச் சக்கரவர்த்தியாக்கி விடுவேன். அப்போது போர் அவசியம் இருக்காது. இருபுறச் சேனைகளும் வீணாக உயிரிழக்க வேண்டி வராது. உன்னால் நிறுத்த முடியாத குருக்ஷேத்திரப் போரை நான் நிறுத்தி விடுகிறேன்'' — என்றான் கர்ணன்.

### கண்ணன் ஏற்படுத்திய குழப்பம்

''உன்னாலும் முடியாது கர்ணா! அதனைச் சொல்லி விட்டுப் போகவே வந்தேன். நாளை உன் தாய் யாரென்று தெரிந்த பின்பு நீ இப்படி முடிவு செய்தாலும் செய்வாய் என்று தெரிந்து தான் நான்முன்கூட்டியே வந்தேன். பாண்டவர்கள் போர் தொடங்கியிருப்பது இழந்த ராஜ்யத்தைப் பெற மட்டும் அல்ல. துரியோதனனை அழித்து, அன்று சபையிலே பாஞ்சாலியும் பீமனும் அர்ச்சுனனும் செய்த சபதங்களை அவர்கள் எப்படியாவது நிறைவேற்றியே தீருவார்கள். துரியோதனன் தொடையைப் பிளந்து, அவன் உயிரை மாய்ப்பான் பீமன். துச்சாதனன் குருதியால் தன் சிகை முடிவாள் திரௌபதி. உன்னைக் கொன்று தன் சபதம் முடிப்பான் அர்ச்சுனன். இதற்காகவே இந்தப் போர்.

''துரியோதனன் அழிவையும், உன் அழிவையும் தடுக்க வேண்டுமானால் பாண்டவர்கள் அழியவேண்டும். அதற்கு குருக்ஷேத்திரப் போர்தான் வழி செய்ய வேண்டும்.

''நீ பாண்டவர்களுக்கு மூத்தவன் என்பது தெரிந்தால் மற்றுமொரு திருப்பம் கூட ஏற்படலாம். உன்மீது கொண்ட அன்பினால் இராஜ்யத்தை உனக்கும் பாண்டவர்களுக்கும் கொடுத்துவிட்டு, துரியோதனன் துறவியாகிவிடலாம். அப்போதும் தன் சபதத்தை முடிக்க பீமன் தயாராகத்தான் இருப்பான்.

''எனவே, உன் முடிவால் நீ துரியோதனனுக்குத்துரோகம் செய்தவனாகத்தான் ஆக முடியும். நீ பாண்டவர்களுக்கு மூத்தவன் என்று உலகுக்கு அறிவித்து விட்டு, அதன் பின்பு தர்மனையும், பீமனையும், அர்ச்சுனனையும் அழித்து விட்டு, துரியோதனனைக் காப்பாற்றும் பணியைப் பழியில்லாமல் நிறைவேற்ற முடியுமா? சிந்தித்துப்பார்!'' என்றான் கிருஷ்ணன்.

கர்ணன் கலங்கினான்; குழம்பினான். அவன் எண்ணங்கள் தடுமாறின. கிருஷ்ணன் கூறியது உண்மையாகிவிடுமோ என்று தவித்தான். தன் பிறப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலே மடிந்திருக்கக் கூடாதா என்று ஏங்கினான்.

பாசம் ஒருபுறம்; நன்றிக்கடன் மறுபுறம். கர்ணன் உள்ளத்திலே குருக்ஷேத்திரப் போரைத் தொடக்கி வைத்துவிட்டான் கிருஷ்ணன்!

''கர்ணா! உன் பிறப்பின் இரகசியத்தைத் தெரிந்து கொள். அது தவறில்லை. ஆனால் அதனை உலகுக்குச் சொல்லி விடாதே. உன் கடமைகள் முடிந்ததும் நீ யாரென்பது உலகுக்குத் தெரியட்டும். உன் நண்பன் துரியோதனனைக் காத்து அவனுக்கு நன்றிக்கடன்செலுத்த நீ இந்த இரகசியத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்று கூறி முடித்தான் கிருஷ்ணன்.

குந்தி, கர்ணனைச் சந்திக்கப் புறப்படும் முன் தான் செய்ய வேண்டிய பணியைச் செவ்வனே முடித்தான் கண்ணன்.

''கிருஷ்ணா, குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிச் செல்கிறாய்! இருந்தாலும் என்னுள்ளே கறையானாக அரித்துக் கொண்டிருந்த கறையைப் போக்க வழி சொன்னாய். என்னிடம் வந்தவர்கள் யாரும் வெறுங் கையுடன் செல்வதில்லை, என்ன வேண்டும்கேள்', என்றான்கர்ணன்.

''உன்னிடம் நான் யாசித்துப் பெறவேண்டியது ஒன்றுண்டு. அதைக்காலம் வரும்போது கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன்!'' என்று கூறி விடைபெறலானான் கண்ணன்.

—டி. எஸ். என். சுவாமி—

''கிருஷ்ணா, இந்தப் போரில் நீ தர்மன் பக்கமா அல்லது தர்மனுக்கு மூத்தவன் பக்கமா என்பது விளங்கவில்லையே'' என்றான்கர்ணன்

''நான் தர்மத்தின் 'பக்கம்!'' என்று கூறிப் புறப்பட்டான் கண்ணன்.

பின்னாளில் குருக்ஷேத்திரப் போரில் அர்ச்சுனனின் அம்புகளால் துளைக்கப்பட்டு வீழ்ந்து கிடந்த கர்ணனை, அவனது உயிர் பிரிந்து விடாமல் காத்து நின்றான் கர்ணன் புரிந்த தர்மத்தின் தலைவனான தர்மதேவன்.

அப்போது, அந்தண வேடம் பூண்டு அங்கு வந்த கண்ணன், அதுவரை கர்ணன் செய்த தர்மத்தின் பலனையே கர்ணனிடம் யாசகமாகப் பெற்று, கர்ணனின் உயிர் பிரிய வழிசெய்தான்.

★

# எது கல்வி?

நல்ல பாண்டித்தியம் பெற்ற வித்துவான் ஒருவர் ஒரு நாள் ஓர் ஓடத்தில் கங்கையைக் கடந்து கொண்டிருந்தார்.

அப்போது அவர் ஓடக்காரனிடம் ''தம்பி நீ படித்திருக்கிறாயா?'' என்று கேட்டார்.

அதற்கு அவன் ''இல்லை ஐயா, நான் பள்ளிக்கூடமே போனதில்லை'' என்றான்.

'அடாடா உன் வாழ்க்கையில் பாதி வீணாகி விட்டதே'' என்று கூறிவருத்தப் பட்டார் பண்டிதர்.

சிறிது நேரத்தில் ஓடத்தில் ஓர் ஓட்டை ஏற்பட்டு தண்ணீர் குபு குபு வென உள்ளே நுழைந்து கொண்டிருந்ததை ஓடக்காரன் கண்டான்,

''சாமி! தங்களுக்கு நீந்தத் தெரியுமா?'' என்று அவன் பண்டிதரிடம் கேட்டான்.

''தெரியாதே, தம்பி'' என்றார் பண்டிதர்.

''அப்படியானால் உங்கள் வாழ்க்கை முழுவதுமே வீணாகி விட்டதே'' என்று கூறித் தண்ணீரில் குதித்து நீந்த ஆரம்பித்தான் அந்தப் படகோட்டி.

# தருமனும் தருமமும்

ஒரு நாள் பாண்டவர்கள் உணவருந்திக் கொண்டிருந்த போது வறியவன் ஒருவன் வந்து, தருமபுத்திரரிடம் 'ஐயா வறுமையால் வாடுகிறேன், ஏதாவது உதவி செய்யுங்கள்' என்றான். உடனே தருமபுத்திரர் தனது இடது கையால் பக்கத்திலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை எடுத்துத் தானமாகக்கொடுத்தார்.

வறியவன் சென்றவுடன் பீமன் கேட்டான்'' அண்ணா! இடதுகையால் தர்மம் செய்வது பாபமாயிருக்கிறதே. அதற்கு தர்ம பலனும் இல்லையே. எல்லா சாஸ்திரங்களையும் அறிந்த நீங்கள் இப்படிச் செய்யலாமா?'' என்றான்.

''தம்பி! வறியவன் துயர் கேட்டதும் மனமிளகி அவனுக்கு வெள்ளிக்கிண்ணத்தைக் கொடுக்கும் எண்ணம் ஏற்பட்டது. நான் சாப்பிட்டுவிட்டுக் கைகழுவி வந்த பின்பு தரலாம் என்றால் அதற்குள் இந்தப் பொல்லாத மனம் எப்படி மாறிவிடுமோ? ஒருவேளை வேறு ஏதாவது பொருளைக் கொடுத்தால் போதாதா, வெள்ளிக் கிண்ணம் எதற்கு என்று தோன்றலாம். எனவே நல்லதைச் செய்ய நினைக்கும் போது இந்த நொடியிலேயே செய்வது நல்லது. அதனால் நமக்கு ஏற்படும் நன்மை தீமையை விட பிறருக்கு ஏற்படும் நன்மையே முக்கியம்'' என்றார் தருமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06-01-98 அன்று நிகழும் வியாழ மாற்றம்

# உங்களுக்கு எப்படி?




(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதங்கள்)

உங்களுக்கு இலாபஸ்தானமான 11ஆம் வீட்டில் குருபகவான் வருகின்றார். ஏழரைச் சனியும் இருக்கின்றார். நல்ல முன்னேற்றரகமான காலமாகும். புதிய திட்டங்கள் உருவாகும்.

இது வரையில்இருந்து வந்த துன்பச்சாயல் உங்களை விட்டு அகலும். போராடிப் போராடி வாழ்க்கை நடத்தும் உங்களுக்கு நன்மைகள் செய்வதற்காக குரு வருகின்றார் என்பதை மறக்காதீர்கள். தடைப்பட்ட பொருள் தேடி ஓடி வரும். உறவினர்கள் வாழ்த்துவார்கள். சலித்துப்போய் இருந்த உங்கள் தொழில் துளிர் விட்டுத் த்ழைக்கும் என இருப்பதனால் எதிலும் ஊக்கமாக இருக்க முயலுங்கள். சிலர் உங்கள் திசை திருப்பங்கள், பணப்புழக்கங்களைக் கண்டு உங்களை வாழ்த்திப்பொருள் கேட்பர். மயங்கிப் பொருளை இழந்து விடாதீர்கள். உங்கள் சுயசிந்தனை, விடா முயற்சியால் தொழில் ஸ்தானத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சகோதரர்களுக்காகவும், புத்திரர்களுக்காகவும் ஓடியாடித் திரிந்து பல நன்மைகளைச் செய்வீர்கள். உஷ்ண வியாதிகள், வலி, கண்நோ என்பன இருக்கும். காணி, பூமி சேரும் புதிய வாகனம் அல்லது வாகனத்திற்கு பணச்செலவு ஏற்படும். எதிர்ப்பாலார் உங்களுக்குப் பல உதவிகள் செய்வார்கள். தெய்வீக சக்தி பொருந்திய பெரியார்களுடன் தொடர்புகள் ஏற்படச் செய்யும்.

சிலர் உங்கள் பொருள் நிலை கண்டு பொறாமைப்பட்டு தூற்றுவார்கள். அதையெல்லாம் பெரிதாக எடுக்காமல் அவதானமாக நடந்து கொள்ளுங்கள். வாழ்க்கையில் ஒரு பகுதியினர் எதிர்க்கவோ கோபப்படவோதான் செய்வர். அதை எல்லாம் நாம் பொருட்படுத்தலாகாது. அடிக்கடி சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து வழிபாடுகளைச் செய்து வரவும்.




(கார்த்திகை 2, 3, 4 ரோகிணி, மிருகசீரிடம் முதலாம் 2ஆம் பாதங்கள்)

உங்களுக்கு தொழில் ஸ்தானமான 10இல் வியாழன் வருவதனால் உங்கள் தொழில், குடியிருக்கும் காணி, பூமியில் மாற்றங்கள் ஏற்படச் செய்யும். உங்கள் நிலையில் சிறிய மாற்றங்கள் ஏற்படச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். அபிப்பிராய பேதங்களும் இடைக்கிடையே பொருள் ரீதியிலான பிரச்சினைகளும் உருவாக இடம் உண்டு. அடிக்கடி அலைச்சல் ஏற்படும். புதிய திட்டங்களைப் போடுவீர்கள். சட்டங்கள் தடுத்தாலும் உங்கள் சாதுரியத்தால் சில நன்மைகளைப் பெறாமல் இருக்கமாட்டீர்கள். எதிர்ப்பாலாரின்ஆலோசனைகளை நீங்கள் கேட்க மாட்டீர்கள். ஆயினும் கொஞ்சம் அனுசரித்து நடந்தால் நன்மைகள் ஏற்படும். நீங்கள் உங்கள் உடல் நிலையைக் கரிசனையாகக் கவனிக்க வேண்டும். காரணமில்லாமல் மற்றவர்களின் காரியங்களில் ஈடுபட்டு உங்கள் கால நேரங்களை செலவழிப்பதுடன், குறையும் அடிக்கடி கேட்பீர்கள். எதிர்ப்புகள் அடிக்கடி இருந்தாலும் மறைமுகப் பகைவர் எதையும் உங்களுக்குச் செய்துவிட முடியாது. உங்கள் குடும்பச் சொத்தால் நீங்கள் சிலரின் பேச்சுக்களுக்கு ஆளாக நேரிடும். விதிவசப்பட்ட பலன்கள் தேடி ஓடி வந்து வருத்தியபடி இருக்கும். அடிக்கடி புத்திரர்களுக்காக பொருள் செலவுகளோடு அலைச்சல்களையும் அடைவீர்கள்.

உலக காரியங்களில் பொதுத் தொண்டுகளில் நீங்கள் ஈடுபட்டாலும் நிதானமாகச் செயற்படுங்கள் அல்லது குறைகுற்றங்கள் கேட்பீர்கள்.

1998ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து செப்ரெம்பர் 1998 வரையும் வரும் சனீஸ்வரனின் வக்கிர காலத்தில் சற்று கஷ்ட நசடங்கள் ஏற்படச் செய்யும். ரோகிணி நட்சத்திரகாரர்களுக்குத் திடீர் பணவரவு ஏற்படச் செய்யும். திடீர் நிலை தடுமாற்றம்,விதிவசப்பட்டு குற்றவாளியாகும் நிலை சிலருக்கு ஏற்படலாம். அவதானமாக இருக்கவும். பொதுத்தொண்டுகள் அல்லது அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். உங்கள் வாக்கு வன்மையால் பல காரியங்களைச் சாதிக்கும் காலமாகும்.




(மிருகசீரிடம் 3,4ஆம் பாதம், திருவாதிரை, புநர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்)

உங்களுக்கு 9ம் இடமான புண்ணிய ஸ்தானத்தில் குரு பகவான் வருகின்றார். இது வரை அட்டமத்திலிருந்து அலைச்சல் விரயங்களைத் தந்தவர் பொருளைத் தரும் ஸ்தானத்தில் வருவதனால் திருமகளின் அருளைத்தர இடம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் அல்லது உத்தியோக ஸ்தானத்தில் மாற்றங்கள், நன்மைகள் கொடுக்கும். அரச அதிகாரிகள், பாதுகாப்புத்துறையினர் உங்களுக்கு உதவிகள் செய்வார்கள். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். புதிய திட்டங்கள் கருவாகி உருவாகச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். திருமண சுபமங்கள காரியங்கள் நிறைவேறும். வீடுமனையில் சிறப்பு, உடல் நிலையில் முன்னேற்றங்கள் கொடுக்கும். வாகனச் சிறப்பு வரும். உங்கள் ஜனனக்குறிப்பில் திசாபுத்திகள் சாதகமாக இருக்குமாயின் வெளிநாட்டு வாய்ப்பு வரும். அல்லது வெளிநாட்டிலிருந்து பொருள் உதவிகள் கிடைக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

சனீஸ்வரன் வக்கிரம் செய்யும் காலமான 25–6–1998 முதல் 29–9–1998 வரையும் கவனமாக இருக்கவும். இக்காலத்தில் சிலருக்கு காத்திரமான காலமானதால் நற்பலன்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் புத்திரர்களுக்கும் சகோதரர்களுக்கும் பல முன்னேற்றகரமான நன்மைகளைக் கொடுக்கும். பொதுச் சேவையில் கௌரவிக்கப்பட இடம் உண்டு. மாணவர்களின் கல்வியில் சிறப்புக்கள் ஏற்படும். விசேடமாகத் திருவாதிரை நட்சத்திரகாரருக்கு பலவித நன்மைகள், மாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. தொழில் அல்லது பிரயாண வாய்ப்புக்களைத் தேடிக் கொள்ளவும்.




(புநர்பூசம் 4ஆம்பாதம், பூசம், ஆயிலியம்)

உங்களுக்கு அட்டமத்தில் வியாழனாகிய குரு வருவதனால் இடமாற்றங்கள், உங்கள் நிலை, பொருள் முதலிய விஷயங்களில் கொஞ்சம் மந்த நிலை ஏற்படச் செய்யும். உடல் நிலையில் தாக்கங்கள், குடும்பத்தில் மனஸ்தாபங்கள், அயலவர்களின் பொருமல், உதவி செய்வதாக நடித்து உங்களை மாட்டிவிடும்நண்பர்களின் சேர்க்கைகள், இனஜனவிரோதங்கள் என்பன ஏற்படச் செய்யும். பத்திரிகைத் தொழில், மின் உபகரணத் தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள். தேவையற்ற பொறுப்புக்களை பொறுப்பேற்காதுதவிர்த்துக்கொள்ள முயற்சிக்கவும்.

வீடு, மனை, பொருள், வாகனம், தொழில்ஸ்தானம் என்பனவற்றில் மாற்றங்கள் தொடரும். அரசபயம், ஆயுதம் தாங்கியவர்களால் உபத்திரவங்கள், அறியாமையால் எதிர்பாராத கஷ்டங்கள், போட்டி பொறாமைகள் உள்ளவர்களால் கஷ்டப்பட வேண்டி வரலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். சீட்டு எனச் சொல்லி பணம் பறிக்கப்படும் நிலை ஏற்படலாம். எல்லாத் துறையிலும் அறிவைத் தொட்டுத் தொட்டு வைத்திருக்கும்நீங்கள் தெய்வ பக்தியில், உணர்வில் எப்பொழுதும் இருந்து வாருங்கள். துன்பங்கள் ஓரளவு விலகி நடக்கும். இது வரை உங்கள் சுயமுற்சியால் தேடிய செல்வங்களை இழந்துவிடாமல் எந்தச் செலவுகளானாலும் பலமுறை யோசித்து யோசித்துச் செயற்பட்டு வாருங்கள். எந்தத் துறையில் இருந்தாலும் பொருள் விஷயங்களில் மிகவும் அவதானமாகஇருந்து வாருங்கள். தூரதேசப்பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கண், நரம்பு, எலும்பு சம்பந்தமான இடங்களில் தாக்கங்களும். நோக்களும், வீக்கங்களும் ஏற்படச் செய்யும். ஆயிலியம் நட்சத்திரகாரர் அவதனமாக இருக்கவும். நீங்கள்முரட்டுத்தனமாக முன் யோசனையின்றி சில காரியங்களில் ஈடுபட்டு விட்டுப்பின்பு வருந்துவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருத்தல் வேண்டும். பொது வாழ்வு, அரசியலில் ஈடுபடுபவர்கள், வியாபாரிகள் தங்கள் பொருள்கள், நடவடிக்கைகளில் அவதானமாக இருத்தல் வேண்டும். அல்லது சட்டத்தின் கரங்கள் அரவணைக்கு இடம் உண்டு.வழக்குக் கணக்குகளால் விதிவசப்பட்ட பலாபலன்கள் நடக இடம் உண்டு.




(மகம், பூரம், உத்திரம் முதலாம் பாதம்)

உங்களுக்கு தாரஸ்தானமான 7ஆம் வீட்டில் குரு வருகின்றார். எந்த விஷயங்களிலும் நியாயமாக நடந்து கொள்ளும் இயல்புடைய நீங்கள் குடும்ப விஷயத்தில் கண்டிப்பைக் குறைத்து வாழத் தெரிந்திருக்க வேண்டும். குடும்பத்தினருக்காக சுபமங்கள காரியங்களில் ஈடுபாடு, பேச்சு வார்த்தைகள் ஏற்படும். அட்டமத்துச்சனி (8 இல் சனி) சிறைப்பட்ட வாழ்வு, தலைக்குமேல் புதிய பொறுப்புக்களைக் கொடுத்திருக்கும். இப்பொழுது ஒரு விடிவு ஏற்பட வியாழ பகவான் வழிவகுப்பார். புத்திரர்களுக்கும் சகோதரர்களுக்கும் நன்மைகள் ஏற்படும். பணத்தைப் பெரிதாக நீங்கள் கருதாவிட்டாலும், பணம் தேடி ஓடி வரும். குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்காகவாவது சில காரியங்களைச் செய்வீர்கள். உதயத்தில் இராகு, கேது இருப்பதனால் அடிக்கடி எடுக்கும் செயற்பாடுகளில் சோர்வுகள் ஏற்படும். உங்கள் குறைகுற்றங்களை, மனப்பாரங்களை தெய்வத்திருப்பணிகள் செய்து குறைத்துக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் இதுவரை இருந்து வந்த தடைகள், தாமதங்கள் ஓரளவு விலக இடம் உண்டு. புதிய உலகம், புதிய திட்டம், இடமாற்றங்கள் என்பன செய்து கொள்ள முற்படுவீர்கள். அட்டமத்துச் சனி இடைக்கிடையே தரும் துன்ப துயரச்சாயலை குரு பகவான் மாற்றி அமைத்துத்தர முற்படுவார். பெரியவர்கள், நல்லவர்கள் தெய்வபக்தி மிக்கவர்களின் ஆலோசனைகளின் படி செயற்பட்டபடி இருக்கவும்.

உடல் நிலையில் உஷ்ண பீடைகள், சளி வருத்தங்கள், மூலரோகம் அல்லது மறைமுக வருத்தங்களால் வருந்துவீர்கள். தகுந்த வைத்தியம் செய்துவரச் சுகம் கொடுக்கும்.




(உத்தரம், 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள்)

உங்களுக்கு சத்துருஸ்தானம், பினிஸ்தானமான 6ஆம் பாவத்தில் குரு வருகின்றார். இதனால் வேண்டாத பல தொல்லைகள் உருவாகும். தொழில் ஸ்தானத்தில் மறைமுகப் பகைமை பிறரின் எரிச்சலால் ஏற்படும். மறைமுகச் சத்துராதிகளின் தொல்லைகள் இருந்து வரும். ஓடி ஓடித் தேடினாலும் ஒன்றும் மிஞ்சாது. அதிக பிரயாசை, அதிக அலைச்சல், இடமாற்றங்கள் கொடுக்கும். எக்காரியத்திலும் தடை, தாமதங்கள் ஏற்பட்டபடி இருக்கும். 6 – 1 – 1998இலிருந்து வியாழன் 6இல் வந்தாலும் 7ஆம் இடத்தில் கண்டகச்சனி இருப்பதால் குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன்ஏட்டிக்குப்போட்டியான பலன்களைச் செய்யும். ஜூன் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை சனி வக்கிரகதி அடைந்து 8ஆம் இடத்திற்கு வருவதனால் இக்காலங்களில் அவதானமாக இருத்தல் வேண்டும்.

மனைவி அல்லது கணவனால் பொருள் அதிக செலவுகளைக் கொடுக்கும். வைத்தியம் என்றோ ஆடம்பர ஆடை, நகை என்றோ, கடன் என்றோ பொருட்செலவு கட்டுக்கடங்காமல் இருக்கும். சகல வசதிகளும் கிடைத்துக் கொண்டிருக்கும் அதிர்ஷ்ட இராசியாகிய உங்கள் இராசிக்கு அடிக்கடி சீறிச்சினத்து சில காரியங்களைத் திசை திருப்பவும் செய்யும் பலன்கள் காணப்படுகின்றன. உங்கள் சுயசிந்தனை சுயநலத்தால் உங்களுக்கு அதிக நன்மைகள் தொடுக்கும். சனீஸ்வரன் வக்கிர புத்திக் காலத்தில் கவனமாக இருக்கவும். தீய பலன்கள் தேடி ஓடி வரும்; நண்பர்கள் ஏமாற்ற எண்ணுவர். கைக் கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலை ஏற்படும். இக்காலங்களில் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

## மஹாதேவா ஜோதிடம்

நல்லூர்




(சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம், பாதங்கள்)

குரு உங்களுக்கு நன்மையான பலன்களைக் கொடுப்பான். பூர்வ புண்ணியஸ்தானம், புத்திஸ்தானம், புத்திரஸ்தானமான 5 ஆம் வீட்டில் வியாழன் வருவதனால் புத்திரர்கள் சிறப்பு அடைவார்கள். புதிய மாற்றங்கள் சிறப்புக்களைக் கொடுக்கும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரவ ாய்ப்பு உண்டு. பெரியவர்கள், தெய்வபக்தி உடையவர்களின் அன்பு, ஆசி, ஆறுதல் வார்த்தைகள் கிடைக்கும். எதிர்ப்பாளர் நல்லதைச் செய்வார்கள். குடும்பத்தில் பலவித சிறப்புக்கள் தோன்ற இடம் உண்டு. சனீஸ்வரன் வக்கிர காலமான 25–6–1998 முதல் 29 – 9 – 1998 வரையும் எதிர்ப்பாலருக்கு நோய் நொடிகள் வரப் பலன் உண்டு அதன் நிமித்தம் அதிக பொருள். செலவுகளும் கொடுக்கும்

புதிய திட்டங்களைக் கருவாக்கி உருவாக்குவதிலும், வெளிநாட்டு வாய்ப்புஅல்லது வெளிநாட்டுவரவுகளில் கண்ணாக இருக்கவும். அதனால் உங்கள் குடும்பத்தினருக்கு காத்திரகரமான நற்பலன்களைச் செய்வதற்கு அனுகூலங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும். பொருள் வரவுகள் அதிகரிக்கும். எப்படியாவது வாழத்துடித்து உலகத்தில் நல்லது, கெட்டதைச் செய்து நாலுகாசு சேர்க்க வியாழ பகவான் உதவிகள் செய்யும் இடத்தில் வருவதனால் காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளவும். எந்தக் காரியங்களையும் சாதுரியமாக முடிக்கும் வல்லமை இக்காலங்களில் நிச்சயம் ஏற்படும். மாணவர்கள் நன்மையோடு கல்விச் சிறப்பை அடைவார்கள்.




(விசாகம் 4 ஆம், அனுஷம், கேட்டை)


உங்கள் குடும்பத்தில் சலசலப்பு ஏற்படும். சகோதரங்கள் எதிர்ப்பாலருக்காக அடிக்கடிஅலைவீர்கள். வீடு, மனை, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இனம் தெரியாத பயம், அபிப்பிராய பேதம், பதற்ற நிலைகள் அடிக்கடி வர இடம் உண்டு. குடும்பசுகம், தாயாரையும், தாய் வழியினரையும் திருப்தி செய்யும் நிலையில் அதிக செவுகளைச் செய்ய வேண்டி வரலாம்.

(IXஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல. 31




சொற்சிலம்பம் இல. 31
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ......................................

விலாசம்: ......................................

......................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 09 — 01 — 1998

**இடமிருந்து வலம்**

1. நகம். 3. குருவுக்கு சிஷ்யர்கள், செய்வது. 6. மரம். 7. கோவலன் மயங்கியது இவளிடம். 8. திருமால். 9. திறை. 11. சந்திரன். 12. செருக்கு. 14. அச்சம். 16. பாகஞ்செய். 17. தாழி. 18. சுவாச நோய். 20. பூச்சு மருந்து. 21. வேறுபாடு. 22. திக்கு.

**மேலிருந்து கீழ்**

1. ஒத்தாசை. 2. மாயக்கண்ணன். 3. பாதிப்பை ஏற்படுத்தும். 4. அந்தரப்படுதல். 5. இந்துசமயப் பிரிவுகளுள் ஒன்று. 10. உயிர் பறிக்கும் இடம். 11. ஒரு வகை கொடிய நோய். 12. வேகமாக விரைவது. 13. அதிமதுரம் போன்ற ஒரு மருந்து. 15. தமிழ் அமைப்புகள் ஒன்றுபட்ட இடம். 17. மாத்திரை. 19. இணக்கத்தைக் குறிக்கும் சொல்.

**சொற்சிலம்பம் 29 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. சாமந்தி. 4. தாபம். 6. கட. 7. ருக்மணி. 8. ரம்பம். 10. தகைமை. 12. கோபுரம். 14. கடா. 15. பால். 16. தலை. 17. அம்பாரி. 19. குமாரன். 21. தின். 22. புத்திசாலி.

**மேலிருந்து கீழ்**

1. சாகரம் 2. மடம். 3. திரு. 4. தாமதம். 5. பணிகை. 9. பகோடா. 11. மையல். 13. ரசம். 14. கலைமான். 15. பாரி. 16. தகுதி. 17. அன்பு. 18. பாரதி. 20. வாலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: த. கஜிர்தன்,
25, சிவன் புது வீதி,
நல்லூர்.

★ இரண்டாம் பரிசு: இ. சாந்தன்,
101, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: கே. கனகசபாபதி,
வடலித் தோட்டம்,
புலோலி மேற்கு, தம்பசிட்டி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50 00 |

★ புதிர்போட்டி இலக்கம். 30 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# கறுப்பியும் சிவப்பியும்...

சஞ்சீவி சிறுகதை

'...உவளவைக்கு எப்ப பார்த்தாலும் என்னிலை காய்மகாரம்... எரிச்சல்... பொறாமை... என்ரை கறுப்பியையும், சிவப்பியையும் பார்த்து நெடுக உழைச்சுக் குடுத்துக் கொண்டு இருக்கிறாளவையெண்டு கதை கதையெண்டு கதைக்கிறாளவை... நான் அவளவையின்ரை உழைப்பிலை விதம் விதமாச் சீலை வாங்கி உடுத்திறனாம்... நான் இந்தக் கைம்பெண் படுகிறபாடுகள் இவளவைக்குத் தெரியுமோ... என்ரை கறுப்பியும், சிவப்பியும் வருத்தம் வந்து கிடக்கேக்கை உவளவையோ உந்த உச்சி வெய்யிலுக்குள்ளாலை டாக்குத்தருட்டைக் கொண்டு போய் மருந்து வாங்கினவளவை. நான் தனியக் கிடந்து படாதபாடு பதினெட்டும் பட்டு அவளவையை எழுப்பி விட்டிருக்கிறன். அவளவை இப்ப எனக்கு உழைச்சுத் தாறாளவை... நான் விதம்விதமாய் உடுக்கிறன்... உவளவைக்கு ஏன் எரியுது...? அவளவை இரண்டு பேரையும் சும்மா திண்டு கக்கிறாளவை...''

நான் உவளவையைப் போலை வெள்ளாப்போடை எழும்பி மொட்டாக்கும் போட்டுக் கொண்டு பதுங்கிப் பதுங்கி கள்ளப்பனங்காய் பொறுக்கி பனங்கழி பிசைந்து பினாட்டுப் போடுறனானே... பாடுசூப்பிற பனங்கொட்டையளைக் கள்ளமாய் பொறுக்கி பனம்பாத்தி போடுறனானே... இவளவை நினைச்சுக் கொண்டாளவை இந்தப் பாறி (பார்வதி) தங்களைப் போல வெக்கம், ரோசம், மானம் கெட்டவளெண்டு.

..அந்தக் கண்கெட்ட கடவுள் என்ரை மனுஷனை குறுக்காலை கொண்டு போகாட்டி நான் இன்னும் எவ்வளவு றாங்கியாய் இருப்பனெண்டு இவளவைக்கு தெரியுமே...

அந்த மனுஷன்... என்ரை ராசா... என்ரை பிரபு செத்துப் போன நாளையிலையிருந்து இந்தப்பாறி என்ன சும்மா ஆரிட்டைன் கையேந்தினவளே...? ஆரிட்டையும் சோத்துக்குப் போனவளே... மானம் ரோசத்தோடை தன்ரை கையடிச்சுத் தான் சீவியம் விட்டவள்... விடுகிறாள் என்ரை கறுப்பியையும் சிவப்பியையும் ஆரிட்டையும் சோத்துக்கு விட்டனானே... என்ரை வீட்டோடை தான் அவளவை கிடக்கிறாளவை... அவளவை அதுதான் என்ரை கறுப்பியும் சிவப்பியும் தங்களுக்கு விருப்பமான மாப்பிளைமாரைப் பிடிக்கிறாளவை உவளவையிலை கொஞ்சப் பேர் மற்ற அயல் சனங்கள் வந்திறங்குறதுக்கு முதல் ஓடிவந்து, கதியால் வெட்டி கள்ளக்காணி பிடிச்சவளவை... சீ... தூ... அற்பன்கள்... ஏதோ தாங்கள் போகேக்கை காணியை தங்கடை முதுகிலை சுமந்து கொண்டு போறவளவை போலை கேவலம் பிடிச்சவளவையள். இந்தப் பாறியையும் தங்களைப் போலை நினைச்சுட்டாளவை... ஆறடி நிலம் அவளவைக்கு காணாதாக்கும் எரிஞ்சு சாம்பலாக.

உவளவையின்ரை கண்ணூறுதான் என்ரை கறுப்பி

## துரை. சுப்பிரமணியன்

யாம்... அவளவைக்கு வயது வந்திட்டுது. ஆசையிலை ஆரையன் பிடிக்கட்டன்... நானென்ன செய்யிறது அதுக்கு அவங்கள் தங்களுக்கு சீதனமும் வேண்டாம் ஒண்டும் வேணாம் 'சிங்கார நாச்சியார் வந்தாலே போது' மெண்டு வாறாங்கள்... தங்கடை விருப்பத்துக்கு வேலிப் பொட்டுக்குள்ளாலை பூந்து வாறவங்களை நானென்ன செய்யிறது... நானென்ன கூட்டியே விடுகிறன்... அவளவையின்ரை வடிவிலை அவங்கள் வேலிதாண்டி வாறாங்கள்... என்ரை கறுப்பியையும் சிவப்பியையும் பற்றிக் கதைக் காட்டி உந்த அயல் பெண்டுகளுக்கு நித்திரையே வராது...

உவளவை தங்கடை புருஷன்மாருக்குத் தெரியாமல் முப்பத்தெட்டுச் சீட்டுக்களும் போட்டுக் கொண்டு, உவளவையைப் பற்றி எனக்குத் தெரியாதே... நான் ஆற்றையும் வீட்டுக் கதையே கதைச்சுக் கொண்டு திரியிறன்... உவளவை எறிதாவணியும் போட்டுக் கொண்டு பொக்குள் தெரிய வண்டிக்குக்கீழை சீலையும் உடுத்துக் கொண்டு சீ... மானம் கெட்டவளவை உவளவையும் ஒரு மனுசரே... இடம்பெயர்ந்து போய் மற்றவைக்கு முதல் ஓடி வந்து அயல் வீடுகளிலை சருவச்சட்டி, பீங்கான், கோப்பைகளை களவெடுத்துக் கொண்டு வந்து தங்கடை வீடுவளிய வைச்சுக்கொண்டு டீங்கு காட்டுமாப் போலையெண்டு நினைச்சுக் கொண்டாளவை இந்தப் பாறியை...

யும், சிவப்பியும் இப்ப ஒண்டாய் அடைகிடக்குறாளவை... அதுக்கென்ன பறவாயில்லை... நான் இரண்டு பேருக்கும் பதினைஞ்சு பதினைஞ்சு முட்டையள் அடைவைக்கப் போறன். அதிலை எத்தனை கறுப்பியளும், சிவப்பியளும் வரப்போறாளவை யென்டு பாப்பம்... இவளவைக்கு இன்னும் எரியட்டும்... நான்... இந்தப் பாறி என்ரை கையடிச்சுத் தான் உழைப்பன்... விதம் விதமாய் சீலை சட்டையள் வாங்கி உடுப்பன்... கௌரவமாய்ச் சீவிப்பன்... இந்த மண்ணிலை... கௌரவமாய்ச் சாவன். ஆரும் என்னோடை செருக வந்தால் கிழி கிழியெண்டு கிழிச்சுப்போட்டுத் தான் விடுவன்... ஓ...!! ★

(யாவும் கற்பனை.)

## இவர்கள் நிலை

புல்லட் புறூவ் பூண்ட
மார்பும்
எல். எம். ஜி. சுமந்த
தோளும்
லங்கா புவத்திற்கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
ரஷ்ய டாங்கி பலவும்
அமெரிக்கா கொடுத்த
ஹெலியும்
ஆட்டிலெறியும் களத்தே
விட்டு
வெறுங்கையோடு தெற்கே
புக்கார்.

- எஸ். என். ஜே -

## குறள் வெள்ளம்

கண்முன்னே நாம் காணும் சாதாரண விடயங்களை எடுத்தால் பல புதிர்கள் விடுவிக்கப்படுதல் இல்லை. இருவர் ஒரே மாதிரி ஒரே தொழிலை செய்கிறார்கள். ஒருவருக்கு இலாபம். மற்றவருக்கு படு நஷ்டம். அது ராசி என்பார்கள்.

வருடம் முழுவதும் திறமையாக படிப்பவன் பரீட்சையிலே கோட்டை விடுகிறான். காரணம் அவனுக்கும் புரியவில்லை. ஆசானுக்கும் விளங்கவில்லை.

இவ்வளவு பிரச்சினைகள் நடந்து விட்டன. இப்போது பார்த்தால் பல வீடுகள் இருந்த இடம் தெரியவில்லை. நடுவிலே சில வீடுகளில் சன்னம் கூடப் படவில்லை. அவன் மனது சுத்தம்...... அதுதான் அப்படி என்பார்கள்.

பல்லக்கில் ஏறுபவனும் மனிதன். பல்லக்கைச் சுமப்பவனும் மனிதன். அவனவன் செய்த தருமம் அந்தந்த இடத்தில் விட்டு வைத்ததோ?

இப்படியெல்லாம் முரண்பட்ட இருவரிடையே போய் அறவழி (அறத்தாறு) எது வென விளக்கம் கொடுக்கத் தேவை இல்லை. அடுத்தவனோடு ஒப்பிட்டு அவர்கள் தாமாகவே விளங்கிக் கொள்ளட்டும்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை
—0037

தருமத்தை பெரிதுபடுத்தி ஆரவாரமாகச் செய்தலில் பயன் இல்லை. பிறந்த நாள், மாசியம் என்று ஆண்டுக்கொரு ஆரவாரம் எதனையும் தராது.

தினமும் தவறாமல் ஏதாவது சிறுகச் செய்துவிடு. வீழ்நாள் — செய்யாத நாள் — உன் அறவழியில் ஓட்டையைப் போட்டுவிடும். அதனூடே துன்பங்கள் மனத்தினுள்ளேயும் வாழ்வினுள்ளேயும் புகுந்து ஆட்டத் தொடங்கி விடும்.

எனவே வேண்டியவனுக்கு வேண்டிய இடத்தே துயர் துடைக்கத் தினம் தினம் சிறு உதவியேனும் செய்து விடுதலே அறம். என்றும் நன்றே ஆற்றிவிடு. உன் வாழ்நாளில் துயர்புகும் வழியை அது அடைத்து விடும்.

வீழ்நாள் படாமை நன்றாற்றின்
அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.
—0038

(அறன்வலியுறுத்தல்)

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழ மாற்றம்...

(VII ஆம் பக்கத் தொடர்)

உறவினர்கள் வீண்பழி சுமத்தும் நிலை ஏற்படலாம். கடன்படு நிலை சிலருக்கு வரலாம். ஓடிஓடி பொருள் தேடினாலும் பொருள் வீடு வந்து சேராதநிலை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகளும் கோள் சொல்லிக் கொடுமைகள் செய்யும் கொள்கையுள்ள சிலரால் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படலாம். மேலதிகாரிகள் முதலில் கோபித்தாலும் பின்பு உதவி செய்வார்கள். பெற்றவரோ உடன் பிறந்தவரோ நல்லதைச் சொல்வார்கள் என எதிர்பார்க்கக் கூடாது. உங்கள் ஜனனக் குறிப்பில் திசா புத்திகளின் படி பலாபலன்கள் கூடிக் குறையலாம். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும்.

உங்களை உருக்குலைக்கும் யோசனைகளைச் சிலர் தந்து அதில் வேதனை அடையச் செய்வார்கள், அரசாங்கத் தொழிலொன்று வருகின்றதென்று கூறி சுளையாகப் பணம் கேட்டுப் பெறச் சிலர் முயலுவர். வெளிநாடு சென்று வாரிவாரிப் பொருள் சேர்ப்பீர் என்று மனம் மகிழக் கூறிப் பணம் கறக்கச் சிலர் ஆசைவார்த்தைகள் கூறிடுவார். கொடுத்த பணம் தராத சிலர் புதிய கடன் கேட்டு ஓடியாடி வந்து உங்கள் வாசலில் நின்றிடுவார். வாகனத்தில் ஏறியதும் சென்றிகளில் இறங்காது ஓடிவிடும் எண்ணங்கள் அடிக்கடி ஏற்படும். அரசியலில் புகழ் தேட அவதிப்படும் சிலர் போல, குறுக்குவழிகளில் குறுகிய எண்ணம் கொண்டு பெட்டிசன்கள் எழுதிக் குவித்திடப் பல எண்ணங்கள் வட்டமிடும். உங்கள் பொறுப்புக்களில் உறுதியுடன் இருந்துவிட்டால் குவலயத்தில் பகைமையைக் குறைத்து நீங்கள் பல நன்மை பெற்றிடுவீர்.

இந்த இராசிக்காரர் வியாழக்கிழமை தோறும் தட்சணாமூர்த்தி வழிபாடும் ஏனைய சமயத்தவர்கள் தங்கள் குல தெய்வ வழிபாடும் செய்து கஷ்ட பலன்களைக் குறைக்கவும்.




(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

உங்களுக்கு வீரியஸ்தானதானமான 3 ஆம் இடத்தில் வீறு கொண்டு வரும் வியாழ பகவான் பல கேடுகளைச் செய்பவர்களை பக்கத்திற்கு பாய்ந்தோடிவரச் செய்வான் உடல் நலத்தில் சளி விடை கிருமித்தாக்கம், நரம்பு வருத்தம், எனச் சொல்லாமல், சொல்லி ஒருவிறைப்பதனைத் தந்திடுவான், உடன்பிறந்த தம்பியால் உள்ளதெல்லாம் செலவு செய்யச் செய்திடலாம். பக்கத்து வீட்டார் பல கதைகள் சோடித்து ஊரெல்லாம் செய்திகள் அனுப்பிடுவார்கள். நண்பர்களென்றவர்களுடனும். பந்துக்கள் எனச் சொல்பவர்களுடனும் அந்தரங்க விஷயங்களைஅளவறிந்துகதைக்க வேண்டும். குடும்பத்தில் சுப மங்கள காரியங்கள் நடக்க ஆசையுண்டு. பல முயற்சி செய்தும் பலன்கிட்ட வந்தும் எட்டாத கனியென ஏங்கி இருக்கக் குரு செய்திடுவான் தொழில் ஸ்தானத்தில் வேண்டாத தொல்லைகள் வந்து வேதனையும் சோதனையும் ஏற்படுமாம். எதைச் செய்தாலும் விடிவற்ற ஒரு நிலையால் நித்திரை வர மறுக்கும்.

ஆவணி 1998இல் வியாழன் நடுக்கூறு ஏறிடும் காலத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். வாழ்க்கையில் பல திருப்பங்களும் உந்தியோகஸ்தர்களுக்கு மாற்றங்கள், உயர்வுகளும் வந்துவிடும். கலக்கமதை விட்டுவிட்டு உங்கள் ஜனனக் குறிப்பை பக்கத்துச் சோதிடரை நாடி ஒரு பொழுது கேட்டு ஓர் ஆலோசனை பெற்றுவிட்டால் உங்கள் மனம் ஆறிவிடும். மறதியால் காரியங்களை மறந்து விடாமல் காரியமாற்ற முயலுங்கள்.




(உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் முதலாம் 2ஆம் பாதங்கள்)

தனஸ்தானமான 2இல் குரு பகவான் வருகின்றார்.

உங்களுக்கு ஏழரைச் சனியால் பல தொல்லைகள் இது வரை ஏற்பட்ட நிலை மாறவில்லை. மழை விட்டும் ஈரம் காயாத நிலையாக பல ஆண்டுகள் சென்றாலும் ஆறாத வேதனைகள் பல உண்டு. இருப்பினும் வாக்குத்தானமென்றும் – குடும்பஸ்தானமென்றும் இருக்கும் குரு 2இல் வருகின்றான். திடீரென தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் திசை மாறி வேலை செய்யும். பொருள் வரவு தானாக ஏறி வரும். இடமாற்றம், தாரசுகம், புத்திரர் சிறப்பு, கல்வி அல்லது தொழில் சிறப்பு மாற்றங்கள் அதிகாரச் சிறப்பு என்பன ஏற்படப் பலன்கள் உண்டு.

சனீஸ்வரன் வக்கிர காலமான 25–6–1998இல்இருந்து 29–9–1998 வரையும் தலைகீழான மாறுதல்கள் ஏற்படலாம். அதன் முன்பும் பின்பும் நன்மைகள் நடக்க இடம் உண்டு. குடும்பத்தில் நன்மைகள்ஏற்படும். பொருள் வரவும் சிறக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகளும், முன்னேற்றங்களும் கொடுக்கும். வாக்குச் சாதுரியத்தால் தொழில் செய்து வளம் பெறலாம். ஆசிரியத் தொழில், சட்டத் துறையினருக்கு பல மாற்றங்கள் ஏற்படும். சில காணி, பூமி வாங்கவோ, புதுப்பிக்கவோ, மாறவோ சந்தர்ப்பங்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். புத்திரருக்காக அதிக செலவுகள் செய்வார்கள்.




(அவிட்டம் 2, 4ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)

உங்கள் இராசிக்கு 6–1–1998இல் குரு வருகின்றார். உதயத்தில் குரு வருவதனால் உங்களுக்கு பிறருக்கு உதவிகள் செய்யும் பலன்கள் ஏற்படும். இது வரை பொருள் இழப்பு கஷ்டங்கள் நீங்கி நற்பலன்கள் அதிகரிக்கும். ஓடியாடித் திரிவதனால் அதிக நன்மைகளை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். ஏழரைச்சனி நடப்பதனால் பலவித பிரச்சினைகள் தடை தாமதப் பலன்கள் இருந்தாலும் வியாழ மாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். சுபமங்களப் பேச்சுக்களால் குடும்பத்திலுள்ள எதிர்ப்பாலார் அதிக நன்மைகள் அடைவார்கள். அரச உதவிகள் மேலிடும். வழக்கு கணக்குள்ளவர்களுக்கு பல மாறுதல்கள் ஏற்படும். காணி, பூமி சம்பந்தமான மாற்றங்கள் நடக்க இடம் உண்டு. தொழில் நிமித்தம், கல்வி நிமித்தம், போராட வேண்டி இருக்கும். நாளும் கோளும் என் செய்யும்? – ஈசன் திருவடியைப் பற்றினால் பக்தியால் தீராதவினைகள் தீரும். எனவே தெய்வ வழிபாடு பல சிறப்புக்களையும், கஷ்டங்களை நீக்கியும் நற்பலன்களைத் தரும்.




(புரட்டாதி 4, உத்திரட்டாதி–ரேவதி)

உங்களுக்கு விரயஸ்தானமான 12 இல் வியாழன் வருகின்றார். உதயத்தில் ஏழரைச்சனியாகவும்25–6–1998 இல் மேடத்திற்கு மாறி பின்பு 29 – 9 – 1998இல் வக்கிரம் செய்து — மீனத்திற்கும் திரும்பவும் வருவார். இக்காலங்களில் மிக அவதானமாக இருக்கவும். தெய்வ பக்தி முக்கியமாகும், நாட்டின் அரசியல் அழிவுகள் விதிவழியே செல்ல அகப்பட்டு உயிர், பொருள், அழிவுகளைச் சந்திக்க இடம் உண்டு. உங்கள் ஜனனக் குறிப்புப் பலன்களின்படி பலன்கள் கூடிக் குறையலாம். சாத்திரத்தை நம்பாதவர்களையும், இக்காலம் நம்பி சாத்திரிமாரிடமும், சாமியார்களிடமும், ஆலயங்களுக்கும் ஓடிஓடித்திரியச் செய்யும் பலன் நடக்கும். நடப்பது நடக்கும் என்று பொதுவாகச் சொல்லுவதை விட்டு விட்டு பக்கத்திலிருக்கும் ஜோதிடர்களை அணுகி ஆலோசனை கேட்பதனால் பல நன்மைகளை அடைவீர்கள்.

தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப்போட்டி, வீட்டில் பேச்சு கேட்பீர்கள். எதிர்பாலார் வீண்பழி சுமத்துவர். சில தவறுகளைச் செய்துவிட்டு கலங்கியபடி இருப்பீர்கள். சுபமங்களப் பேச்சுக்கள், குடும்பத்தில் புத்திரருக்காகவும், சகோதரங்களுக்காகவும் ஓடியாடித் திரிவீர்கள். தாங்க முடியாத துன்பங்கள் தேடிவரும். உலகத்தினரின் ஏச்சுக்கு ஆளாக நேரிடும்.

எதிர்த்து நின்று போராடத் துணிவு வேண்டும். ஆயுதங்களாலும், அறிவுகுறைந்தவர்களாலும்–கெட்டசெயல் செய்பவர்கள், ஏமாற்றுக்காரர்களாலும், ஆக்கிரமிக்கப்படும் நிலை. பொருள் இழப்பு, அவமானங்கள் ஏற்படும் சூழ்நிலைகள் வரும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளாலும், கல்விகற்பவர்களுக்கும் அதிக யோசனைகளைக் கொடுக்கும். விதி வழியே செல்லும் காலச் சக்கர ஓட்டம், உங்களை தாங்கி நிற்கும். தெய்வ பக்தி ஒன்றால் மட்டுமே தாக்கத்தைக் குறைக்கலாம்; உடல் உபாதைகளைத் தணிக்கலாம்.

# மார்கழியில் ரங்கோலி

ஆயகலைகள் அறுபத்து நான்கில் கோலம் போடுதல் ஒன்றாகும்.

அதில் ரங்கோலி என்பதும் ஒரு வகை.

வர்ணங்கள் சேர்த்து, மாவினால் தூவி அல்லது கரைத்து கமலவடிவில் ஆறு, கொடி, — பூக்கள் இப்படி இயற்கை அமைப்பினை வரைந்து கோலமாகப் போடுவதே ரங்கோலியாகும். (ரங் — நிறம்; வல்லி — கொடி. அதாவது வண்ணக்கொடி என்று அர்த்தமாகும்.) இக்கோலம் திருமாலுக்கு மிகவும் பிடித்தமானது என்று சொல்லப்படுகிறது.

புரந்தரதாஸர் கூட ரங்கோலிக் கலையை ரசித்து தமது பாடலில் பாடியிருக்கின்றார். விட்டலனான பெருமாள் மீது தீராதபக்தி கொண்டவர் அவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல அரசர்கள் கூட இக்கோலத்தினை வடித்துப் பேரானந்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அரசர் குல மன்னர்கள் தாமே கோலம் போடுவதை பூஜை முறைகளில் ஒன்றாகக் கருதி வந்திருக்கின்றனர்.

கர்நாடக மாநிலத்தில் ஜகன்நாததாஸர் என்ற மகான் ஒருவர் தினமும் கோலங்கள் வடித்து பகவானை ஆராதித்ததாகக் கூறப்படுகின்றது. அவர் கோலத்தினை பக்தி பூர்வமாக போட்டு வரும் போது பெருமாளின் அருள்கூடக் கிடைத்திருக்கிறது. ஒரு முறை அவர் சுகவீனமுற்று இருந்தமையால் பூசைக்கு ரங்கோலி, கோலம் போட முடியவில்லையே என்ற வேதனையுடன் 'ரங்காவலி! ரங்காவலி!', என வாய் புசத்தி அழுதாராம். அப்பொழுது ரங்கநாதர் முதல் நாள் போட்ட கோலத்திலேயே பிரதட்சணமாகி அருள் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்றது. அதன் பின்னர் அம்மகானை 'ரங்கோலிதாஸர், என்றே அழைத்தனராம். அவர் அடுக்கடுக்காக சுரங்கள் பாடுவது போல் தம்மை மறந்த நிலையில் கோலத்தினை அடுக்கடுக்காக கோடுகள் மூலம் போடுவார்.

இந்த ரங்கோலியை ரங்கநாதருக்குகந்த மாதமான மார்கழியில் போடுவது விசேஷமாகும்.

பெண்கள் தங்கள் எதிர் கால வாழ்விற்காக பாவை நோன்பு நோற்று ஆண்டாள் திருப்பாவை பாடுவார்கள். அவர்கள் சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, தம்மைச் சுத்தப்படுத்தி இக்கோலத்தினை வரைந்து, தங்கள் நோன்பை நோற்பது சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

பொதுவாக வர்ணம் சேர்த்து வண்ணக் கோலங்கள், சடங்குகள் கொண்டாட்டங்களுக்கு மட்டுமே போடுவது வழக்கம். ஆயினும் மங்கலமாக வீற்றிருக்கும் திருமாலுக்கு உகந்தமாதமான மார்கழி முழுவதுமே வண்ணக் கோலங்கள் போடுவது சிறப்பானதாகும்.

# ஒரு பாடசாலை வெற்றி பெற....

ஓர் பாடசாலை வெற்றி பெற..என்ற தலைப்பில் பெற்றோர் என்ற ரீதியிலே அளவெட்டியிலிருந்து கே.எஸ்.சிவஞானராஜா என்ற அன்பர் வரைந்த கருத்துக்கள் இவை.

பெற்றோர் என்ற ரீதியில் சில கருத்துக்களை முன்வைக்கின்றேன். முன்வைகும் ஒவ்வொரு அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்படுமாயின், எடுத்துக் கொள்ளப்பட்ட கற்றல், கற்பித்தல் இலக்குகள் பூரணமடையும் என்பதில் மகிழ்வினை எய்த முடியும்.

(அ) அதிபரானவர் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நன்கு தேர்ச்சியுள்ளவராக இருத்தல் மிக அவசியம். இப்பதவிக்கு வரவிரும்பும் ஒவ்வொரு ஆசிரியரும் இதற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். இந்நிலை பாடசாலைச் சமூகத்திற்கே ஒரு வரப்பிரசாதமாக அமையுமெனலாம்.

(ஆ) ஒவ்வொரு மாணவரையும், கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியர்களையும் கல்விச் செயற்பாட்டில் ஆர்வப்படுத்தக் கூடிய மேலாண்மையை, அதிபர் ஒருவர் தினமும் அவதானித்தல் அவரது தெய்வீகக் கடமையாகும். இந்நிலையினை அடைவதற்கு எட்டுப்பாட வேளைகளும் கற்றல் — கற்பித்தலினால் வலுப்பெற்றிருக்க வேண்டும். ஒரு பாடவேளையிலோ, அல்லது ஆசிரியர் வராத வேளையிலோ மாணவர்கள் கவனிப்பாரற்று விடப்படுவார்களேயானால் பாடசாலை வீழ்ச்சியடைவதற்குரிய பாதை துப்பரவு செய்வது போன்ற நிலையையடையும். ஆகவே ஒரு புதிய ஆண்டின் முதல் நாளன்றே, நேரசூசி, இடாப்பு, பாடத்திட்டம், பாடக்குறிப்புகள், வகுப்பறைகள் சுத்தம், மலசல கூடம், தண்ணீர் வசதிகள், கரும்பலகைகள், வெண்கட்டிகள், வழிபாடு, பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், ஆசிரியர் தங்குமிடம்......இவைபோன்ற இன்னோரன்ன விடயங்கள் யாவுமே தயார் நிலையில் இருப்பதற்கு அதிபரின் ஆளுமை வீச்சானது முக்கியமானது. ஒருசில பாடசாலைகளில் தும்புத்தடிகள் தூங்கிக் கொள்கின்றன. (உரியவர்கள் ஆண்டவனிடம் தப்பவே முடியாது)

(இ) எட்டுப் பாட வேளைகளுக்கு எந்தவொரு பங்கமும் ஏற்படாதவண்ணம், பாடசாலைக் கலண்டரும், இணைப்பாடவிதமான செயற்பாடுகளும், ஆசிரியர் கூட்டங்களும், அதிபர் கூட்டங்களும், போட்டிகளும், விழாக்களும், சேவைக்காலப் பயிற்சிகளும் அமைய வேண்டும். அடிக்கடி கூட்டங்களும், விழாக்களும், விருந்துகளும் பாட நேரத்தில் நடைபெற அனுமதிப்பதான நடைமுறைக்கு நியாயம் கற்பிக்க முனைவது – 'ரியூசன்' எனும் சீரிய வார்த்தைக்கு மேலும் பாதுகாப்பு அளிப்பதாக அமையும். ஆகவே பொருத்தமாகத் தீர்மானம் எடுப்பது அதிபருக்குரிய 'மாணவ மாண்பினை' மையமாகக் கொண்டிருக்குமேயொழிய ஆரவாரத் தன்மையைக் கொண்டிருக்க முடியாது.

(ஈ) முக்கியமாக, ஆசிரியர்களையும், ஊழியர்களையும், பெற்றோர்களையும் புனிதமாகச் சேவையாற்றக் கூடிய கல்விச் சூழலுக்கு, அதிபரின் சுயதீர்மானங்கள் தான் வரவேற்பளிக்கும்.

(உ) மாணவர்கள் பொதுவாகத் தமிழ்ப்பாடத்தினைத் தாமாகவே கற்கக்கூடிய திறமையிருந்தபோதும் விடைகள் எழுதும் போது தாராளமாகப் பிழைகள் (எழுத்துப் பிழைகள்) மலிய எழுதுகிறார்கள் என்ற கவலை தரும் செய்தியினை அறிய முடிகின்றது.

உதாரணம்:–

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**[03 - 01 - 1998 முதல் 09 - 01 - 1998 வரை]**

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே சந் | இராசிச் சக்கரம் | | |
| செ வி வெ | | | ரா |
| சூ* | புத | | |

மாற்றம்:

தனுசு இராசியில் புதனும் 6 – 1 – 1998 இல் கும்ப இராசியில் வியாழனும் மாறும்,

அரசியலில் சலசலப்பும், தேர்தலால் படபடப்பும் திசை மாற்றமும், மக்கள் மனமாற்றமும் ஏற்படும். களவுகளும், பிடிபாடுகளும் மாறி மாறி நடக்கும். இந்தியாவில் அரசியலால் மக்களுக்கு மனக்குழப்பமும், தேர்தலில் எதிர்பாராத திசை திருப்பங்களும் நிகழும். உலகில் கிழக்கு நாடுகளில் ஏற்படும் அழிவுகள் தணியும். மேற்கு நாடுகளின் கவனம் மத்தியகிழக்கு நாடுகளில் இருக்கும். புதிய திட்டங்கள், அழுத்தங்களை ஐ. நா. செயற்படுத்த முனையும்.

மேடம்: சுயமுயற்சியும், அதிக உழைப்பும் கொண்ட நீங்கள் ஏன் அவசரப்படுகின்றீர்கள்? உங்களை நோக்கி எதிர்காலம் ஒளிமயமாக வர உள்ளது. ஆனால் உங்களில் சிலர் அவசரகோபம், மனதில் பட்டதைச் சட்டென்று கொட்டிவிடும் பலவீனம் போன்றவற்றால் ''உற்ற நேரத்தில் கற்றதை மறப்பாய்'' என கர்ணன் பெற்ற சாபம் போல போய்விடக் கூடாது அல்லவா? ஆசையும், பாசமும் பிறரின் முகஸ்துதியும்உங்களை மந்தநிலைப் படுத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய உத்வேகம் ஏற்படும். புதிய அணுகுமுறைத் திட்டங்களால் நன்மைகள் கிடைக்கும். காலச் சக்கரத்தின் காற்று உங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளை கருவாக்கி உருவாக்கும். 6-1-1998இல் இலாபஸ்தானத்தில் வியாழபகவான் மாறுவதனால் காசு,பொருள் தேடி ஓடிவரும். பலர் உங்களின் காசுக் கலகலப்பை அறிந்து தலையாட்டுவார்கள். சொந்தக்காரர்கள், உடன்பிறந்த சகோதரர்கள் உங்களைத் தேடிவருவர். எதற்காக? காலமறிந்து செயற்படுங்கள். நீங்கள் நொந்த நேரத்தில் கைகொடுத்தவர்களை மறக்கக் கூடாது. ஆயினும் எதிர்ப்பாலாரின் ஆலோசனைகளை குடும்பத்தில் கருத்தில்கொள்ளல் வேண்டும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன் பிற்பகல், வெள்ளி.

இடபம்: ஓடி ஓடி, தேடித் தேடி, உழைக்கும் ஆற்றல் கொண்டவர்கள் இடபராசிக்காரர்கள். ஒரு கணப்பொழுதில் உருட்டி, அதட்டி மற்றவர்களை பயமுறுத்திவிடும் சுபாவத்தால் குடும்பத்தில் எதிர்ப்பாலாரின் புறுபுறுப்புக்கு அடிக்கடி ஆளாகுவீர்கள். பத்தில் வியாழன் வருவதனால் உங்கள் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். தொழில், குடியிருக்கும் வீடு, ஓடித்திரியும் வாகனம், பொருள் நிலைகளால் மாற்றங்களுக்குமுன்னேற்பாடான நிகழ்வுகள் ஏற்பட இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் காரணமின்றிக் கடும் சினப்பேற்படலாம். மேலதிகாரிகளின் அனுசரணைகள் இடைக்கிடையே இருக்கும். பொருள்செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் புத்திரருக்காகவோ அல்லது சகோதரங்களுக்காகவோ அதிக செலவுகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

மிதுனம்: உங்கள் குடும்பத்தில் உள்ள எதிர்ப்பாலாருடன் அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். ஊருக்கெல்லாம் ராஜாவான நீங்கள் வீட்டில் கூஜாவுக்குள் இருக்கும் குளிர்தண்ணீர் போல இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் தொட்டதெல்லாம் துலங்கும். அதிகாரம் செலுத்துவீர்கள். அரச உயர்பீடத்தவர்களின் அனுசரணைகள் இருக்கும். நீங்கள் குடும்பத்தவர்களுக்கும், உலகத்தவர்களுக்கும் ஓடி ஓடி அலுவல்கள் பார்ப்பதில் கெட்டிக்காரர்கள். பொருள் செலவுகள் தண்ணீர்போல ஓடும். எந்த விடயங்களையும் ஒளிவு மறைவின்றி பிறருக்கு உரைத்துவிடுவதனால் உங்கள் காரியங்களில் அடிக்கடி தடைகள் ஏற்பட்டபடி இருக்கும். புண்ணிய ஸ்தானம், பொருள் ஸ்தானமான ஒன்பதாம் இடத்தில் வியாழன் வருவதனால் அடிக்கடி பொருள்கள் ஏதோ ஒரு வழியில் வந்துகொண்டு இருக்கும்; காலமறிந்து கருத்துடன் இருந்து செயற்பட்டால் வெற்றிகள் அடைவீர்கள். பிரயாணங்கள் நன்மைகள் தரும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி

## சோதிட சஞ்சரி

கடகம்: நீங்கள் எந்த விஷயங்களையும் இருகருத்துக்கள் படச் சிந்திப்பீர்கள். பொருள் நிலையா? தெய்வீக நிலையா? இரண்டும் கலந்த வாழ்வு கொண்டவர்கள் நீங்கள். பலருக்கும் ஆலோசனை கூறும் உங்களுக்கு யார் ஆலோசனை சொல்வார்கள்? பலவித எதிர்ப்பு, துன்பம், போட்டிகளுக்கு மத்தியில் அனுபவம் பெற்று வளர்ந்துவரும் உங்களுக்கு உதவுபவர்கள் யார்? இதைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். திருமணம், வெளிநாடு எனக் கலகலப்பும் மாற்றங்களால் தடுமாற்றங்களும், அட்டமத்து வியாழன் எட்டிநின்று தந்திடுவான். தொழில் ஸ்தானத்தில் கடும் உழைப்பு, கரகரப்பு, புறுபுறுப்பு கலந்திருக்கும். காலமறிந்து செயற்பட்டு காரியமாற்றுங்கள். அல்லது உச்சத்திலிருந்து பள்ளத்திற்கு பாய்ந்து ஓடி விடும் ஆற்று வெள்ளம்போல முயற்சிகள் பலனற்றுப் போகும். பிரயாணத்தை தள்ளிப் போடுங்கள். நண்பர்களை நம்பி நடவாதீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, புதன் பிற்பகல்.

சிங்கம்: எந்த ஒரு விஷயத்திலும் நிதானத்துடன் அதிக சிந்தனையுடன் சமநீதியுடன் செயற்படும் நீங்கள் எதிலும் கலங்கக் கூடாது. வியாழ பகவானின் கடைக்கண் பார்வையால், அட்டமத்துச் சனியின் சிவந்த பார்வை சற்றுத் தணியும். காலசக்கரத்தில் பகலும் இருட்டும் சர்வசாதாரணம். விதிவசப்பட்ட பலன்களை தெய்வ வழிபாட்டால் திசைதிருப்பிவிட இடம் உண்டு. 6-1-1998 இலிருந்து முன்னர் நீங்கள் திட்டமிட்ட சில காரியங்களில் அனுகூலமான பலாபலன்கள் ஏற்பட இடம் உண்டு. உங்கள் தொழிலில் அல்லது கல்வியில் பெரியவர்கள், நண்பர்களால் மாற்றங்கள் ஏற்படும். தூரதேசப் பிரயாணங்களிலும் பொருள் விஷயங்களிலும் கண்ணாக இருந்து, தவிர்க்க வேண்டிய இடத்தில் தவிர்த்து காரியங்களைச் செயற்படுத்த வேண்டிய இடத்தில் செயற்படுத்திவாருங்கள். அரசியல், பொதுத்தொண்டுகள் போன்றவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். தெய்வவழிபாடு முக்கியம். கண்ணில் வருவது புருவத்தில் வந்தது போல சில கஷ்ட நஷ்டங்களின் தாக்கம் தெய்வத்தால் குறையும். எனவே குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, புதன் பிற்பகல்.

கன்னி: உலகம் உங்களை உயர்வாக நினைத்தாலும் சரி, குறைவாக நினைத்தாலும்சரி உங்கள் காரியங்களை நீங்கள்தானே செய்ய வேண்டும்? சிரித்துப்பேசி, பழித்துத்தூற்றும் ஒரு சாராரால் வேதனைதான். ஆயினும் வேதனை — சோதனைக்கு மத்தியில் நின்றுதான் எந்தக் காரியங்களையும் செயற்படுத்த வேண்டும். அடிக்கடி கோபிக்காதீர்கள். ஆனால் அதே சமயம் அயலவர்களின் சந்தேகப் பார்வைகளை அலட்சியம் செய்யாதீர்கள். கொஞ்சம் நிதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள் உதவினாலும் உபத்திரவங்களும்தரமாட்டார்கள் எனச் சொல்ல முடியாது. எதிர்ப்பாலாரின்ஆலோசனைகள் உங்களுக்கும், குடும்பத்தினருக்கும் நன்மைகளைத் தரும். 6ஆம் திகதி ஆறில் வியாழ பகவான் வருவதனால் அடிக்கடி செலவுகளும், வைத்தியசாலைகளுக்குப் போய்வரும் சந்தர்ப்பங்களும் ஏற்படச் செய்யும். எப்படியாவது பணமும் அடிக்கடி வரும். சமாளித்துக் கொள்ளுங்கள்.

★அதிர்ஷ்டநாள்:வெள்ளி.

## மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

துலாம்: உங்களுக்கு அன்னியரால் மாற்றங்கள், நன்மைகள் ஏற்பட இடம் உண்டு. இவ்வுலக வாழ்வின் சுழல் சக்கரத்தில் நன்மைகளுக்காக, முன்னேற்றத்திற்காக அடிக்கடி எதிர்நீச்சல் அடித்தபடி இருப்பீர்கள். உங்களைச் சுற்றி இனஜனங்களும், எதிர்ப்பாலாரும், மக்களும் அடிக்கடி வட்டமிட்டபடி இருப்பார்கள். ஓடி ஓடி உழைத்து நீங்களும் அனுபவித்து பிறரும் அனுபவிக்கக் கொடுத்துக் கொண்டு இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கச் செய்யும். அதற்காக நாம் ஒதுங்கி விடமுடியாது அல்லவா? எதையும் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற முயலுங்கள். உங்களால் சாதிக்க முடியும். வியாபாரிகளுக்கு பல நன்மைகள் ஏற்படும். அடிக்கடி பிரயாணங்கள் செய்யவேண்டாம். அல்லது இடம் மாற வேண்டாம். இடம் மாறுவதனால் பல இழப்புக்களைச் சந்திக்க நேரிடலாம்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# துளசி மகாத்மியம்

இந்துக்கள் வீடுகளில் துளசி மாடம் என கட்டி நடுவில் துளசிச் செடியை வைத்து தெய்வத்தை பயபக்தியுடன் பூசை செய்து வருவார்கள். அவ்வளவுபுனிதமான மூலிகை துளசி. இது பல நோய்களுக்கும் குணமளிக்க வல்ல சிறந்த மூலிகை.

துளசி வகைகளில் துளசி, கருந்துளசி, செந்துளசி ஆகியவை ஒரே குணமுள்ளவை. இது எல்லா இடங்களிலும் பயிராகிறது. செடியினத்தைச் சேர்ந்த இத்துளசியின் இலைகளை மென்று தின்றால் கற்பூர மணம், காரமாக இருக்கும்.

இம்மூலிகை கபம் நீங்கவும். கோழையை வெளியாக்கி இருமலைக் குணப்படுத்தவும் சித்த, ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகிக்கின்றார்கள். தினமும். காலை வெறும் வயிற்றில் துளசிச் சாற்றைப் பிழிந்து எடுத்துப் பருகி வந்தால் இரத்தசுத்தி, தொண்டைவலி, மார்பு சளி போன்றவை குணமாகும்.

மூளைக்குப் பலம் அளிப்பதும் தெளிவளிக்கும் குணமும் உண்டு.

மாதவிலக்கு, சூதக வியாதிகள் மற்றும் கர்ப்பாசய வியாகள் நீங்கி மாதர்களுக்குஉடல் உறுதிபெறவும் துளசிச்சாறை வெறும் வயிற்றில் பருகிவரலாம். நல்ல பலன் கிட்டும்.

சகல வாயுரோகங்களுக்கும் தேனில் கலந்து கொடுக்க நோய் தீரும். மாலைக் கண் நோய்க்கும் நல்ல பலன் கிடைக்கும். கண் பார்வை நன்றாகத் தெரியும்.

சமஸ்கிருதத்தில் விஷ்ணு பிரியா, துளசி, திவ்யா, பாரதி, கிருஷ்ண மூல் (மூலிகை) என்று பெயர்வழங்கப்பட்டுள்ளது.

துளசி வேரைப் பொடித்து பலவீன மானவர்களுக்கு மாலை நேரம் நெய்யில் கலந்து கொடுத்து வந்தால் மின்சாரம் போல் இரத்தத்தில் கலந்து புத்துணர்ச்சியளிக்கும்,

★

# விண்ணில் இருந்து…..

(V ஆம் பக்கத் தொடர்ச்சி) காப்பு அங்கிகளை வழங்கிக் கொண்டிருந்தான். உதவிக்கு விமானப் பணியாள்கள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

இடது தாங்கி வெறுமை ஆனதும் ஒரு உறுமலுடன் அடுத்த எஞ்சினும் ஓய்ந்து கொண்டது. சிறகடிக்காமல் காற்றில் சறுக்கும் பறவை போல அசுர வேகத்தில் சறுக்கும் விமானத்தினுள் காற்று உரசும் சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டு இருந்தது.

விமானத்தின் ராடர், கணனிகள், மேலும் பல கருவிகள் இயங்கவில்லை; ஓய்வு எடுத்துக் கொண்டன. சுமார் 20 ஆயிரம் அடி உயரத்தில் கரையில் இருந்து 20 மைல் தொலைவில் கிளைடர் போல இயந்திரம் இன்றிப் பறக்கும் பாரிய இராட்சதப் பறவையைக் கட்டுப்படுத்த யோனாஸும் விமானி அறைக்குள் புகுந்து கொண்டான். வேகக் கட்டுப்பாட்டுக்கானதும் திசை திருப்பலுக்கானதுமான கருவிகள் சரிவர இயங்க மறுத்தன.

விமானத்தளம் கண்ணில் படவில்லை. கரைமட்டும் தெரிந்தது. முடிவு நெருங்குவதைத் தெரிந்து கொண்ட கடத்தல்காரர்கள் இனி என்னவாயினும் செய்து கொள் என விமானியை விட்டுச் சற்று விலகினர்.

பிறிதோர் விமானத்தில் இருந்து எரிபொருளையா பெற முடியும் இனி? மணற் கடற்கரையோரம் கடற்கரை உல்லாச ஹோட்டல் ஒன்று தெளிவாகத் தெரிந்தது. ஹோட்டலின் உல்லாசப் படகுகள் கடலில் மிதந்தன. இதுதான் சரியான இடம்!

கடலில் இருந்து 150 அடி மட்டும் உயரத்தில் கூட விமானத்தின் வேகம் மணிக்கு 250 மைலாகவே இருந்தது பயங்கரமானது.

விமானம் ஒன்று லாவகமாக கடலுக்குள் தரையிறங்கும் — மன்னிக்கவும் — கடலிறங்கும் காட்சி வாழ்க்கையில் எத்தனை பேருக்கு காணக் கிடைக்கும்? இதைக் கரையில் நின்ற தென்னாபிரிக்க உல்லாசப் பயணி ஒருவர் தனது வீடியோ கமிராவுக்குள் சிறைப்படுத்தி விட்டாரே!

விமானம் தண்ணீரைத் தொட்டதும் சீறி எழுந்தன தண்ணீரின் விசிறல்கள். அதிவேகப் படகிலும் விட பலமடங்கு வேகத்துடன் தண்ணீரைக் கிழித்த விமானம் தாங்குமா இந்தத் தாக்கத்தை?

தரையை நோக்கித் தண்ணீரில் விரையும் விமானத்தை சற்றுச் சரித்து கரையோடு ஓடவைக்க முயன்றான் விமானி. திரும்புவதற்கு என்று சரியும் போது, இடப்புறச்சிறகு தண்ணீரில் தாளாமலா போகும்? அது உடைந்து, எஞ்சினுடன் கடலில் அமிழ்ந்து போகவும், சமநிலைதவறிய விமானம் சுழன்ற வேகம் எவருக்குப் புரியும்?

அதனைத் தொடர்ந்து நடந்தன எல்லாம் அங்கிருந்தவர்கள் அறிவார்களா? மின்னி முழிப்பதற்குள் எல்லாம்நடந்து முடிந்து விட்டது.

விமானம் 3 துண்டுகளாக உடைந்து போனது. விமானி அறையும் முகப்பும் குப்புறக் கடலில் மூழ்கின. காயத்துடன் நீந்தி மேற்பரப்புக்கு வந்தனர் விமானிகள்.

பிராங் ஹடுல் என்பவரும் மனைவியும் சோடியாக ஆசனத்தில் அமர்ந்தபடி இருக்க ஆசனமே தெப்பமாக நீரில் மிதந்த அதிசயம்தன்னை என்னென்பது?

இந்தியா சென்று தன் இரு குழந்தைகளைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ராணி நங்கனியின் முழங்கை ஒரு தோல் துண்டில் தொங்கிக் கொண்டிருக்க அவள் உயிர்காப்பு உடையில் மிதந்து கொண்டிருந்தாள்.

விமானத்தின் நடுப்பகுதி தலைகீழாக மிதந்து பின் அமிழ்ந்து விட்டது. பட்டியைப் பிணைத்து இருந்தவர்கள் ஆசனம் பிடுங்கப்பட்டு கடலிய் நீந்தியதும் உண்டு. விடுவிக்க வழியின்றி விமானத்தோடு அமுந்தியதும் உண்டு.

உடைவு ஏற்பட்ட இடங்களில் இருந்தவர்கள் கடலில் விழுந்ததும் உண்டு. காயப்பட்டதும் உண்டு. இதுதான் விதி! அவரவர் தலையெழுத்து.

விமானத்தைக் கடத்த முயன்ற மூவரும் மாண்டு போனார்கள். அவர்களும் ஐந்து விமானப் பணி ஆட்களுமாக மொத்தம் 125 பேர் இந்த விபரீதத்தில் மாண்டு போய் விட்டார்கள். எஞ்சிய 50 பேரில் 46 பயணிகளும் நான்கு விமானிப்பணி ஆள்களும் அதிஷ்டசாலிகள்தான்.

இறுதிவரை துணிவோடும் சாதுரியத்தோடும் செயற்பட்ட விமானமோட்டிகள் இருவரும் பாராட்டப்பட்டார்கள். அதிக உதவி பெறக் கூடிய கடலில் இவர்கள் விமானத்தை இறக்கியதும் 50 பேரின் அதிர்ஷ்டம்தான்.

மீண்டும் லியோலும் யோனாஸும் கம்பீரமாக ஏறி, விமான ஓட்டியின் ஆசனங்களை அலங்கரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தபின்னரும் கண்தானம்செய்து மற்றவர் வாழ்வுக்கு ஒளி கொடுங்கள்

மூளை, இதயம், சுவாசப் பைகள், ஈரல், சிறுநீரகம் போன்றவை மனித உடலின் முக்கிய உறுப்புக்கள் ஆகும். மதுப் பழக்கம், புகைப் பழக்கம், நோய், விபத்துப் போன்ற காரணிகளால் இந்த உறுப்புகளுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமானவை பாதிக்கப்படலாம். உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் மூளை, தான் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஒட்சிசனையும் குளுக்கோசையும் குருதி ஓட்டத்தின் மூலமாகவே பெற்றுக் கொள்ளும். மேற்குறிப்பிட்ட முக்கிய உறுப்புக்கள் எவற்றினதும் சேதம் காரணமாகக் குருதியோட்டம் தடைப்பட்டால் அல்லது விபத்துக்களால் மூளை சேதமடைந்தால், மூளை இறந்துவிடும். இவ்வாறு மூளை இறப்பதே மரணம் ஆகும். இதயத் துடிப்பு நின்று சில நிமிடங்களின் பின்னரே—மூளைக்கான குருதி விநியோகம் தடைப்பட்டதால் — மூளை இறக்கும். ஆனால் இதயத்தின் இயக்கம் நின்ற உடனேயே மரணம் ஏற்பட்டுவிட்டதாக உறவினர்கள் கூறிவிடுவார்கள்.

**கண் தானம் என்றால் என்ன?**

ஒருவர் உயிர் வாழும் போது, தனது மரணத்தின் பின் கண்தானம் செய்ய விருப்புத் தெரிவித்திருந்ததனால் அல்லது —

இறந்த ஒருவரின் உறவினர்கள் இறந்தவரின் கண்களைத் தானம் செய்ய விரும்பியதனால்—

கண்களைத் தானமாக ஏற்றுக்கொள்ளுமாறு சடலத்தைக் கண்தானத்தை ஏற்கும் வசதிகொண்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துக் கண்களை அகற்றுவித்தல் கண்தானம் எனப்படும்.

மூளையும் ஏனைய இழையங்களும் ஒரே நேரத்தில் இறப்பதில்லை. மூளை இறந்தபின் ஒவ்வொரு இழையமும் இறப்பதற்கு வெவ்வேறு நேரம் எடுக்கும்.

சடலம் ஒன்றில், தொழிற்படத்தக்க நிலையில் உயிருடன் இருக்கும் இழையங்கள் டாக்டர்களால் முறைப்படி பிரித்தெடுக்கப்பட்டுக் குறித்த இழையங்கள் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டால் அந்த இழையங்கள் புதியவரின் உடல்களில் உயிர் வாழ்ந்து தமக்குரிய தொழிலைச் செய்து நோயாளிகளைச் சுகமடைய வைக்கும்.

உலகின் அபிவிருத்தியடைந்த நாட்டு மக்கள் பலர், இழையங்களின் தானம் புண்ணிய கருமமென உணர்ந்துள்ளனர். இதனால், நோயாளிகளுக்குப் பொருத்தி நிவாரணம் வழங்கத்தக்க இழையங்களைச் சடலங்களுடன் எரித்தும், புதைத்தும் வீணாக்காது தானம் செய்கிறார்கள். கழுத்துக்குக் கீழுள்ள இழையங்கள் அனைத்தும் தானம் செய்யப்பட்ட நிலையிலும், அகற்றப்பட்ட உறுப்புக்களுக்குப் பதிலாகப் போலி உறுப்புகள்வைத்து, 'லோங்ஸ்', 'சேட்', 'கோற்' எல்லாம் அணிந்து போலிக் கால்களும் கைகளும் தெரியாதவகையில் காலுறை, கையுறைகளும் அணிந்து, சவப்பெட்டியில் சடலங்களை மரணச்சடங்குகளுக்கு வருபவர்களின் தரிசனத்துக்கு வைக்கிறார்கள். முகம் பாதிப்பு ஏதுமின்றி இருப்பதால் சடலம் நித்திரை செய்வதைப் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். பல்வேறு உறுப்புகளும் அகற்றப்படுவதால் சடலத்தைத் தகனம் செய்வதற்குக் குறைந்த நேரமே செலவிடப்படுவதுடன் தகனத்திற்கான செலவும் குறைகிறது.

இவ்வாறு தானம் செய்யப்படும் இழையங்களான— கண்கள்— விழி வெண்படலம் பாதிக்கப்பட்டோருக்கும், தோல்— எரிகாயம் ஏற்பட்டவர்களுக்கும், எலும்பு — விபத்துகளின் போது எலும்பு நொருங்கியவர்களுக்கும், சிறுநீரகம்— சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இதயம்—இதயம் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 'TISSUE TRANSPLANT' எனப்படும் இழைய மாற்றச் சிகிச்சை மூலம் பொருத்தப்படுகின்றன.

பல வருடங்களுக்கு முன்னர், கொழும்பிலும் கண்தான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வேளையில் பல்வேறு சமூக மறுமலர்ச்சி, சமூகநல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அமரர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் பல்வேறு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுக் கண்தானம் பற்றிய செய்தியை வடக்கு—கிழக்கு மாகாண மக்களுக்குத் தெரிவித்துக் கண்தானம் செய்யத் தயாராகுமாறு கூறினார் ''கண்தானம் ஒரு புண்ணிய கருமம்'', ''ஏழைகளும் செய்யத்தக்க தானம் கண்தானம்'', ''சடலங்களில் உயிருடனிருக்கும் உறுப்புக்களை வேறொருவரது உடலுக்கு மாற்றலாம்'' என்ற இவரது பிரசுரங்கள் குறிப்பிடத்தக்கன.

ச.ஆ.கோபாலமூர்த்தி

எனினும் இவரது முயற்சிகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. இன்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண்தானம் செய்யாமலே, உறவினர்கள் சடலங்களை எடுத்துச் செல்வதைக் காண்கின்றோம்.

பார்வையற்றோர் பார்வை பெற மக்கள் மத்தியில் கண்தானம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய தேவை உணரப்படுகிறது.

எனவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண்தானத்தை ஏற்று விளிவெண்படல மாற்றுச் (CORNIA TRANSPLANT) சிகிச்சையை மேற்கொள்ளும் கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இன்றையகண்தானநிலைமை பற்றித் தெரிவித்த கருத்துக்களை கவனத்தில் கொள்வது நல்லது.

★ யாழ்ப்பாண மக்கள் கண்தானம் செய்யத் தயங்குகிறார்கள்.

★ கண்தானம் செய்யும் விருப்பத்தைக் கடித மூலம் தெரிவித்துக் கண்தானத்தை நிறைவேற்ற முடியாது. வீடுகளில் இறப்பவர்களின் கண்களை அகற்றுவதற்கான வசதி யாழ்ப்பாணத்தில் இல்லை.

★ கண்தானம் செய்ய விரும்புபவர்கள் பின்வரும் முன் ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். மரணம் ஏற்படும் நிலை தோன்றியதும் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பிக்குமாறு உறவினர்களிடமும் தாம் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களிடமும் சொல்லி வைப்பதுடன்வைத்தியசாலையில் சேர்க்கும் போது கண்தானம் செய்ய விருப்பத்தைக் தெரிவிக்குமாறும் சொல்லிவைக்க வேண்டும்.

★ இவ்வாறு கண் தானத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட உடல்களிலிருந்து கண்கள் அகற்றப்பட்டு வைத்தியசாலைக் குளிரூட்டியில் பேணப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் பார்வையற்றோருக்குப் பொருத்தப்படும்.

★ மரணம் நிகழ்ந்து 6 மணித்தியாலங்களின் பின் கண்கள் பழுதடைந்துவிடும். அதற்கு முன்னர் கண்கள் அகற்றப்படவேண்டும்.

★ சடலங்களிலிருந்து எடுக்கப்படும் கண்கள் முழுமையாக மாற்றீடு செய்யப்படுவதில்லை. அவற்றிலுள்ள விழி வெண்படலம் மாத்திரம் பிரித்து எடுக்கப்பட்டுப் பார்வையற்றோருக்குப் பொருத்தப்படும்.

★ கண்கள் அகற்றப்பட்ட பின், கண்கள் இருந்த இடங்களில் கண்களின் பருமனான பஞ்சு உருண்டைகள் வைக்கப்பட்டுக் கண் இமைகள் முறைப்படி மூடப்பட்டு உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

★ இறந்தவர்களின் இரத்தம் உறைந்திருக்கும். இதனால் கண்களை அகற்றும் போதோ அதற்குப் பின்னரோ இரத்தம் வெளியேறாது.

★ அபரக் கிரியையின் போது குளிப்பாட்டுவதற்கு இடைஞ்சல்எதுவும்இருக்காது

(XII ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு பாடசாலை..

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்திக்கொண்டு ஓடினாள்
கத்தி கொண்டு ஓடினான்

மேலே தரப்பட்ட இரண்டு வசனங்களையும் 'க்' என்ற எழுத்தானது வெவ்வேறு கருத்துக்களைப் புலப்பட வைக்கிறது.

இதே போன்ற தமிழ் வசன அமைப்புகள் வகுப்பறைகளில் துல்லியமாக வெளிப்படத் தமிழ் ஆக்கங்கள் விருத்தி செய்யப்படவேண்டிய பொறுப்பினைத் தமிழ் ஆசிரியர்கள் அதீத அக்கறையுடன் சிரமேற்கொள்ள வேண்டும்; தமிழை வாழச் செய்ய வேண்டும்.

(ஊ) இனிவருங் காலம் மாணவர்களுடையதே. ஆங்கிலம்ஒருமாணவனைப் பூரண மனிதனுள்ளவனாக்கும். ஆதலினால் பாடசாலைகளின் வெற்றியும் உயர்ச்சியும் ஆங்கிலத்திலும் உள்ளது என்பதனை மறந்துவிடலாகாது.

(எ) மாணவர்களுடைய பயிற்சிகளைப் பார்வையிடத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ''கற்றல் — கற்பித்தல் — மாணவ — ஆசிரிய'' தேவைகள் வெற்றிக்காக ஏங்கிக் கொள்கின்றன. ஆகவே பார்வையிடல்— அவசியமானதே!

(ஏ) மேலும் பாடசாலை நல்லுறவுகளை மேம்படுத்தக் கூடிய ஆசிரிய, அபிவிருத்திச் சங்க, பழைய மாணவ, பெற்றோர், நலன்விரும்பிகளைக் கௌரவிக்கும் ஒன்று கூடலை வருடா வருடம் ஏற்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து செயற்படல்.

(ஐ) ஒவ்வொரு மாணவர்களுக்குமான சுயவிவரக் கோவையினைப் பராமரித்தலும், வளம்படுத்தலும் முக்கியமானதே.

(ஒ) தேவையற்ற இடமாற்றங்களையோ, தேவையான இடமாற்றங்களையோ மிகமிக அவதானமாகவும், மனச்சாட்சியுடனும் செயற்படுத்தல்.

மேற்போந்த விடயங்கள் ஒரு பாடசாலையின் சாதகத்தினை வளர்த்து நிற்கும்... நாடி நிற்கும். ★

## இந்தவார இராசி...

(X ஆம் பக்கத் தொடர்)

புத்திரர்களுக்காகவோ, சக குடும்ப உறுப்பினர்களுக்காகவோ பல நற்காரியங்களில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன் பிற்பகல், வெள்ளி.

**விருச்சிகம்:** நீங்கள் இந்த உலகில் எதிர்நீச்சல் அடித்து வாழத் தெரிந்தவர். எந்த விடயத்திலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதமாக மாறி செயற்படுத்தும் திறமை உடையவர்கள். உங்களைச் சிலருக்குப் பிடிக்காது. ஆனால் அவர்களைப் பற்றி நீங்களும் பெரிதாக எடுக்க மாட்டீர்கள். எடுத்தெறிந்தும், இரட்டைக் கருத்துப்படவும் பேசிச் செயற்படும் நீங்கள் எடுக்கும் காரியங்களில் வெற்றி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி மேலதிகாரிகளின் உதவிகளும், உபத்திரவங்களும் இருக்கும். எதிர்ப்பாலாருடன் மிகவும் அவதானமாகச் செயற்படவும், சகோதரங்கள் குறை கூறுவார்கள். சிலருக்கு திருமணப்பேச்சு அல்லது இடமாற்றங்கள் கொடுக்கும். குடும்பத்தவர்கள் அடிக்கடி கலகலப்பாக இருப்பார்கள். அயலவர்களின் பேச்சுக்களை நம்பாதீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

**தனுசு:** உங்களையே உருவாக்கும் ஆற்றல் மிக்கவர்கள் நீங்கள். எந்த விஷயத்தையும் துருவித் துருவிப் பார்க்கும் உங்களுக்கு பொறுமை இருக்காது. மனதில் உள்ளதை அப்படியே சொல்லிவிடுவதனால் பகைமை தேடி ஓடி வரும். தொழில்' ஸ்தானத்தில்ஏட்டிக்குப்போட்டிகள்வரலாம். இதுவரை கூடி இருந்தவர்கள் 6 – 1 – 1998க்குப் பின்பு அதாவது வியாழமாற்றத்திற்கு பின்பு கண்டும் காணாதவர் போலச் செல்வர். உடல் நிலையைக் கவனிக்கவும். அடிக்கடி பல வீனங்கள் கொடுக்கும். எல்லாம் பலனின் செயல் எனச் சிவனே என்று சும்மா இருங்கள். கஷ்டங்கள் வருவது இவ்வுலகை நாமறிந்து விலகி நடக்கவே யாகும். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும்; ஆனால் உங்களுக்கு அடிக்கடி மனக்குறையோ அல்லது சந்தேகமோ வந்தபடி இருக்கும். பிறரின் பொறாமையால் நீங்கள் மறைமுகமாக அடிக்கடி தாக்கப்படுவீர்கள். எனவே அவதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். அடிக்கடி உங்கள் குலதெய்வ ஆலயங்களை வட்டமிட்டபடி இருங்கள். ஆதனால் எத்தனையோ கஷ்டங்கள் உங்களை விட்டு விலகிப்போகும். எது விலகினாலும் உடன் பிறந்தோரில் நீங்கள் வைத்துள்ள கவனத்தால் உங்களிடம் உதவிகள் பெற சிலர் அடிக்கடி வந்து கொண்டு இருப்பார்கள். எதிலும் நிதானமாக நடந்து கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்; சனி, புதன்.

**மகரம்:** எல்லா இடங்களிலும் உங்களைக் காணலாம். எல்லா விஷயங்களிலும் தொட்டுத் தொட்டு அறிந்து வைத்திருந்து தக்க சமயத்தில் எல்லாம் தெரிந்தவர் போல உருட்டிப் பிரட்டி விடுவீர்கள். ஆனால் எல்லோரிடமும் அதிக நேரம் கதைத்து உங்கள் பலவீனங்களைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள். உங்கள் உதவிகளால் பலர் நன்மை அடைவர்; தொழில் ஸ்தானத்தில் உதவிகள் பெறுவார்கள். ஆனால் அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள் எனச் சொல்ல முடியாது. உங்களின் குடும்பத்திலுள்ள எதிர்ப்பாலாரின் ஆலோசனைகளால் நற்பலன்கள் வர இடம் உண்டு. நீங்கள் சற்று அனுசரித்து நடந்து கொள்ளல் வேண்டும். மாற்றங்கள் சகஜம். சளி, விறைப்பு, சலம் சம்பந்தமான சுகவீனங்களால் ஒரு சிலர் வருந்த இடம் உண்டு. வைத்தியத்தினால் ஓரளவு நன்மைகள் கொடுக்கும். மனச்சஞ்சலங்கள் வரும் பொழுது பிரயாணங்களைச் செய்யுங்கள். அதனால் ஆறுதல் அடைவீர்கள். பொருளால் வேதனை, உறவுகள் கெடும் என்பதை மறந்து விடக்கூடாது. கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்:வெள்ளி

**கும்பம்:** நிறைகுடம் தளம்பாது என்பார்கள். உங்களின் விடாமுயற்சியால் பல காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவீர்கள். இவ்வுலகின்செயற்பாடுகளையும், மனிதஓட்டத்தின் மனோபவங்களையும் நன்கு அறிந்து செயற்படும் திறன் படைத்தவர் நீங்கள். உங்கள் பேச்சுக்களில் மயங்கி உங்களுக்கு பலர் தலையாட்டியபடி இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் நல்லது—கெட்டது நடக்கும். உதயத்தில் 6–1–1998இல் பொன்னவனான வியாழபகவான் வருவதனால் பலமாற்றங்கள் நிகழும். புத்திரர்களுக்காகவும், உடன்பிறந்த சகோதரங்களுக்காகவும், இனஜனத்தினருக்காகவும்பல அலுவல்களுக்காக அலைந்து திரியநேரிடும். ஆயினும் காரியக்காரரான நீங்கள் பிறரை உங்கள் பேச்சால், செயலால் உதவிகளால் வசீகரித்து, அனுகூலங்களை அடைவீர்கள். கண்நோ, கைகால் விறைப்பு அடிக்கடி ஏற்படும். பிறர் உங்களின்மீது கொண்ட விசுவாசத்தைவைத்தே உங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவீர்கள். எனவே பக்குவமாக நடந்து நன்மை அடையுங்கள். ஏழரைச் சனியால் அடிக்கடி மந்த, குழப்ப நிலைகள் ஏற்பட்டபடி இருக்கும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்வதுடன் ஏழைகளுக்கு உதவிகள் செய்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

**மீனம்:** இவ்வுலக வாழ்வில் இது உங்களுக்குப் பல சோதனைகள் தந்து, அனுபவ ஞானம் அடையும் காலமாகும். எதையும்எதிர்கொண்டு வாருங்கள். பக்கத்திலிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டுவாருங்கள். உங்கள் போராட்டம், மனப்பாரம், குடும்பத்தின் அழுத்தங்கள் ஓரளவு குறையும். நாம் ஓடி ஓடித்தேடுவதனால் எதையும் கண்டுவிடமுடியாது. இறைவனின் அன்பும், அருளும் எம் மீது ஆட்கொண்டால் எல்லாவற்றையும் நிச்சயம் நாம் அடைந்தே தீருவோம். தொழில் ஸ்தானம் கல்விப்பீடம், வைத்திய சாலைகள் இவ்விடங்களில் இக்காலங்களில் உங்களை மாறி மாறிக் காணலாம். துன்பத்தின் மத்தியில்தான் இன்பம். இன்பத்தின் நடுவில் தான் துன்பம் வரும். எனவே நாம் நடுவிலிருந்து சமாளிக்க வேண்டும். விதிவசப்பட்ட பலன்களின் தாக்கம் குறைய தெய்வபக்தி நிச்சயம் வழி நடத்தும். சளி, தலையிடி, தடுமாற்றங்கள் கொடுக்கும். சிலருக்கு கைகால் தாக்கம் வரலாம். செலவுகளைக் கட்டுப்படுத்தவும். இனஜனங்கள், நண்பர்களால் அதிக நன்மையில்லை. எதிர்ப்பாலாரின் ஆலோசனைப்படி நடந்து நன்மை அடையுங்கள். 6–1–1998இல் வியாழன் பன்னிரண்டில் வருவதனால் சிலருக்குப் பிரயாணம், இடமாற்றங்கள் ஏற்படலாம். ஆயினும் அதிக நன்மையில்லாததால் அவதானமாகச் செயற்படவும்.

★ அதிர்ஷ்ட நாள்; சனி, திங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயாளும் ஊரில்....

என்னுடைய ஊரினிலே இப்படியும் ஓர்குடும்பம்
குண்டு குண்டாய்ப் பத்துக் குழப்படிப் பொடியளொடு
அன்னை ஒருத்தி அவள்ஓர் விதவைதான்
என்றாலும் செல்வ எடுப்புக்குக் குறைவில்லை.

புத்தகம் எடுக்காங்கள்; புதுச்சட்டை வோச்சென்று
நித்தம் சோக்குத்தான்; நினைத்துக் கொடுப்பதற்கு
அம்மா உள்ளா அவவும் வலுசெல்லம்
தம்பிகளைத் தவிரத் தாயார்க்கோ வீட்டினிலே
நம்ப ஒரு சொந்தம் யாருமில்லை ஆகையினால்
பொம்மைக்கார் வான்கள் புதுச்சட்டை எல்லாமே
தேவைக்கு மிஞ்சித் தேடிக் கொடுத்துள்ளார்.
சேவைக்கு ஆள்கள் சிக்கன் புரியாணி
யாவும் இருக்க; யாழ்நகரை வலம்வருதல்
பாவம் தம்பிகளின் படுகடினத் தொழிலாச்சு!

தாயார்க்கோ கொஞ்சம் தடிப்பு ஆண்மூப்பு
ஏய்! என்று மிரட்ட எவருமில்லை; புருஷனுந்தான்
போய்விட்டார்; பின்தான் பிடித்த பிடிதானே
வாய்பொத்தி தன்பின் வளையவரும் பிள்ளைகளை
நாய்போலக் கருதியிவர் நற்சலுகை வீசிடுவார்.

மூத்தபொடி மட்டும் முறைத்தான்; தாயாரைப்
பார்த்து எதிர்க்கேள்வி கேட்டுப் பகைத்தான்
வார்த்தை தடிக்கவே வலுதூரம் போய்வாழ்ந்தான்
வேர்த்ததாய் தம்பிகளை வீணாய்ப் பகைப்பதில்லை.

சும்மா தெருக்களினைச் சுற்றிவந்த பிள்ளைகளுக்கு
அம்மா சொல்லிவிட்டார்; அடுத்தமுறை பரீட்சைக்கு
குந்தாமல் மாக்ஸைக் கூட எடுக்காமல்
வந்தாலோ வீட்டு வாசலிலே நாய்மறிக்கும்.

பந்திஇலை; உணவுப் பரிமாறல் நீற்றாகச்
சந்தியிலே நின்று சையிற்றடிக்கடிக்கும் சுகமெல்லாம்
எக்ஸாம் எடுக்காட்டி இனிக்கிடைக்க மாட்டாதாம்
ஸ்ரிக்டாகத் தாய்சொன்னார்; சிலித்தார்கள் தம்பிகளும்.

மம்மி இதுசரியா? மாஸ்ரர்மார் ''சிலபஸ்ஸை''
இன்னும் முடிக்காமல் இடம்பெயர்ந்து போய்விட்டார்
பின்னக் கணக்கில்!? ''பிரித்தலினை''? மட்டும்தான்
அன்னாய்நீ கற்பித்தாய் அய்யோநாம் என்செய்வோம்?

பின்னச் சரிபெடியள் படிப்புமக்குப் பூராட்டில்
அண்ணாவைப் போல்நீரும் அயல்நாட்டில் பனிகொட்ட
தன்னுடலை வருத்தித் தவமிருத்தல் போலுழைத்தல்
உங்களுக்கும் நலம்பின்பு உம்முடிவு இனியென்றாள்.


ஐயோடி அம்மாகேள் அதுகஷ்டம் குளிர்கூட்டில்
கையால் உழைத்துண்ணல் கடினம் வலுகடினம்
செய்கிறோம் எக்ஸாம்; சிலவேளை பாஸாவோம்
இல்லாட்டித் தாயே நீயுள்ளாய் உந்தன்
செல்வாக்கைக் காட்டிச் ''சீஎக்ஸா மினர்மாரை''
பொல்லாப்பை விட்டுவெறும்பொம்மைகளாய் இருக்கச்செய்.
நல்லபெறுபேறு நாமெடுப்போம் நிச்சயமாய்;
வல்லவளே! உன்பாதம் வணங்குகிறோம் என்றனரே.

தெருவழியே நான்போகச் செவிமீது வீழ்ந்ததிது
புருடாக் கதையில்லை; போனமுறை வந்தரெஸ்ரில்
நூறெடுத்த பெடியளென நூதனமாய் ஊர்கதைச்ச
செய்தி உடனெந்தன் சிந்தனைக்கு வந்ததடா
''பேயாளும் ஊரில் பிணம்தின்னும் சாத்திரங்கள்''
வாய் தவறிநான்சொன்ன, வார்த்தைசெவி வீழ்ந்ததனால்.
தாய்வெளியில் வந்தாள் தகித்து.

— ச. முகுந்தன்.

# ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடும் நவீன ரயில்கள்!

வெளிநாடுகளில் ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடும் குட்டி ரயில்கள் 'மோனோ ரயில்கள்' மிகவும் பிரபலம். வளர்ச்சி அடைந்த பல நாடுகளிலும் பயணிகள் போக்குவரத்தில் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிக்க இதுபோன்ற ரயில்கள் அதிக எண்ணிக்கையில் அதிக வழித் தடங்களில் பயன்படுத்தப்படுகின்றன.



பொதுவாக மோனோ ரயில்களில் டி.சி.(நேரோட்ட மின்சாரம்) மோட்டார்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் முதன் முறையாக 'செவர்ன் லாம்ப்' நிறுவனம் ஏ. சி. (ஆடலோட்ட மின் சாரம்) மோட்டார்களைப் பயன்படுத்தி ரயில்களை இயக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டறித்துள்ளது. ஏ. சி. மோட்டார்களைப் பயன்படுத்துவதால் அதிகத் திறனைப் பெறலாம். பராமரிப்பும் அதிகம் தேவை இல்லை. மேலும் டி. சி. மோட்டார்களுக்கு ஆகும் செலவில் 12.5 சத வீதம்தான் இதற்கு ஆகும் என்கிறது இந் நிறுவனம்.


புதிய தொழில் நுட்பத்தின் 'மோனோ ரயில்' தயாரிப்பில் புதிய தொழில் நுட்பத்தை வடிவமைத்து சாதனை படைத்துள்ளது இங்கிலாந்தைச் சேர்ந்த 'செவர்ன் லாம்ப்' நிறுவனம் பயனாக இதுபோன்ற ஏ. சி. மோட்டார்கள் பொருத்தப்பட்ட மோனோ ரயில்களைத் தயாரிப்பதற்கான 4 கோடி பவுண்ட் மதிப்புக்கான ஓடரைப் பெற்றுள்ளது. மலேசியாவில் உள்ள சனவே நகரில் இயங்கும் ரயில் போக்குவரத்துக்காக 120 பயணிகள் மோனோ ரயிலைத் தயாரித்து அளித்துள்ளது. குறைந்த செலவில் அதிகத் திறன் கொண்ட மோட்டார்களைத் தயாரிப்பதால் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் உள்ள மோனோ ரயில் தயாரிப்பாளர்களுடன் போட்டியிடும் அளவுக்கு இந்நிறுவனம் வளர்ந்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான், தூரக்கிழக்கு நாடுகளுடனும் புதிய தொழில் நுட்பத்துடன்கூடிய மோனோ ரயில்களைத் தயாரித்து அளிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

## ரயிலை மிஞ்சும் புறாக்கள்

புறாக்கள் எவ்வளவு வேகமாகப் பறக்கின்றன? கல்கத்தாவில் புறாக்களுக்கான பந்தயம் ஒன்று நடக்கிறது. சமீபத்தில் டில்லியிலிருந்து கல்கத்தாவுக்கு இடையே உள்ள தூரத்தை 'காஸெண்ட்ரா' என்ற இனப் புறாக்கள் 17 மணி நேரத்தில் சென்றடைந்தன. இத்த இரண்டு நகரங்களுக்கு இடையே செல்லும் ராஜதானி கடுகதி ரயிலை விட இந்தப் புறாக்கள் பத்து நிமிடங்கள் முன்னதாகவே சென்றடைந்து விட்டனவாம்.

## அடேயப்பா... என்ன சுகம்!

43 வயதான அமெரிக்கப் பெண்மணி லோரெட்டா ஆடம்ஸுக்கு ஒரு விநோதமான ஆசை —எப்படியாவது தன் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டுமென்று! அதற்காக அவர்



நகங்களை வெட்டாமல் வளர்க்க ஆரம்பித்தார். நகங்களால் அவர் பெரும் அவதியுற்றார். மருத்துவர் எச்சரித்தார் — நகங்களை உடனடியாக வெட்டிவிட வேண்டும் என்று. வேறு வழியில்லாமல் சென்ற ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிதான் அரும்பாடுபட்டு வளர்த்த நகங்களை வெட்டியெறிந்தார். 27 ஆண்டுகளாக இல்லாத சுகம் அன்றைக்கு தன் நகங்களால் உடல் முழுவதும் ஆனந்தமாகச் சொறிந்து கொண்டாராம் ஆடம்ஸ்!

## நாயன்மார் படும்பாடு

புதுவை ஸ்ரீ காளத்தீஸ்வர வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் நாயன்மார்கள் அறுபத்துமூவரின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்களின் வேண்டுதல்களையும், நிறைவேறாத எண்ணங்களையும் அங்கு எழுதி விட்டுச் செல்வது வழக்கம்.

அவற்றில் சில வருமாறு:-

★நான் இந்த நாட்டை ஆள வேண்டும்.
★நல்ல மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற வேண்டும்.
★எனக்குக் கல்யாணம் ஆக வேண்டும்.
★நான் என் பழைய வீட்டை வாங்கவேண்டும்.
★எங்களை எதிர்ப்பவர்கள் அழிய வேண்டும்.
★தர்மமே வெல்லவேண்டும்.
★நானும் என் வகுப்பு மாணவர்களும் 400 – க்கு மேல் மதிப்பெண்பெற்று முழு ஆண்டுத் தேர்வில் நான் பரிசு வாங்கவேண்டும்.
★என் கணவரின் தொழில் நன்கு நடக்க வேண்டும்.
★எனக்கு ஆண் குழந்தை பிறக்க அருள்புரிய வேண்டும்.
★நான் சொந்த வீடு வாங்க வேண்டும்.
★என் இரண்டு நாத்தனாருக்குக் கல்யாணம் இந்தத் தை மாதத்தில் நடக்க அருள்புரிய வேண்டும்.
★இவற்றை விட இன்னும் காதலர்களின் ஏக்க மொழி வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன.

## நான்கு சிறுநீரகங்கள்

பீஜிங்கைச் சேர்ந்த ஒரு டாக்ஸி டிரைவர் மருத்துவப் பரிசோதனைக்காகச் சென்றிருந்தார். அப்போது அவருக்கு நான்கு சிறுநீரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உபரியாக இருக்கும் இரண்டு சிறுநீரகங்களால் அவருக்குப் பயன் ஏதும் இல்லை என்றும் அவற்றால் நீரிழிவு போன்ற வியாதிகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகலாம் என்றும் மருத்துவர்கள் கூறினார்களாம்.

## காஷ்மீரில் குங்குமப்பூ!

ஈரானில் இருந்து தரம் குறைந்த குங்குமப் பூ இறக்குபதி செய்யப்படுவதாலும், உற்பத்தி குறைந்ததாலும் காஷ்மீரின் குங்குமப் பூத் தொழில் பெரும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த ஆண்டில்காஷ்மீரின் குங்கும உற்பத்தி அளவு 10,000கிலோ முதல் 1,5000 கிலோ வரை இருந்து. ஆனால் நடப்பாண்டில் உற்பத்தி அளவு வெறும் 500 முதல் 600கிலோமாத்திரமே.

இந்தியாவைப் பொருத்த வரை காஷ்மீரில் மட்டுமே குங்குமப் பூ விளைகிறது.

## கண்தானம்...

(XI ஆம் பக்கத் தொடர்)

★ ''கற்றறாக்ற்'' காரணமாகப் பார்வை குறைந்தவர்களது கண்களும், இதற்கான சத்திரசிகிச்சை செய்தவர்களது கண்களும் கூட கண்தானத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

★ மிகு முதுமை அடைந்தவர்களின் கண்களும் கண்தானத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

★ பின்வரும் காரணங்களால் இறந்தவர்களின் கண்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. (அ) காசநோய் (ஆ) புற்றுநோய் (இ) 'எயிட்ஸ்', மூளைக் காய்ச்சல், கொப்பளிப்பான், செங்கண்மாரி, விசர்நாய்க்கடி — விலங்கு விசர் போன்ற வைரசு நோய்கள் (ஈ) பாம்புக்கடி (உ) விஷம் அருந்துதல், பயங்கர எரிகாயங்கள்.

உங்கள் மரணத்தின் பின் உங்கள் கண்களால் உலகத்தைப் பார்க்க விரும்பினால் நீங்கள் இறந்ததும் உங்கள் கண்களைத் தானம் செய்யுமாறு உறவினர்களிடம் சொல்லி வையுங்கள்.

இறந்த உறவினரின் கண்ணை இன்னொருவரது உடலில் தொடர்ந்து பார்க்க விரும்பினால் அவர்கள் இறந்ததும் அவர்களது கண்களைத் தானம் செய்யுங்கள்.

இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் இறப்பவர்களுள் யாழ். போதனா வைத்திய சாலையில் இறப்பவர்களுக்கு மட்டுமே கண் தானம் செய்யும் பாக்கியம் கிட்டும்.

பார்வை கொடுப்போர் பரன் அருள் பெறுவர்.

## ஊன் உண்ணும்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

நுட்பமான பார்வையுடையவை. நீண்ட தொலைவு பார்க்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.

கழுகின் கால்களும், நகமும், அலகும் வன்மையானவை. பெரிய கழுகுகள் ஆட்டுக்குட்டியையும் தூக்கிச் செல்லும் ஆற்றலுடையவை. கழுகின் கால்களுக்கு அவ்வளவு வலிமையுண்டு. சில கழுகுகள் சிறு குழந்தைகளையும் தூக்கிச் சென்று விடுமாம். கழுகின் அலகு கூர்மையாக இருக்கும். இது எலும்பில் இணைந்திருக்கும் ஊனையும் கொத்தி இழுக்கும் தகுதியுடையது.

பிணமென்றால் கழுகுக்குப் பெருவிருப்பம். எங்கேயாவது நாயோ, நரியோ இறந்து கிடந்தால் கழுகு மோப்பத்தாலேயே அதனை அறிந்து கொள்ளும். ஒரு கழுகு ஊன் உண்ண வந்தால், எப்படியோ பிற கழுகுகளும் அதனை அறிந்து, அங்கு வந்து கூடிவிடும்.

கழுகுகளைக் [illegible] கழுகு இறைச்சி [illegible]பவர்களும் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலைவனத்தில்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஐ. நா. தீர்மானத்துக்கு எதிராக, தங்கள் நாட்டின் குர்திஷ் இன மக்கள் மீதே இரசாயன மற்றும் நுண்ணுயிர் ஆயுதங்களை (Chemical and Biological Weapons) பிரயோகித்து ஆயிரக்கணக்கான அப்பாவிகளைக் கொன்றிருக்கிறது ஈராக். இந்த உலகம் அழிகிறவரை மறக்க முடியாத சோகம் அது. வளைகுடாப் போருக்குப் பின்னர் 30—க்கும் அதிகமான ஆயுதக் கிடங்குகள்... எதிர்க்கும் நாடுகளின் அப்பாவிப் பிரஜைகளைக் குறிவைத்துக்கொல்லும் பொட்டுலினம், ஆந்த்ராக்ஸ் போன்ற கொடுமையான விஷக் கிருமிகளைப் பரவவைக்க ஒரு தற்கொலைப்படை... என்று யுத்த தருமங்களை மீறிய ஆயுதங்களைத் தயாரித்து வைத்திருக்கிறது ஈராக். எனவே, ஈராக்குக்கும் சதாமுக்கும் மீண்டும் ஒரு பாடம் புகட்ட அனைவரும் உதவ முன்வந்தே ஆகவேண்டும் என்கிறது அந்த அமெரிக்க அறிக்கை.

இதற்கிடையில் ஒரு வார இழுபறிக்குப் பின்னர், அமெரிக்கர்கள் உட்பட அனைவரையும் கொண்ட குழுவைப் பரிசோதனை செய்ய அனுமதியளித்து தடாலடியாக ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார் சதாம்.

''இந்த ஒரு வார அவகாசத்தில் அபாய ஆயுதங்களைப் படுரகசியமான மறைவிடங்களில் பத்திரப்படுத்திவிட்டது ஈராக். எனவே, இனி எவ்வளவு காலமானாலும் சரி, நூற்றுக்கு நூறு சதவிகிதம் அதனிடம் நர்சகார ஆயுதங்கள் இல்லையென்று, பரிசோதனைக் குழு அறிக்கை தரும் வரை ஈராக் மீதான தடை தொடரும். எல்லையில் குவிக்கப்பட்டுருக்கும் படைகளும் அங்கேயே நிற்கும்'' என்று சொல்லிவிட்டது அமெரிக்கா.

ஈராக்—அமெரிக்கா இருவரில் யார் பலசாலி?

கேட்க ரொம்ப வேடிக்கையாக இருந்தாலும்ஓர் ஒப்பீடு இதைச் சுலபமாக விளக்கும்.

வீரப்பனுக்கும் தமிழக அரசுக்கும் இடையே நடக்கும் போராட்டம்தான் அங்கேயும். தமிழக அரசு படைகளின் பலத்தை ஒப்பிடும்போது, வீரப்பனின் பலம், எப்படிப் பக்கத்தில்கூட வர முடியாதோ, அப்படித்தான் ஈராக் பலமும்! தங்களிடம் என்னவெல்லாம் படை பலம் இருக்கிறது என்று நாள்தோறும் பத்திரிகைக்கு அமெரிக்கா தருகிற பட்டியலைப் பார்த்தாலே உடம்பு நடுங்குகிறது.

அமெரிக்காவின் பலத்தில் இரண்டு சதவிகிதம் கூடத் தேறாது ஈராக்கின் பாரக்கிரமம். இருந்தாலும், தான் இருக்கிற இடத்தில் இருந்தபடி, எதிரியை தன்னை நோக்கி வரவழைப்பதன் மூலம் ஈராக்கின் பலம் கூடுகிறது. அமெரிக்காவிடம் இல்லாத அளவுக்குத் தனி மனிதராக பலதந்திர வேலைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார் சதாம். கூடவே, தன்னைப் பிடிக்கிறேன், ஒழிக்கிறேன் என்று சவால் விட்டுக்கொண்டே முக்கியப் பிரச்சினைகளை அமெரிக்கா திசை திருப்புகிறது என்று சதாமே குற்றம் சாட்டுகிறார்!

வீரப்பன் காட்டில் புதைத்து வைத்திருக்கிற கண்ணிவெடி மாதிரிதான் ஈராக்கின் இரசாயன மற்றும் நுண்ணுயிர் ஆயுதங்கள், அமெரிக்காவை அலற வைக்கிறது.

போர் வீரர்களை மட்டுமல்லாது... காற்றிலும், நீரிலும், உணவுப் பொருள்களிலுமாகப் பரவி, ஒரு சில மில்லிகிராம் அளவுகளில் லட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களையும் ஒரே நேரத்தில் கொன்று குவிக்கும் திறன் கொண்டவை இந்த ஆயுதங்கள். தங்கள் நாட்டுக்குள் அமெரிக்கப் படை ஊடுருவினால், தங்கள் மக்கள் சாவது பற்றிக்கூட கவலைப்படாமல் சதாம் இவற்றைப் பிரயோகிக்கக் கூடும்.

ஐக்கிய நாடுகள் சபை இவ்வகை ஆயுதங்களைத் தடை செய்திருந்தாலும் சீனா, லிபியா, வடகொரியா, ஈராக் உட்பட சுமார் 16 நாடுகள் தங்களிடம் இது போன்ற ஆயுதங்கள் இருப்பதாகப் பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றன. 1995 ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் ஒரு மதவெறியாளன் சுரங்க ரயில் நிலையம் ஒன்றில் விஷ வாயு மூலம் பலரைக்கொன்ற உதாரணம், எதிர்பார்க்கப்படுகிற பயங்கரத்துக்கே ஒரு துளி உதாரணம்!

இன்றைய தேதிப்படி ஈராக்கிடம் சுமார் 8 ஆயிரம் லீற்றர் ஆந்த்ரக்ஸ் என்ற விஷ பாக்டீரியா கிருமியும், 20 ஆயிரம் லீற்றர் பொட்டுலினம், டாக்ஸினும் இருப்பதாக ஐ. நா. பரிசோதனையாளர்கள் கற்பூரம் அடித்துச் சத்தியம் செய்கிறார்கள். இவற்றை அப்படியே உபயோகித்தால் உலகின் ஒட்டு மொத்த மனித இனத்தையே துளிகூட ரத்தம் சிந்தாமல் சர்வசாதாரணமாக அழித்துவிடலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

'தன்வினை தன்னைச் சுடும்' என்ற பழமொழிக்கேற்ப, 1980 ஆம் வருடம், தன்னிடமிருந்த அதிகப்படியான ஆந்த்ராக்ஸ் மற்றும் பொட்டுலினம் கிருமிகளை ஈராக்குக்கு வியாபார நோக்கத்தோடு விற்றதே அமெரிக்காதான் என்பது விபரீதமானவேதனையானஉண்மை

அதுமட்டுமல்ல 1994 ஆம் வருடம் ஈராக்கில் சோதனை மேற்கொண்ட குழுவினரிடம் சுமார் 50 ஆயிரம் கிலோ கிராம் VX என்ற இரசாயன விஷப் பொருள் 'ஸ்டாக்' இருப்பதாக ஈராக்கே ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்தப் பதற்றச் சூழலில் அதைச் சுட்டிக்காட்டி ''இப்போது பொய் சொன்னால் எப்படி?'' என்றுகேட்டபோது...

''ஓ...அதுவா... மருந்துகள் தயாரிக்க ஐயாயிரம் கிலோதான் இறக்குமதி செய்தோம். 'டைப்' செய்த 'கிளார்க்' தவறுதலாக ஒரு சைபரைச் சேர்த்து விட்டார்!'' என்று 'அத்தை—பாட்டி' கதை சொல்கிறார் சதாம். இதுதவிர விஷவாயுக்களடங்கிய ஏவுகணைகள், பலூன்களையும் தயாரித்து வைத்திருக்கிறது ஈராக். இவை காற்றில் பரவினால், சுவாசிப்பவர்கள் மூச்சுத் திணறி, இறந்துபோக நேரிடும். இவ்வவை விஷங்களின் மூலப்பொருள்களைத் தனித்தனியாக எடுத்துச் சென்று, தேவையானபோது எளிதாகச் சேர்த்து ஆயுதமாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதனால் இவற்றைக் கடத்துவதும் எளிது.

''இந்தமாதிரி ஈராக்கின் ஒரு தற்கொலைப்படை ஏற்கெனவே நியூயார்க் உட்பட அமெரிக்காவின் முக்கிய நகரங்களுக்குச் சென்று முகாமிட்டுவிட்டது. போர் மூண்டு ஈராக்கின் பொதுமக்கள் அநியாயமாகச் சாகநேரிட்டால், இந்தத் தற்கொலைப் படையினர் அமெரிக்கர்வில் பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பார்கள்'' என்று வேறு பயமுறுத்துகிறார் சதாம்.

அந்தஅறிக்கை தந்த பேதி காரணமாக அமெரிக்கா மேலும் வெலவெலத்து இருக்கிறது. விஷ வாயு தற்கொலைப் படை ஏதாவது பயங்கரம் செய்துவிட்டால், அமெரிக்க மக்களை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என உள்நாட்டு இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்க ஆரம்பித்துவிட்டது அமெரிக்கா.


காற்றுப் புகாத நவீன உடல்மூடிகளுடன் அமெரிக்க வீரர்கள் திரும்பத் திரும்ப மீட்புப்பணி 'டெமான்ஸ்ட்ரேஷன்' செய்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நன்றி:- ஜூ. வி.

## விடைகள்


III. ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர்பகுதியில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### முயன்று பாருங்கள்




2. அறுபது வயது.


3.



### செய்து பாருங்கள்







### உங்களால் முடியுமா?

அ) பாரதி.
ஆ) குண்டுமல்லிகை.
இ) கடகம்.
ஈ) கறிவேப்பிலை.
உ) உதயன்.

### வார்த்தை விளையாட்டு

பாலை, சாமம், மண், விதம், தலை, பாதம், சாதம், மதம், விசம், தம், பாவி, சாண், மதலை, தசம், சதம், பாசம், சாவி, விலை, தண், சபா, சாலை, மலை, விண், தவி, சமம்.

### கண்டு பிடியுங்கள்

1) 459+265=724
2) 27×21=567
3) 789—235=554
4) 924—698=226
5) 3×3×3×3×3×3 =729
6) 655×7 4585
7) 512×21=10752
8) 99×58=5742
9) 124×69 8556
10) 27×158=4226
11) 26×32×17=22464
12) 3684÷56=658
13) 7×7××7×7=2401
14) 10485÷45=233
15) 11289+2567 =1385
16) 1560÷65=24
17) 29340÷45=652
18) 63×12×29=21924
19) (21+6)×(17+8) =675
20) (42+6)÷(4+8) =4
அல்லது
(42+2)÷(3+8)=4

2) காலடிச் சுவடு புதிருக்கு விடை:-
1—B, 2—C 3—A, 4—D.

# மிதிவெடிகள் கவனம்...!

சமூக, சுகாதார சேவையாளர்களுக்கான காலாண்டு சஞ்சிகையான 'சுகமஞ்சரி' இதழில் 1997 ஆடிமாதப் பதிப்பில் வெளியான ஆசிரிய தலையங்கம் இது.

இன்று பாவிக்கப்படும் போர் உபகரணங்களுள் போர் முடிந்த பின்பும் நீண்ட காலத்திற்கு பொதுமக்களை பாதிக்கக்கூடிய போர் உபகரணம் மிதிவெடியாகும்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி இன்று உலகில் 11 கோடி மிதிவெடிகள் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளன. இன்னும் 10கோடி புதைப்பதற்கு தயாராக இருப்பில் உள்ளன.

பதினேழு நாடுகளில் மிதிவெடி ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. அதில் ஒன்று நமது நாடு. இங்கு மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் முழுத்தொகை திட்டவட்டமாக யாருக்கும் தெரியாது.

கடந்த 10 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஜெய்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையில் 1500 இற்கும் மேற்பட்ட செயற்கைக்கால்களும், 90 இற்கும் மேற்பட்ட செயற்கைக் கைகளும் பொருத்தப்பட்டுள்ளன. மிதிவெடிகளின் காரணமாக கால்களை இழந்த 797பேர் இவர்களுள் அடங்குவர். இவர்களைவிட ஆயிரக்கணக்கானோர் விரல்களை இழந்து, பாதங்களை இழந்து உடலில் பல பாகங்களில் காயம் ஏற்பட்டும் இறந்தும் உள்ளார்கள். இதைவிட இராணுவத்திலும் போராளிகளிலும் எத்தனையோ பேர் கால் கைகளை இழந்துள்ளார்கள். இவர்களைப் பற்றி முழுமையான விவரங்கள் எமக்குத் தெரியா.

ஆனால் ஒன்று மட்டும் எமக்கு நிச்சயமாகத் தெரியும். மிதிவெடிகளினால் உடல் உறுப்புக்களை இழக்கும் நிலைமை, யுத்தம் ஓய்ந்தாலும் அடுத்த சந்ததி வரை தொடரும். ஏனெனில் நிலத்தில் புதைக்கப்பட்ட சில மிதிவெடிகள் 50 வருடங்கள் வரைதொழிற்படக் கூடிய வல்லமை வாய்ந்தவை.

எதிரியை ஊனமுறச் செய்ய வேண்டும் என்ற இலக்குடனே போரில் ஈடுபட்டிருக்கும் இருபகுதியினராலும் மிதிவெடிகள் புதைக்கப்படுகின்றன. ஆனால் இந்த மிதிவெடிகளினால் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறவர்கள் அப்பாவிப் பொதுமக்களே.

மிதிவெடிகளினால் பாதிக்கப்படுகிறவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பிள்ளைகள். உலகில் 12 பிள்ளைகளுக்கு ஒரு மிதிவெடி வீதம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் மதிப்பிடுகிறது.

பிள்ளைகள் விரைவாக வளர்வதனால் அவர்களுக்குப் பொருத்தப்படும் செயற்கைக் கால்களை 6 மாதங்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டியிருக்கும். அது மட்டுமன்றி காலையோ ஒரு பகுதியையோ இழந்த பிள்ளைகள் வெட்கப்பட்டு சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் ஒரு நிலையும் உருவாகும். பாதிக்கப்பட்ட பெரும்பாலான பிள்வைகள் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்திக் கொள்கிறார்கள். ஆகவே மிதிவெடிகள் பாரிய சமூக சுகாதார பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

1995 இறுதியில் யாழ்ப்பாண மக்கள் தமது வீடுகளை விட்டு. வெளியேறி அகதிகளாக வாழ்ந்து 1996 ஏப்பிரல் மாதமளவில் தங்கள் வீடுகளுக்குத் திருப்பினார்கள். 1996 மே மாதம் முதல் 1997 ஏப்பிரல் வரையான ஒரு வருட காலத்தில் 290 பேர் யுத்த காயங்களினால் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுள் 70 வீதமானவர்கள் மிதிவெடி உட்பட ஷெல் காயங்களினால் பாதிக்கப்பட்டவர்கள்.

இதே காலத்தில் 203 பேரின்சடலங்கள் யாழ்.வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டன. அதாவது வாரத்திற்கு 5 சடலங்கள் வீதம் கொண்டுவரப்பட்டன.இவற்றுள் 65 வீதமானவர்களின் மரணத்திற்கு காரணமாக இருந்தது மிதிவெடி உட்பட ஷெல் காயங்களே.

தற்போது யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்கள் பல வருடங்களின் பின தங்கள் கிராமத்திற்கும் வீடுகளுக்கும் போக இருக்கிறார்கள். அவர்கள் திரும்பும் கிராமங்களில் போர் நடந்திருப்பின் அல்லது போர்களில் ஈடுபட்டவர்கள் தங்கியிருப்பின் அங்கு மிதிவெடிகளும் வெடிக்காத ஷெல் முதலியனவும் இருக்கலாம். இவை வெடித்துச் சிதறக்கூடியவை.

ஆகவே அங்கு செல்லும் மக்கள்—

★ மிதிவெடிகள் இருக்கக் கூடிய இடங்களை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

★ மிதிவெடிகள் மற்றும் வெடிக்கும் கருவிகளை அடையாளம் காணும் ஆற்றலையும் பெற்றிருத்தல் அவசியம்.

★ அப்படியான மிதிவெடிகள் மற்றும் வெடிக்கும் கருவிகளைக் கண்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிந்திருக்க வேண்டும்.

சுகாதார ஊழியர்கள் அனைவரும் மிதிவெடிகள் பற்றி முழு அறிவினைப் பெற்று பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது அவர்களை பாதுகாப்பதற்கான அறிவை வளர்ப்பதற்குஉதவ வேண்டும்.

மிதிவெடிகள் பிரச்சினையாக உள்ள பகுதிகளில் நடைபெறும் சிகிச்சை நிலையங்களிலும் மாதர் சங்கம், கிராம முன்னேற்றச் சங்கம் முதலியவற்றிலும் பாடசாலைகளிலும் கருதரங்குகள் நடத்த வேண்டும். சுகாதார ஊழியர்கள் அனைவரும் முக்கியமாககுடும்பநலசேவையாளரும் சுகாதாரப்பரிசோதகர்களும் இந்த பணியைச் செய்யவேண்டும். ★

# தேர்தல் திணைக்கள...

(II ஆம் பக்கத் தொடர்)

நாங்கள் சென்று பிரசாரம் செய்ய முடியுமா? ஈ. பி. டி. பியும் அங்கு தேர்தலில் போட்டியிடுகின்றது. அதற்கு எதிராக அங்கு ஜனநாயக முறையில் பிரசாரம் செய்ய முடியுமா? — என்று ஏனைய கட்சிகள் கவலைப்படுகின்றன.

ஆனால் —

''தேர்தல் பிரசாரத்துக்கு எந்தக் கட்சியினரும் எந்த அமைப்பினரும் அங்கு செல்லலாம் — ஆயுதங்கள் இல்லாமல் — எமது அலுவலகத்துக்கு அறிவித்து விட்டு அவர்கள் நெடுந்தீவுக்குள் செல்லலாம்; சுதந்திரமாகப் பிரசாரம் செய்யலாம். அதற்கு தடை ஏதுமில்லை: நாம் தடை விதிக்கவும் மாட்டோம் ஆனால் எமது கட்சியைச் சேர்ந்தோர் எமது கட்சியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் எம். பிக்கள் அங்கு செல்வதற்கு எமது அமைப்புடன் ஏற்பாடு செய்ய வேண்டும்'' — என்று கூறினார். ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாரத்தில் ஈடுபடும் சோனியாவின் முடிவு படுதோல்வியிலிருந்து கட்சியை காப்பாற்றுமா?

## காங்கிரஸிலிருந்து வெளியேறியோர் திரும்பி வருவதற்கு வாய்ப்பு இல்லை

எதிர்வரும் தேர்தலில் காங்கிரஸுக்காக பிரசாரம் செய்வதற்கு சோனியாகாந்தி இணக்கம் தெரிவித்து விட்டார்.

இது குறித்து தற்பெழுது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாத இறுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட கையோடு, காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு சோனியாவிடம் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி கோரிக்கை விடுத்திருந்தார்.

சோனியாவின்பிரசார இயந்திரத்தைப் பயன்படுத்தி ராஜீவ்காந்தியின் அனுதாப அலையை சம்பாதித்து தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று சீதாராம் கேசரி நம்பினார்.



குஜ்ரால்

ஆனால் அவர் எதிர்பார்த்ததுக்கு மாறாக சோனியா தலைமைப் பதவியை ஏற்பதற்குப் பின்னடித்தார். தேர்தல் பிரசாரங்களிலும் கலந்து கொள்ளத் தயக்கம் காட்டினார்.

இதன்னை அடுத்து கடந்த சில வாரங்களில் பல மாநிலங்களில் காங்கிரஸ் பிளவுபட்டது. காங்கிரஸுக்கு எதிராக பலமான கூட்டணிகளும் உருவாகின. முன் எப்போதும் எதிர் நோக்காத பெரும் நெருக்கடிக்கு காங்கிரஸ் முகம் கொடுக்கும் நிலை உருவாகியது. வரலாறு காணாத தோல்வி எதிர்பார்க்கப்பட்டது.

இப்படியான நிலையிலேயே காங்கிரஸுக்காகப் பிரசாரம் செய்வதற்கு சோனியா தற்பொழுது இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும் சோனியாவின் பிரசாரம் மூலம் படுதோல்வியில் இருந்து காங்கிரஸை காப்பாற்ற முடியும்என்றும்—

பத்தியில் பாரதீய ஜனதாக்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறுவதைத் தடுக்க முடியும் என்றும் காங்கிரஸ் தலைவர்கள் நம்புகின்றனர்.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையை வைத்தே காங்கிரஸ் கட்சி குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்தது.

தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்து அறுதிப் பெரும்பான்மையுடன் பாரதீயஜனதா ஆட்சி அமைக்கும் பட்சத்தில் ஜெயின் கமிஷன் அறிக்கை கிடப்பில் போடப்பட்டுவிடும்என்பது சோனியாவுக்குத் தெரியும்.

ஒன்றில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடிக்கவேண்டும்; தவறினால் முன்னர் ஐக்கிய முன்னணி அரசு இருந்தது போன்று காங்கிரஸின் ஆதரவுடன் மத்தியில் ஓர் அரசு இருக்க வேண்டும் என்பதே காங்கிரஸ் தலைவர்களின் விருப்பம்.

பெப்ரவரி இறுதியில் அல்லது மார்ச் முற்பகுதியில் நடைபெற உள்ள தேர்தலில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற வாய்ப்பு இல்லை என்று இது வரை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. எனினும் தனித்து பாரதீய ஜனதாக்கட்சியே கூடுதல் ஆசனங்களைப் பெறும் என்றும் கூறப்படுகிறது.

### தற்பொழுது வீசுவது பாரதீயஜனதா அலையா?

ஆனால் இந்தியாவின் வடக்கில் இருந்து தெற்குக்கும் மேற்கில் இருந்து கிழக்குக்கும் பாரதீய ஜனதா அலை வீசுவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எல். கே. அத்வானி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.


1977 தேர்தலில் ஜனதாக் கட்சிக்கு ஆதரவாக இப்படியான ஓர் அலை இருந்தது உண்மையே.

அந்தத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்து முதல் தடவையாக இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத அரசு ஏற்பட்டது.

ஆனால் தற்பொழுது ஏற்பட்டிருப்பது பாரதீய ஜனதா ஆதரவு அலை அல்ல. காங்கிரஸ் எதிர்ப்பு அலை என்றே கூறலாம்.

### இலங்கைப் பிரச்சினையில் கொள்கை மாறலாம்

தேர்தலில் வெற்றி பெறுவதை ஒரே நோக்கமாகக் கொண்டு பாரதீய ஜனதா, எவரும் எதிர்பாராத விதத்தில் கூட்டணிகளை அமைத்



எல். கே. அத்வானியும் வாஜ்பாயும்

துக் கொண்டுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

பாரதீய ஜனதாவின் கூட்டணிக் கட்சிகளை நோக்கும் போது பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருமானால் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் மட்டும் அல்ல வெளிநாட்டு விவகாரங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழலாம்.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் அண்ணா தி. மு. கவுடனும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பாட்டாளி மக்கள் கட்சியுடனும் மறுமலர்ச்சி தி. மு. க. வுடனும் பாரதீய ஜனதா கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளது.

மேற்கு இந்திய மாநிலமான மகாராஷ்டிரத்தில் பால்தக்கரே தலைமையிலான சிவசேனாவுடன் அதற்குக் கூட்டணி உண்டு.

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைமையிலான சமதா கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியுடனேயே கூட்டணி அமைத்துள்ளது.

அரசு விதித்த தடைகளையும் மீறி கடந்த மாதம் புது



கேசரி

டில்லியில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூட்டியிருந்தார்.

தமிழ் நாட்டில் பாரதீய ஜனாத கூட்டணியில் அங்கம் வகிக்கும் அண்ணா தி.மு.க. தலைவி ஜெயலலிதா 1991—1996 ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகள் எதிர்ப்புக் கொள்கையை தீவிரமாகக் கடைப்பிடித்தார்.

அப்பொழுது மத்தியில் பதவியில் இருந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசின் கொள்கையும் அதுவாகவே இருந்தது.

ஆனால் தற்பொழுது பாரதீய ஜனதாவை உள்ளடக்கி தமிழ் நாட்டில் உருவாகி உள்ள கூட்டணி முன்னைய அரசியல் நிலையைத் தலைகீழாக மாற்றிவிடக் கூடியது.

[illegible] குச் செல்லவும் தயார் என்பதை ஜெயலலிதாவின் தற்போதைய நடவடிக்கைகள் கோடி காட்டுகின்றன.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பாரதீய ஜனதாக் கட்சி மென்மையான போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

1980 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் ஈழத்தமிழருக்கு ஆதரவான மாநாட்டை கருணாநிதி கூட்டிய போது, பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வாஜ்பாய்சென்னை வந்து அதில் கலந்து கொண்டார்.

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள கூட்டணி, மகராஷ்டிரத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவான சிவசேனாவுடன் ஏற்பட்டுள்ள கூட்டணி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைமையிலான சமதா கட்சியுடன் ஏற்பட்டுள்ள கூட்டணி ஆகியவை பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு மாறுபடும் என்பதைக் கோடி காட்டுகின்றன.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களை தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே காங்கிரஸ் கட்சி குஜ்ரால் அரசைக் கலைத்தது. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல், பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருமானால் ஜெயின் கமிஷன் அறிக்கையே குப்பைத் தொட்டிக்குள் போய் விடும்.

அத்துடன் காங்கிரஸ் தலைவர்கள் பலர் ஊழல் குற்றச் சாட்டுக்களில் சிக்கவும் வாய்ப்புண்டு.

### செல்வாக்கு இழந்து வரும் காங்கிரஸ்

1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸே கூடுதல் தடவைகள் வெற்றி பெற்றுள்ளது.

ஆனால் எந்த ஒரு தேர்தலிலும் 50 சதவீத வாக்குகளுக்கு மேல் காங்கிரஸினால் பெற முடியவில்லை.

கடைசியாக 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 29.8 சதவீதம் மட்டுமே.

காங்கிரஸின் தேசப்பற்றையும் தியாகங்ளையும் மதிக்கும் மக்கள் இன்னும் இருந்து வருகிறார்கள். சரியான தலைமையை இழந்த நிலையிலும் காங்கிரஸ் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது இதனால்தான்.

நாட்டு மக்களின் வாழ்வோடு தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்ட பெருமை 112 வருட காலம் பழைமை வாய்ந்த காங்கிரஸ் கட்சிக்கு இருந்தது.

அத்தகைய பெருமை வாய்ந்த கட்சி தற்பொழுது பிளவுபட்ட நிலையில் தள்ளாடுகிறது.

சோனியாவின் தேர்தல்பிரசாரம் ஓரளவு கைகொடுக்கும் என்று காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி கருதுகிறார். தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட சோனியாவை இணங்கவைத்ததே தனக்குக் கிடைத்த பெரியவெற்றி என்று அவர் நினைக்கிறார்.

ஆனால் சமீப நாள்களில் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றவர்களும்—



சோனியா

காங்கிரஸிலிருந்து விலகி போட்டிக் கட்சி அமைத்தவர்களும் திரும்பி வருவார்கள் எனறு நம்புவதற்கில்லை.

### காங்கிரஸின் எதிரி காங்கிரஸே

காங்கிரஸின் எதிரி காங்கிரஸ்தான்.

இதனை ஆரம்பத்திலேயே உணர்ந்து எச்சரித்தவர் மகாத்மா காந்தி. இதனால் தான் சுதந்திரத்துக்குப் பின்னர் காங்கிரஸைக் கலைக்குமாறுஅவர் கோரி இருந்தார்.

சுதந்திரத்தின் பின் முதல் 5 ஆண்டுதிட்டங்களின்போது மாநிலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

ஆனால் அதன் பின்னர் மாநிலங்களில் ஏற்பட்ட சமனற்ற பொருளாதார வளர்ச்சி பிராந்தியக் கட்சிகள் உருவாக வழிவகுத்தது.

பிராந்தியக் கட்சிகள் செல்வாக்குப்பெற ஆரம்பித்த போது மாநிலங்களின் கோரிக்கைகள் என்ன என்பதை காங்கிரஸ் ஆராயத் தவறி இருந்தது.

இன்று மாநிலங்களில் பிராந்தியக் கட்சிகள் தலையெடுத்ததுக்கும் இதன் காரணமாக இந்தியாவில் அரசியல் ஸ்திரமின்மை நிலவுவதற்கும் காங்கிரஸே காரணம் என்று நம்பப்படுகிறது.

ஊழலும் காங்கிரஸ் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

தாராளக் கொள்கையை காங்கிரஸ் பின்பற்ற ஆரம்பித்த பின்னர் 'கமிஷன்' என்ற பெயரில் ஊழல்கள் இடம் பெற்றன.

ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்ட போபோர்ஸ் பீரங்கிப் பேர ஊழலும் இவற்றில் ஒன்று.

பாரதீய ஜனதா ஆட்சிக்கு வரும்பட்சத்தில்எல்லா ஊழல்களும் மீண்டும் கிளறப்படும் போது மேலும் பின்னடைவுகளைச் சந்திக்கப்போவது காங்கிரஸ்தான். ★

உலக உலா
என்.பி.சிலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org